யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 94 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 01 2025


## 16ஆம் ஆண்டு

# வீரவணக்கம்



பிரிகேடியர்

**விதுசா**

கந்தையா ஞானபூரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)



பிரிகேடியர்

**துர்க்கா**

பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகாமம், யாழ்
(24.03.1971 - 03.04.2009)



**முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில்
சிறீலங்கா மற்றும் சர்வதேசப் படைகளின்
நச்சுக்குண்டுத் தாக்குதலுக்கு
இலக்காகி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய
மாவீரர்களுக்கும்
எமது வீரவணக்கத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.**



பிரிகேடியர்

**மணிவண்ணன்**

அழகரத்தினம் துசியந்தன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)



பிரிகேடியர்

**தீபன்**

வேலாயுதபிள்ளை பகீரதகுமார்
கண்டாவளை, கிளிநொச்சி
(08.01.1966 -05.04.2009)



பிரிகேடியர்

**கடாபி**

ஆறுமுகம் விநாயகமூர்த்தி
கொற்றாவத்தை - வதிரி, யாழ்
27.02.1968 - 04.04.2009

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
AUDIT / REVIEW ENGAGEMENT / NOTICE TO READER / BUSINESS ADVISORY / CONTROLLERSHIP SERVICES
CORPORATE TAXES / PERSONAL TAXES / FINANCIAL PLANNING / CRA AUDITS / PAYROLL / BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

RE/MAX ACE
TOPSTARS
வீடு வாங்க | விற்க | முதலீடு
BUY | SELL | INVEST
THRIVE FOR YOUR LIFE LONG HAPPINESS
Arul Amirthalingam
Realtor
Dir: 647-450-2479
Office: 416-270-1111 / 3-1286 Kennedy Rd, Toronto M1P 2L5

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்:
437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


Sangathamil
சங்கத்தமிழ்
சர்வதேச மின் செய்தித்தாள்
www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுற்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகள்

பூநகரி வெற்றி விடுதலைப் போரின் பரிமாணத்தை முற்றிலும் மாற்றியமைத்த வெற்றி.

“தனது பூநகரி முகாமை நாம் தாக்க எண்ணியது எதிரிக்குத் தெரிந்து விட்டது.”

“எமது எண்ணம் எதிரிக்குத் தெரிந்துவிட்டதென்பதும் எமக்குத் தெரியும்”

“தனக்குத் தெரிந்தது தெரிந்ததும், நாம் ஏற்பாடுகளைத் தொடர்வதைக் கண்ட எதிரி, தனது நிலைகளை மேலும் பலப்படுத்திய போதும், நாம் எம் திட்டத்தில் சிறு மாற்றங்கள் செய்தோமே தவிர கைவிட்டுவிடவில்லை.

எல்லாக் கவசமும் அணிந்த “கோலியாத்” ஆக பூநகரி முகாம் போர்க்கோலம் பூண்டு நின்ற போதும், இறுமாந்திருந்த அரக்கனும் சிறுவனும் போலான போதும் எம்மைக் “குறிதவறாத தாவீதாய்” ஆக்கினர் எம் வேவு வீரர்கள்.

வேவு வீரர்களாகப் பணியாற்ற எல்லோராலும் முடியாது. விடுதலைப் புலிகளிலும் எல்லோராலும் முடியாது. வேவு வீரனின் ஒவ்வொரு நாள் வாழ்வும், வாழ்வுக்கும் – சாவுக்கும் இடையேயான போராட்டம் அந்தப் போராட்டத்தின் ஒவ்வொரு நகர்வும் – ஒவ்வொரு அசைவும் அவனது உயிர் வாழ்விற்கான சாத்தியத்தையும் அசாத்தியத்தையும் மட்டுமல்ல, எம் போராட்டத்தின் புத்துயிர்ப்பையும், எம் மக்களின் புது வாழ்வையும் தீர்மானிப்பதாய் அமைந்தன.

வேவுப் பணியில் ஈடுபடுபவர்களின் கடமை தனித்துவமான பல பண்புகளைக் கொண்டது. கடும் உழைப்புக்கு ஈடு கொடுக்கக் கூடிய உடல்வலு உள்ளவர்களாகவும், தொடர்ச்சியான – கடுமையான வாழ்க்கை முறைக்கு நின்றுபிடிக்கத்தக்க சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

நிலவில்லாத முழு இரவில், நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் இடங்களை அடையாளம் கண்டு, மைல்க் கணக்கான தூரத்தைப் பாதைகளற்ற, பாதுகாப்பானது எனத் தீர்மானிக்கும் பகுதியால், நடந்து கடக்க வேண்டும்.

குறைந்தளவிலான நேரத்தில், முழு இருட்டில் பார்ப்பவற்றை சரியானபடி விளங்கிக்கொள்ளத்தக்க அவதானிப்புத்திறன் வேண்டும்.

அரைகுறையாகத் தெரிபவற்றை வைத்து முழு முகாம் அமைப்பையும் மதிப்பிடக்கூடியளவிலான இராணுவ அறிவுடன், திட்டமிடலுக்கான ஆலோசனை வழங்கக்கூடியவாறும், திட்டத்தின் பாதகமான அம்சங்களை வெளிப்படுத்தும் அளவிற்குமான இராணுவ வல்லமை வேண்டும்.

இவ்வளவுடனும் இலட்சியத்திற்காக உயிரைத் துச்சமெனச் செயற்படுத்தும் மனப்பக்குவம் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அடுத்த நாள் வாழ்வுக்கான, அடுத்த மணிநேர வாழ்வுக்கான, அடுத்த கண வாழ்வுக்கான உத்தரவாதம் ஏதுமில்லாது தொடர்ச்சியான மன இறுக்கத்துடனான வாழ்வை, ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு கொள்கைப் பிடிப்புடன், மன உறுதி கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

என்னதான் கடுமையான வாழ்க்கை எனினும், அதனை இயல்பானதாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவமும், இலட்சியப் பற்றும்தான் அவர்களை இயக்கிக் கொண்டிருந்தன. உயிர் வாழ்வின் கடைசி அத்தியாயத்தை எட்டிப் பார்த்துவிட்டு வந்த அவர்களின் பேச்சில் தொனிக்கும் நம்பிக்கை மட்டுமல்ல – நகைச்சுவையும் அலாதியானது!

இப்படித்தான் ஒருமுறை எதிரி முகாமின் ஒரு பகுதியில் வேவு வேலையில் ஈடுபட்டிருந்தான் ஒரு போராளி. ஒருபகுதியில் எதிரி கண்டுவிட்டு அடிக்கத் தொடங்க, அதில் சுட்டுத்தப்பி வேறொரு பகுதிக்குப் போய்ச் சேர, அங்கும் எதிரிகள் கண்டு சுடத் தொடங்க… அவற்றுக்குள்ளால் மீண்டுவந்து அடுத்தநாள் அதைப் பற்றிக் கதைக்கும் போது;

“அப்பா அடிக்கிறார் என்று அம்மாட்டை ஓடினால், அம்மாவும் அடிச்சா எப்படி இருக்கும்? அப்படி இருந்தது” என்றவன், பல தடவை எதிரி முகாமுள்ளே அடிபட்டுத் தப்பி வந்து சேர்ந்தவன், ஒருமுறை வர முடியவில்லை; வரவில்லை.

அவ் வேவு வீரர்களிடம் இருந்த பொறுப்புணர்வு அற்புதமானது. குறிப்பிட்ட இராணுவ நிலை மீதான தாக்குதலைச் செய்வதற்கான அணியினரை அழைத்துச் செல்லும் பொறுப்பு, தெரிந்தெடுத்த ஓரிரு வேவுக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

அதன் பின்னர் அவனது சிந்தனை எல்லாம் குறிப்பிட்ட அணியினரின் வெற்றி, மற்றும் வெற்றிக்கான பாதை திறப்பு என்ற வட்டத்தினுள் வந்துவிடும்.

**விதையாய் விழுந்த தமிழ் மறவர்களின் கதையே எமது வரலாறு…**



‘ஒப்பரேசன் தவளை’ நடவடிக்கைக்காகத்தான் முதன் முதலில் எமது மகளிர் அணியினர் வேவு வேலையில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் அனுபவம்மிக்க ஆண் போராளிகளின் வழிகாட்டலில் செயற்பட்ட அவர்கள், ஒரு கட்டத்தில் “ஏன் நாம் தனித்துச் செயற்படக்கூடாது” என்று குரலெழுப்பி, “மௌனமாய்ச் சிரித்த தலைவருடன் சண்டை போட்டு தனியான வேவு அணியினராக செயற்பட்டதுடன், தாக்குதலில் ஈடுபட்ட ஆண் போராளி அணிகளுக்கான வழிகாட்டிச் செல்லும் பொறுப்பையும் திறம்படச் செய்தனர்.

“அந்தப் பிள்ளையள் இல்லை எண்டா அங்கால் பக்கத்தாலை சரியாகக் கஸ்டப்பட்டிருப்பம்” என்று, அவ்வணியின் தளபதி மனமாரச் சொல்லும் வண்ணம் திறம்படச் செயற்பட்டனர்.

பூநகரிச் சமரில் எமது மகளிர் அணியின் வேவுப் பிரிவினர் நால்வர் வீரச்சாவடைந்தனர்.

சம நேரத்தில் பலமுனைகளில் தாக்குதல் திட்டமிடப்பட்டதால், எல்லா முனைகளிலிருந்தும் ஒரேயடியாக வேவு நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

ஏதாவது ஒரு பகுதியில் அனுபவக் குறைவினாலோ, திறமைக் குறைவினாலோ வேலைகள் அரைகுறையாக இருக்கும் அல்லது வேலைகளைப் பூரணப்படுத்தவென உள்ளே சென்ற வேவு வீரன் திரும்பி வராமலே மடிந்து விட்டிருப்பான்.

அந்த வேளையில் தனது வேலையைத் திறமையாக நிறைவு செய்து காத்திருப்பவனிடம் பொறுப்புக் கைமாறும்.

தான் பார்த்த எல்லா நிலைமையையும் புதிதாய் ஒருவனுக்கு ஒவ்வொன்றாய்க் காட்டிவிட்டு தனது புதியபகுதி நோக்கி நடப்பான் அந்தப் புலிவீரன்.

சில அணிகள் ஓரிரு வேவு வழிகாட்டலிலேயே நீண்டதூர நகர்வினை மேற்கொள்ள வேண்டியிருக்கும் போது தான், அவன் தனது பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பிப்பான்.

வேவு வீரன் ஒருவனுக்கு மைன்ஸ் வெடித்துக் கால் இல்லையென்றால்? என்ற கேள்விக்கு, “துண்டுபட்ட காலை இறுக்கிக் கட்டிவிட்டு என்னைத் தூக்கினால் நான் காட்டிச் செல்வேன்” என உறுதியாகப் பதிலளித்தனர் எமது வேவு வீரர்கள்.

மிகக் குறைந்த ஓய்வுடன் தொடர்ச்சியான பணியில் ஈடுபடும் வாழ்வில், தொடர்ந்து பல நாட்களுக்கு நல்ல உணவோ ஆறதலான தூக்கமோ அவர்களுக்கு வாய்ப்பதில்லை.

★ ★ ★

கையையும், காலையும் எறிந்துவிட்டு அவர்கள் படுத்திருப்பதைப் பார்த்தால் பாவமாய்த்தான் இருக்கும்!

இராத்திரி வேலை முடிந்து திரும்பி வந்து ‘மைப்’ வேலை எல்லாம் முடிந்து படுக்க நேரம் எப்படியும் பதினொரு மணியாகிப் போயிருக்கும்.

எழுப்பத்தான் வேண்டும், இப்ப எழுப்பினாத்தான் நேரம் சரியா வரும். எழும்பி எல்லா வேலையும் முடிந்து முதல் பார்த்ததில் உள்ள சந்தேகங்கள் எவை எனவும், புதிதாய் பார்க்க வேண்டியவை எவை எனவும் கேட்டு முடித்துவிட்டுப் புறப்படும் போது, அநேகமாய்ச் சூரியன் பூநகரிக்குப் பின்னால் மண்டைதீவுக்குள்ளே மறைந்து கொண்டிருப்பான்.

மெதுவாகச் சத்தமின்றி நகர வேண்டும். நிலையாய் நிற்பதற்கும் நகர்வதற்கும் இடையே வித்தியாசம் காணமுடியாதபடியான மெதுவான நகர்வு சிறுதவறும் அவனையும் தோழர்களையும் ஆபத்துக்குள்ளாக்கும்; அழித்துவிடும்.

முகாமின் வெளிக் காவலரண் வேலியை ஊடறுத்துச் செல்வதென்பது மிகவும் கடினமான பணி. ஒன்றன்பின் ஒன்றாக முட்கம்பிச் சுருள்களும் – நிலத்தின் மேல் அரையடி உயரமாய் முட்கம்பி வலைப்பின்னலும் காலை வைத்தால் எடுக்க முடியாது.

இதைவிட ஒவ்வொரு அடி வைக்கும் போதும் – அந்த இடமும் கண்ணிவெடியாய் இருக்கலாம் – படுத்திருந்து அங்குலம் அங்குலமாகக் கண்ணிவெடியைப் பரீட்சித்தபடி நகர வேண்டும்.

இராணுவ முகாமைச் சுற்றிய எல்லாப் பகுதியும் கண்ணிவெடிகளால் சூழப்பட்டிருக்குமென்பது சாதாரண விடயம்தான். ஆனால் நிலவில்லாத முழு இரவில், சத்தம் ஏதும் இன்றி இரகசியமாய், கண்ணிகளின் ஊடே ஊர்ந்து செல்வது என்பது, அதுவும் இயந்திரத் துப்பாக்கியுடனும், பளீரென மின்னும் ஒளி விளக்குடனும் காத்திருக்கும் எதிரிக்கு முன்னே நகர்ந்து செல்வது என்பது சாதாரண விடயமல்ல.

படுத்திருந்து மெதுமெதுவாய் கையால் தொட்டுணர்ந்து, கண்ணிவெடி என நினைத்தெடுப்பது கல்லாய் இருக்கும்; கல்லென நினைத்து கவனமின்றி எடுக்க அது கண்ணியாய் இருந்து தொலைக்கும்.

வேவு வீரர்களுக்கு கண்ணிவெடி வெடிப்பது காலில் மட்டுமல்ல.

இப்படித்தான் ஒருமுறை கம்பிச் சுருள்களுக்கிடையில் எதிரியின் மைன்ஸ் ஒன்று வெடிக்கிறது. வெளிச்சத்தில் தேடிய எதிரி முன்னேற முற்பட்ட போது, அழைத்துச் சென்ற பெண் போராளியை பத்திரமாய் அனுப்பிவிட்டு, குப்பி கடித்தான் ஒரு போராளி.



இருளின் கவசத்தில் நகரும் புலியின் முன்னே, எதிரி. ரவையை மழைபோல் பொழியத் தயாரான இயந்திரத் துப்பாக்கியுடன்... பளீரெனக் கண்களைப் பறிக்கும் ஒளியைப் பாய்ச்சித் தேடுவான்.

எதிரியின் ஒவ்வொரு காவலரணிலும் பிரகாசமான சிறு சிறு, லைற்கள் இருந்தபோதும், முழு முகாமையும் சுற்றி இடையிடையே பெரியதும் பிரகாசமானதுமான லைற்களால் அடிக்கடி சுற்றி சல்லடை போட்டுத் தேடி அவதானிப்பான் எதிரி. அவற்றைவிடத் தனியாக 'ஓரிடத்தில் இருந்து மறு இடத்திற்கு' நகர்ந்துகொண்டிருக்கும் 'சுத்துச் சென்றிக்காரன்' தனது பங்குக்கும் எல்லா லைற்களாலும் தேடியபடி போவான்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாகதேவன்துறையில் ஒன்றும், ஆலடிச்சந்தியில் மற்றதுமாய், "பெரிய அரக்கனின் சூரியக் கண்கள் போல்" சுழலும் இரண்டு பெரும் தேடொளிகள்.

யாழ். குடாவின் மற்றக் கரையில் இரவுப் பயிற்சியில் கள்ளமடிக்கும் பெடியளை றெயினிங் மாஸ்ரரிடம் பிடித்துக் கொடுக்கவல்ல பிரகாசமான - அந்தச் சூரியக் கண்கள் திறக்கும்போது, அங்குள்ள முழு நிலவும் பகலாகும். இருளின் கவசம் அகன்று பறக்கும்.

ஒரு சாதகமான பாதையைக் கண்டுபிடிக்க வாரக்கணக்காகப் போராட வேண்டும். நகரும் பாதையில் மனித நடமாட்டத்திற்கான எந்தத் தடயத்தையும் விட்டுவிடக்கூடாது. வாரக் கணக்கில் போராடிக் கண்டுபிடித்த பாதையில் ஒரு சிறு தடயத்தை விட்டாலும் எதிரி உசாராகிவிடுவான்; அந்தப் பாதை அடைபட்டுவிடும். அங்கே ஒரு எல்.எம். ஜீயோ, ஜீ.பி.எம். ஜீயோ புதிதாக முளைத்துவிடும்.

கும்மென்ற இருட்டில், அவர்களுக்கு மட்டும் தெரிந்த குறிப்புக்களைப் பார்த்து, மணிக்கணக்காக நடக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரியத்தக்க எந்த அடையாளத்தையும் வைக்காது, மரத்தையும், மண்ணையும், புல்லையும் அடையாளப்படுத்தி நடக்க அதீதத் திறமை வேண்டும்.

எதிரி எங்கும் நிற்கலாம் - இரவின் முழு இருட்டை ஊடறுத்து நகர்பவனைக் காட்டும் 'நைற்விசன்' என்னும் இரவுப் பார்வைச் சாதனங்களுடன், ஆங்காங்கே சிறு குழுவாக எம்மவரை எதிர்கொண்டு காத்திருப்பான் - எதிரி.

இருட்டுக் கவசத்தில் செல்லும் புலிவீரனை நோக்கி எதிரியின் துப்பாக்கி அதிரும்.

எதிர்பாராத வேளையில் எதிர் பாராத திசையிலிருந்து ரவை மழையாய்ப் பொழியும்; படுத்திருந்த அரக்கன் எழுந்துவிட்டது போல் தூங்கிக் கிடந்த எதிரி முகாம் உயிர் பெறும்.

எல்லாப் பொயின்றுகளிலிருந்தும் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கும் போது, ஆள் இல்லையென நினைத்திருந்த பொயின்றில் இருந்தும் எல்.எம்.ஜி. சடசடக்கும்.

"நல்லவேளை டம்மிப்பொயின்ற் என்று - குறாப்பை கொண்டு போயிருந்தா, நல்ல குடவை குடுத்திருப்பான்" என நினைத்தபடி ஓடிக்கொண்டிருக்கையில், பராலைற் வெளிச்சம் போதாதென்று போகஸ் லைற்றும் அடிக்கத் தொடங்கியிருப்பான்.

க்கியூ, க்கியூ என்று தலைக்கு மேலாலும், பக்கத்தாலும் காற்றைக் கிழித்துச் செல்லும் ரவைகளுக்கிடையே ஓடிவந்து பார்த்தால், சகதோழனைக் காணவில்லை.

பயிற்சி முகாமில் கண்டது முதல் இன்றுவரை - இதோ இப்போது வரை - ஒன்றாய் வாழ்ந்த நண்பன், ஒரு கோப்பையில் உண்டு, பாயில்லாமல் ஒரு பற்றையில் உறங்கி ஒன்றாய் வாழ்ந்த நண்பனைக் காணவில்லை...

இது எம் நிலந்தான். ஆனால், எதிரி முகாமின் உள்ளேயே...

"உனக்கு காயம்பட்டு விட்டதா? எங்கேயடா நிக்குறாயென் தோழனே..." என்று குரல் வைத்துக் கூப்பிட முடியாது, காத்திருந்து பார்த்திருக்கும் வேளை கொடுமையானது.

இன்னொரு வேளை "நீங்கள் இதில் நில்லுங்கள் நான் உள்ளே போய் கிளியர் பண்ணிக் கூப்பிடுகிறேன்" என்று சொல்லிப் போவான் ஒரு தோழன்.

மரத்துடன் மரமாய், பற்றையுடன் பற்றையாய், புல்லுடன் புல்லாய், நிலத்துடன் நிலமாய், நீருடன் நீராகக் கலந்து மணிக்கணக்காக, நாட்கணக்காக - காத்திருந்து பார்த்திருந்து மீளும் வேவு வீரனை எண்ணித் தோழர்கள் காத்திருப்பர் - வெளியே.

'என்ன இன்னும் காணவில்லை' என நினைத்திருக்கும் வேளை, உள்ளே போனவன் வந்ததும் உண்டு வராமலே விட்டதும் உண்டு.

தனிமையில் தன்னையும், கையில் உள்ள ஆயுதத்தையும், கழுத்தில் உள்ள குப்பியையும் நம்பி ஆயிரம் பகைவன் உள்ள எதிரிப் பாசறைக்குள் தன்னந் தனியாய் நுழையும் வேவு வீரனின் எண்ணங்கள் எங்கெங்கோ ஓடும். நீரில் மூழ்கி, மழையில் தோய்ந்து, ஈரத்தில் ஊறி எல்லாம் ஈரமாய் நடக்கும் வேளை, அரப்புவைத்து முழுகவிட்டு, ஈரம் துடைத்து, தலைக்குப் பவுடரும் போட்டுத் தேய்த்துக் காயவிட்டு "சாப்பிடடா மோனை" என்று கொஞ்சும் அம்மா... நினைவுக்கு வராமலா போவாள்!

உடலெங்கும் நுளம்பு மொய்த்து கண், காது, மூக்கு என எங்கும் கடித்துத் தின்ன, கலைக்கவும் மாட்டாது குளிரில் நடு நடுங்கி வாடும்வேளை, சும்மா படுத்ததைக் கண்டு போர்வையால் மெல்லப் போர்த்து அன்பாய்த் தடவிப் போகும் அப்பா... நினைவுக்கு வராமலா போவார்?

அதற்கும் மேலாய், எல்லாவற்றிற்கும் மேலாய் இது எங்களின் நாடு, எம்மக்களின் பூமி என்ற நினைவு மேலோங்கும்.

கடுமையான பயிற்சியும், கடினமான முயற்சியுமே வெற்றிக்கு அடிப்படை என அடிக்கடி உரைக்கும் தலைவனின் நினைவும் மேலோங்கும்.

"நீ இதில் நில், நான் உள்ளே போகிறேன் வெடிச்சத்தம் கேட்டால் நீ திரும்பிப் போ - நான் வருவேன்" என்று கூறிவிட்டுச் சென்று, வராமலே போய்விட்ட உயிர்த்தோழன் நினைவுக்கு வருவான்.

மெல்ல நகர்கையில் தடக்கி விழுத்திய வயலின் வரம்பு, 'இப்ப முதல் உழவு உழுதிருக்க வேணும்...' என்ற நினைப்பில் அவனை ஆழ்த்தும்.

சுதந்திரமாய் நீந்திக் குளித்த குளமும், ஏறிக் குதித்த மாமரமும் இன்று பகைவனின் பாசறையாய் ஆனதை எண்ணி நெஞ்சு கனக்கும்.

★ ★ ★

எங்களது தாய் மண்ணைப் போலவே அழகான யாழ்ப்பாணக் கடலேரி! அழகான அந்தக் கடலேரியின் உள்ளேதான் எத்தனை கொடுமையும், துயரமும்?

நேரம் நீண்டு செல்லும். தண்ணீரில் நடந்தும், மிதந்தும், வலித்தும் செல்லும் வேவு வீரனின் எண்ணங்கள் எங்கெங்கோ சுற்றும்.

கத்தியுடன் வந்த பகைவனைப் பார்த்துக் கும்பிட்ட அந்த அம்மா "என் அம்மாவைப் போலொரு அம்மா" - வெட்டுண்ட தலையுடன் இந்தத் தண்ணீரில் தானே மிதந்தாள்?

முத்தமிட்டு 'டாட்டா' காட்டிய சின்னவள் சொன்ன பொம்மையுடன் வந்த அப்பா - "என் அப்பாவைப் போலொரு அப்பா" - இந்தத் தண்ணீரில்தானே மிதந்தார்? "அப்பா எப்ப பொம்மையுடன் வருவார்?" என்ற பிள்ளையுடன் அம்மா கண்ணீரில் குளித்திருந்த போது, அப்பா இந்தத் தண்ணீரில்தானே கரைந்தார்?

எங்களது சொந்தங்களும் உறவுகளும் கலந்து கரைந்த உப்புநீர், எம்மக்களின் குருதி கலந்த நீர் குருதியுடன் உயிரும் கலந்த நீர். எம் மக்களின் குருதியும் உயிரும் கலந்ததாலோ அந்தத் தண்ணீரில் நனைகையில் புதிய உணர்வு பிறக்கிறது!

"மேனியைத் தழுவும் தண்ணீரைத் தடவி, வாயில் எடுத்து மெதுவாய் உமிழும் போது... உப்புக் கரிக்காது"

யாழ். நீரேரிக்கும் எம் வேவு வீரர்களுக்கும் இடையேயான உறவு ஆழமானது. அன்பு கொள்வதும் கோபப்படுவதுமாய் அவர்களின் நட்பில் பல கதைகள்...

மாலை மென்னிருட்டில், தூரத்தே தெரியும் வெளிச்சத்தை பார்த்தபடி இடுப்பளவு தண்ணீரில் நடக்கத் தொடங்கும் போது, அந்தக் கடல் மகள்... எங்கள் யாழ்ப்பாண நீரநங்கை அற்புதமான அழகிதான்!

கூட்டமாய்த் துள்ளும் திரளியும், வரிசையாய்ப் பறக்கும் கொக்குகளுமாய் அழகை ரசித்தபடி நடக்கையில், வழிமாறி வந்த பெரிய மீன் ஒன்று காலில் இடற, என்னவோ ஏதோவென்று பாய்ந்து விழுபவனை எல்லோருமாய்ச் சேர்ந்து தாட்டு மிதத்தி...

'றெக்கி' வேலை முடிந்து பசியும் களைப்புமாய் உடல் சோர்ந்து, அதிகாலையில் பிறை நிலவைப் பார்த்தபடி திரும்புகையில், அவன் பேசாமல்தான் வருவான்.

என்னில் என்ன கோபமோ என்று, கடல் மகள் மெல்லக்குமுறி ஆர்ப்பரிக்க, இடுப்பளவாய் இருந்த நீர்மட்டம் மேலேறி, மேலே மேலே ஏறி, நுனிக்காலுக்கும் எட்டாத் தண்ணீராய் மேலை மூந்து நிற்கையில், கடல் மகளின் காதல் போய் எம்வீரர் தத்தளிக்கத் தொடங்குவர்.

முகாம் வேவுப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துகொண்டு திரும்பி வந்த எம் வேவு அணியினர், கடலில் தம் தோழனை இழந்த சோகத்துடன், கடல் மகள் மேல் கோபத்துடன் மீண்டதும் உண்டு.

பௌர்ணமியும் அமாவாசையும், நிலவின் உதயமும் மறைவும் கடல் நீரேரியில் நிகழ்த்தும் மாற்றம் அற்புதமானது.

நிலவின் உதயத்தில் அமைதியாய் இருக்கும் கடலேரி. நேரம் செல்லச் செல்ல, பெருங்கடலில் இருந்து மெதுவாக உள்ளே வரத் தொடங்கும் நீரோட்டம்.

ஆளை இழுக்கும் வேகம் பெற்று - உச்சவேகம் பெற்று, நீர்மட்டம் உயர்ந்து மெதுவாய்த் தணியும்.

பின்னர் நிலவு மறையத் தொடங்க கொஞ்சம் கொஞ்சமாய் கடலுக்குத் திரும்பும் தண்ணீர் வேகம் பெற்று, உச்ச வேகம் பெற்றுத் தணிந்து, நிலவின் அடுத்த உதயத்தைப் பார்த்துத் தணித்திருக்கும் நீரோட்டம்.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையேயான ஈர்ப்பு விசையானது, நீர்மட்டத்திலும், நீரோட்டத்திலும் ஏற்படுத்தும் ஜாலத்தைத் துல்லியமாய் ரசிக்கலாம் யாழ். கடலேரியில்.

இந் நீரேரி புலிவீரர்களுடன் மட்டுமல்ல, எம் தாயகத்தின் நிலத்துடன் மட்டுமல்ல, எம்மினத்தின் நீண்ட வரலாற்றுடனும் பின்னிப் பிணைந்தது.

நீண்ட வரலாற்றின் பல்வேறு காலங்களில், அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்கொண்டது எமது மண். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆக்கிரமித்ததும், பின்னர் அதிகார மாற்றம் ஏற்பட்ட ஈழத்தமிழர் சிங்களவர்களின் அடிமைகளாய் கைமாற்றமானதும், தொடர்ந்தும் தமிழர்கள் அடிமைகளாய் இருக்க மறுத்துப் போராடியதால் சிங்களவர்கள் தமது அதிகாரத்தை இந்தியர்களிடம் கைமாற்றிக் கொடுத்ததும்,



இந்தியர் சிங்களவர்களிடமே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டுப் போய்ச் சேர்ந்ததும் என, தமிழீழ மக்கள் மீதான ஆக்கிரமிப்பு நீண்ட பெரும் தொடர் வரலாறு.

போர்த்துக்கீசர் கையில் யாழ்ப்பாணமும், ஒல்லாந்தர் கையில் கொழும்புடன் பிறபகுதிகளுமாகப் பிடிபட்டிருந்ததாம். போர்த்துக் கீசர் கையிலிருந்த யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வந்து மன்னாரில் தரித்திருந்த ஒல்லாந்துப்படை, அடம்பன் வழியாக பூநகரி வந்து, பூநகரியில் இருந்து இந்த 'யாழ் நீரேரி'யூடாகச் சாவகச்சேரி வந்து, பின்பக்கத்தால் போர்த்துக்கீசரை மோதி அழித்து, யாழ்ப் பாணத்தைப் பிடித்து தமிழர் மீதான அடிமைக் கைமாற்றம் நிகழ்ந்ததாம்.

எம்மை அடிமைகொள்ள வந்த அந்தியப்படை நடந்த அதே நீரேரியில், எம்மக்களை விடுவிக்க இன்று எம் வேவு வீரர்கள் நடக்கிறார்கள்.

எம்மை அடிமைகொள்ள வந்த பகைவன் நடந்த பாதையில், எம் நாடு எமக்கே சொந்தம் என்ற இறுமாப்புடன் எம் வீரர்கள் நடப்பது கண்டு, யாழ். நீர்நங்கை சிரிக்கிறாள்.

அன்று பகைவனைப் பார்த்து அஞ்சி ஒடுங்கி, அழுது நடுநடுங்கி வாழ்ந்த எம் பெண்டிரின் பேத்தியின் பேத்திகள், இன்று நிமிர்ந்த நெஞ்சுடன் வேவுப் புலி வீரராய்ப் பகைவனைத் தேடிப் புறப்படும் காட்சி கண்டு, யாழ். நீர்நங்கை சிரிக்கிறாளோ!

அந்த யாழ். நீர்நங்கை எல்லாம் அறிந்தவள். பகைவனின் கரையில் ஏறிய புலிகளில் எதிரியின் துப்பாக்கி தீ உமிழ்ந்ததும், பக்கம் ஒருவராய் நீரில் வீழ்ந்து சரிந்த எம் வீரரில் ஒருவனுடல் பகைவன் கையில் வீழ்ந்ததும்.

"அது எது" வென நெருங்கிய எம் மீனவர், "ஐயோ எம்பிள்ளை" எனத் துடித்துத் தூக்கியதும் இந்தக் கடல்மகள் அறிவாள்.

தூரத்தே எதிரி சுடும் சத்தம் கேட்டு, அது எதற்கோ...? எம்ம வரைக் கண்டு சுட்டானோ...? போன எம் தோழன் வீழ்ந்துவிட் டானோ...? எனக் கலங்கிக் காத்திருந்து, காலைவரைக் காத்திருந்து...

மிதந்து வந்த தோழனை அள்ளி எடுத்தழுததும், மீண்டு வந்த தோழனை அணைத்து ஆடி மகிழ்ந்ததும், இந்தக் கடல்மகள் அறிவாள்.

வெற்றிலைக்கேணி, வளலாய், மண்கிண்டிமலை, பூநகரி என எம் ஒவ்வொரு வெற்றிக்கும் வித்திட்டவர்கள் எம் வேவு வீரர்கள்.

எம் தாயகத்தைச் சிதைத்தழிப்போம் எனச் சபதமிட்டு, யாழ் நக ரைப் பிடிக்கவெனத் திட்டமிட்டுச் செயற்படுத்த முனைந்த வட பகுதியின் படைத்துறைத் தலைமையை, அராலியில் வைத்து அழித்தொழித்தவர்கள் எம் வேவு வீரர்களே.

குறிப்பாக தமிழீழ நாட்டின் பெருவெற்றியாய் அமைந்த 'ஒப்ப ரேசன் தவளை' நடவடிக்கையில் வேவு வீரர்களின் பங்கு மகத்தானது.

வெற்றிலைக்கேணி வெற்றிக்கு வித்திட்ட சிவாஜி.

மண்கிண்டிமலையின் வரலாற்றுக்கு வழிகாட்டிய றொகான், ரமணன், பனம்பாரன்.

பதவியா கொங்கேவேயவின் வெற்றிச்சிற்பிகள் மழலேஸ், நித்தி.

பூநகரி கேணல் மீதான கண்ணிவெடிக்கு தர்மேந்திராவுடன் கண்ணிவெடி சுமந்த குருவேல் என்று, பூநகரி வெற்றியில் வித்தான வேங்கைகள் பற்பலர்.

அவர்களது முயற்சியால், அர்ப்பணிப்பால் இன்று எம் தாயகம் வெற்றிக்களிப்பில் மிதக்கிறது.

வீழ்ந்த வேங்கைகளின் தோழர்கள் தம்புதிய இலக்குகளை நோக்கி, அதே இருளின் கவசத்தில், அதே தேடொளிக்கு மறைந்து நகர்கின்றார்கள். இலக்கு புதியது, கையில் உள்ள ஆயுதம் புதியது, அவர்களது அனுபவமும் புதியது.

ஆனால் நினைவில் மட்டும் அவர்களது அதே தோழர்களும், அதே இலட்சியமும் தான்!



**கப்டன் ராமன்**
ஏரம்பமூர்த்தி டேவிட்
கன்னங்குடா, மட்டக்களப்பு
25.03.1974 - 05.01,1993
"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கல்முனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வீரச்சாவு.



**லெப்டினன்ட் தமிழ்மறவன் / வீரபாண்டியன்**
மேகவண்ணன் பூசங்கர்
ஒலுமடு, வவுனியா
27.05.1975 - 24.08.1993
"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடக் கடற்படை முகாமை வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.



**லெப்டினன்ட் மழலேஸ்வரன் / மழலேஸ்**
செல்லத்தம்பி விநாயகர்
நெடுங்கேணி, முல்லைத்தீவு
12.06.1972 – 24.08.1993

வன்னியில் நடாத்தப்பட்ட கோன்கோவேய மினிமுகாம் தகர்ப் பிற்கு சிறப்பாக வேவு பார்த்தமைக்காகத் தமிழீழத் தேசியத் தலைவரிடம் பரிசு பெற்றவர்.

மண்கிண்டிமலை முகாம் மீதான "இதயபூமி 01" தாக்குதலுக் காக சிறப்பாக வேவு பார்த்து, வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடப் பகுதிக்கு வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.



**லெப்டினன்ட் ரட்ணேஸ் / ரட்ணம்**
சிறிதர் உமாச்சந்திரன்
பிரதான வீதி, மன்னார்.
07.03.1973 - 17.08.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கல்முனைப் பகுதியிலுள்ள பந்தலடி முகாமில் வேவு நடவடிக்கையில்



ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் கெங்காதரன் / கங்கா**
கண்ணையா முத்துக்குமார்
பாரதிபுடம், மட்டக்களப்பு
03.07.1970 - 22.02.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியை வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.



**லெப்டினன்ட் ரவிக்குமார்**
சிவகுரு யுவராஜா
கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு
19.09.1970 - 30.05.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடப் பகுதி வேவுவேலையை திறம்படச் செய்தவர். பின்னர் வேவுக் காக சென்றபோது மைன்ஸ் வெடித்ததால் குப்பி கடித்து வீரச் சாவு.



**லெப்டினன்ட் பத்மசீலன்**
அழகையா காந்தரட்ணம்
ஏறாவூர், மட்டக்களப்பு
09.03.1973 - 15.06.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.



**லெப்டினன்ட் இளந்தேவன் / இளங்கோ**
தர்மலிங்கம் சிறிதரன்
பூநகரி, மன்னார்
15.07.1970 - 07.091993

இவர் 1992ம் ஆண்டு இடம்பெற்ற சங்குப்பிட்டி - பூநகரி பாதை யிலுள்ள "றவுண்டபோட்" பகுதியிலான தாக்குதலுக்காக சிறப்பாக வேவு பார்த்தவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி பல பகுதிகளை யும் திறமையாக வேவு பார்த்தவர். பூநகரி முகாமினுள் ஊடு ருவி வேவு பார்த்துவிட்டு திரும்பும்போது வீரச்சாவு.



**லெப்டினன்ட் செல்வன் / ஆனந்தன்**
முருகேசுப்பிள்ளை சரவணபவன்
கலட்டி, யாழ்ப்பாணம் (காரைநகர்)
29.09.1975 - 09.091993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, வாடியடி சந்தி யில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கித் தாக்குதலில் வீரச்சாவு.



**கப்டன் கதிரவன் / றொகான்**
வீரப்பு சந்திரன்
சேமமடு, வவுனியா
31.07.1973 - 10.09.1993

லெப். கேணல் சுபன் தலைமையிலான பள்ளிக்குடாப் பகுதி 62 காவலரண்களின் தகர்ப்பில் சிறப்பாக வேவு பார்த்தமைக்காக தமிழீழத் தேசியத் தலைவரிடம் பரிசு பெற்றவர்.

மண்கிண்டிமலை மீதான “இதயபூமி 01” நடவடிக்கைக்காக திறமையாக வேவு பார்த்து, வெற்றிக்காகப் பெரும் பங்காற்றியவர்.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரி முனைப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.



**2ம் லெப்டினன்ட் பனம்பாரன்**
தங்கராசா சதீஸ்வரன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
20.04.1976 - 09.09.1993

மண்கிண்டிமலை மீதான “இதயபூமி 01” தாக்குதலுக்காக வேவு பார்த்தவர்.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, வாடியடி சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கி தாக்குதலில் வீரச்சாவு.



**லெப்டினன்ட் சிவம்**
சின்னையா கமலேஸ்வரன்
கோப்பாய், யாழ்ப்பாணம் (வளலாய்)
17.05.1969 - 09.09.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, வாடியடி சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கி தாக்குதலில் வீரச்சாவு.



**கப்டன் ஆராமுதன் / நிரேஸ்**
குலவீரசிங்கம் தேவபாலன்
மீசாலை, யாழ்ப்பாணம்
16.09.1972 - 23.09.1993

வளலாய் இராணுவ வேலியைத் தாக்கியழித்தமைக்கான வேவு, மாதகலில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலுக்கான வேவு.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி முகாமை வேவு பார்த்துவிட்டுத் திரும்புகையில் சங்குப்பிட்டி - கேரதீவு கடலில் வீரச்சாவு.



**கப்டன் அருளரசன்**
கணேசன் கருணாநிதி
களுதாவளை, மட்டக்களப்பு
10.09.1974 - 13.10.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, பள்ளிக்குடா முகாமையும், கடற்கரை பகுதியையும் சிறப்பாக வேவு பார்த்து பூரணப்படுத்தியவர். பள்ளிக்குடா பகுதிக்குள் வேவுக்காக ஊடுருவிச் செல்லும்போது வீரச்சாவு.



**லெப்டினன்ட் செங்கண்ணன் / சத்தியராஜ்**
முருகேசு திராவிடமுத்து
15ம் கிராமம், அம்பாறை
09.11.1973 - 24.10.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரி முனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.



**லெப்டினன்ட் நிலவேந்தன் / நடேஸ்வரன்**
சுப்பிரமணியம் கண்ணன்
புலோலி, யாழ்ப்பாணம்
26.05.1974 - 11.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடம் முன்னணிக் காவலரண்களை வேவு பாத்ததுடன், தாக்கல் அணிக்கான வழிகாட்டியாக்க வீரச்சாவு.



**கப்டன் நிரஞ்சன்**
பாபு இராஜசிங்கம்
வற்றாப்பளை, முல்லைத்தீவு
25.07.1972 - 12.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக கறுக்காய் பகுதியிலும், நாகதேவன்துறையிலும் வேவு நடவடிக்கையிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாக செயற்பட்டவர்.



**கப்டன் துளசிராம்**
சின்னமணி தாமரைச்செல்வி
கிளிநொச்சி (பருத்தித்துறை)
17.08.1974 - 11.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி முன்னணிக் காவலரண் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், ஆண்களின் தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்களில் இருவரும் ஒருவர்.



**லெப்டினன்ட் திண்ணியன் / ரங்கா**
கணபதிப்பிள்ளை கருணாநிதி
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு
13.08.1971 - 24.10.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரி முனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.



**லெப்டினன்ட் நித்தி**
துரைராஜசிங்கம் சுந்தரேஸ்வரன்
நெடுங்கேணி, முல்லைத்தீவு
25.02.1975 - 30.10.1993

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான “இதயபூமி 01” நடவடிக்கைக்கான வேவு.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரி முனைப் பகுதி இராணுவ முகாம் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.



**கப்டன் குருவேல்**
சற்குருதாசன் செல்வநேசன்
பாரியாரிகண்டல், மன்னர்
16.12.1970 - 11.11.1993

பூநகரி பகுதியில் ஊடுருவி கேணல் சித்திரப் புஞ்சிகேவா மீது நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலுக்காக தமிழீழத் தேசியத் தலைவரிடம் பரிசு பெற்றவர். லெப். கேணல் சுபன்

தலைமையில் நடாத்தப்பட்ட பள்ளிக்குடா காவலரண்கள் 62 மீதான வேவு.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, வில்லடி முகாம் மீதான வேவுடன் வழிகாட்டியாகவும் சென்றவர்.



**லெப்டினன்ட் மகிழினி**
அருள்வாசகம் சகாயபாமா
செபஸ்ரியார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
30.04.1974 - 11.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, வில்லடி முகாம் முன்னணிக் காவலரண் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.



**லெப்டினன்ட் மைனா / மணி**
செல்லையா வசந்தி
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
09.10.1976 - 11.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, வில்லடி முகாம் முன்னணிக் காவலரண்கள் மீதான வேவிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.



**லெப்டினன்ட் இளவரசி**
செல்லையா கலாநிதி
ஜெயந்திநகர், கிளிநொச்சி
24.08.1968 - 11.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, வில்லடி முகாம் முன்னணிக் காவலரண்கள் மீதான வேவிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.



**லெப்டினன்ட் அழகநம்பி / ரோமியோ**
கந்தசாமி செந்தில்நாதன்
கொக்குவில், யாழ்ப்பாணம்
17.09.1976 - 13.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடம் பகுதியில் வேவு பார்த்ததுடன், தாக்குதல் உதவி அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.



**லெப்டினன்ட் செய்யவன் / நேரு**
கணபதிப்பிள்ளை தங்கரூபன்
பெரியப்பளை, யாழ்ப்பாணம்
13.11.1993

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி முகாம் வேவு நடவடிக்கையிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.



**லெப்டினன்ட் ரமணன்**
சிவஞானம் சிவபாலன்
பன்னாலை, யாழ்ப்பாணம்
01.04.1975 - 13.11.1993

மண்கிண்டிமலை முகாம் மீதான தகர்ப்பிற்கான “இதயபூமி 01” நடவடிக்கைக்கான வேவு நடவடிக்கையில் ஈடுபட்டவர்.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக வேவு நடவடிக்கையில் ஈடுபட்டு, தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.



**மேஜர் செம்பியன் / சிவாஜி**
சின்னத்தம்பி குமரலிங்கம்
செம்பியன்பற்று, யாழ்ப்பாணம்
25.02.1974 - 13.11.1993

கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பிற்கான வேவிற்காக தமிழீழத் தேசியத் தலைவரிடம் சிறப்புப்பரிசு பெற்றவர். வளாய்ப் பகுதியில் இராணுவ வேலியைத் தாக்கி அழிப்பதற்கான வேவு.

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, பள்ளிக்குடாப் பகுதி வேவு பின்னர் வில்லடி பிரதான கட்டளை முகாம் மீதான வேவுடன் பிரதான வழிகாட்டியாகவும் சென்றவர்.



**கப்டன் முகுந்தன் / கிருமானி**
பிரான்சிஸ் றொபேட் வின்சன்
குருநகர், யாழ்ப்பாணம்
29.08.1973 - 30.11.1992

“ஒப்பரேசன் தவளை” நடவடிக்கைக்காக பூநகரி, கல்முனைப் பகுதியை வேவு பார்த்துவிட்டுத் திரும்பும்போது வீரச்சாவு.

“கெரில்லாப் போர் முறையில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி வந்த நாம், இன்று பாரிய படைத்தளங்களைத் தாக்கி அழிக்கும் சக்தி பெற்றவர்களாக வளர்ச்சி கண்டுள்ளோம். இந்த அபாரமான முன்னேற்றத்திற்கு வேவுப் பிரிவினரின் பங்கு முக்கியமானது. மிகவும் கஸ்டமானதும், மிகவும் சாதுரியமானதும், மிகவும் ஆபத்து நிறைந்ததுமான வேவுப் பணியில் ஈடுபடும் போராளிகள் தரும் தகவல்களைக் கொண்டே தாக்குதல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகின்றது. வேவு வீரர்களின் துணிகர சாதனைகள் மூலமே, நாம் பூநகரியில் பெரும் சமர் புரிந்து வெற்றியீட்ட முடிந்தது.



வேவுப்பணியில் ஈடுபடும் போராளிகளின் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து நிறைந்தது உயிருக்கு உத்தரவாதமில்லாதது. இந்தப் பணியின் போது எத்தனையோ அற்புதமான போராளிகளை நாம் பறிகொடுத்துவிட்டோம். இந்த அர்ப்பணிப்புக்களின் பயனாகவே நாம் போர்முனைகளில் பெரும் வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடிகின்றது.”
- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

நினைவுப்பகிர்வு:



ச.பொட்டு
புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

நன்றி: விடுதலைப்புலிகள் இதழ் (தை, 1994)




# உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது

**யாழ். மாவட்ட பாராளுமனற் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

17.03.2025

'நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின் உண்மைகள் ஆராயப்பட வேண்டும்' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத் தியுள்ளார்.

பாராளுமன்றில் இதனைக் குறிப்பிட்ட அவர், 'அவ்வாறான நடவடிக்கைகள் நம்பகத்தன்மையானதாக இருக்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டுள்ளார். 'மஹிந்தவின் ஆட்சியில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத்திற்கான முடிவை தீவிரமாக ஆதரித்தது'. 'அவ்வாறான நிலையில் உண்மையில் இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறும் செயன்முறைக்கு ஆதரவளிக்குமா? என்ற சந்தேகம் காணப்படுகிறது'. 'எனவே, கடந்த கால அரசாங்கங்களின் போக்கில் இருந்து அரசாங்கம் விடுபட வேண்டும்' என்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

'கடந்த காலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பல பொய்களும் பரப்பப்பட்டுள்ளன'.'தமிழ் மக்கள் உரிமைகளைக் கோரும் போது அது தொடர்பான போராட்டத்தை பயங்கரவாதம் என்று குறிப்பிட்டு வெளிவிவகார அமைச்சின் ஊடாகவே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன'.'தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் அந்த நடவடிக்கைகளை மாற்றியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. இன மோதல்கள் தொடர்பாக இதன் அணுகுமுறை என்ன?' என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.



“இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின், என்ன நடந்தது என்று ஆராய வேண்டும். அது உள்நாட்டு பொறிமுறையாக இருக்க முடியாது”சகலவற்றையும் உள்ளடக்கிய பொறிமுறையும், விசாரணை செயன்முறைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதுவே குறைந்தப்பட்ட தகுதியாக இருக்கின்றது' என்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

# பட்டலந்த போல வடகிழக்கில் இயங்கிய பல சித்திரவதை முகாம்கள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி வெளிக்கொண்டுவரவேண்டும்!

**மட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன்**

17.03.2025

பட்டலந்த சித்திரவதை முகாம் 37 வருடங்களுக்குப் பின்னர் வெளிவந்துள்ளது. இவ்வாறு வடக்கு கிழக்கில் இயங்கிய பல முகாம்களில் தமிழர்கள் படுகொலை மற்றும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் என்பதற்காக அதனை மூடி மறைத்துவிட்டு சிங்கள இளைஞர்கள் மற்றும் உங்கள் கட்சியினர் மாத்திரம் பாதிக்கப்பட்டார்கள் என்று கருத்து கொண்டு வந்திருப்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே தமிழ்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தேசிய மக்கள் சக்தி வெளிக் கொண்டுவர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.




மட்டு ஊடக மையத்தில் இன்று திங்கட்கிழமை (17) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது பேசும் பொருளாக ஊடகங்களிலும் நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் உரத்து ஒலித்துக் கொண்டிருக்கும் 1988 ம் ஆண்டு இயங்கிய பட்டலந்தை சித்திரவதை முகாம் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஜே.வி.பியின் இரண்டாம் கட்ட போராட்டத்தை மேற்கொண்ட போது அவர்களை அடக்குவதற்காகச் சட்டவிரோதமாக இந்த முகாம் செயற்பட்டு வந்திருக்கின்றது மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உச்சரிக் கப்பட்டுள்ளது.

1994 சந்திரிக்கா ஆட்சிக்கு வந்தபோது இந்த பட்டலந்தை முகாம் தொடர்பாக விசாரணை நடைபெற்றது. ஆனால் விசாரிக் கப்பட்ட கோவை திறக்கப்படாமல் இருட்டில் புதைத்து வைக் கப்பட்டிருக்கின்றதுடன் உண்மைகளும் புதைக்கப்பட்டுள்ளன.

37 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புதைக்கப்பட்ட உண்மைகள் புதைகுழியிலிருந்து வெளியில் வந்துள்ளது இந்த ஜே.வி. பி என்ற தேசிய மக்கள் கட்சி ஆட்சிக்கு வராவிட்டால் இந்த பட்டலந்த சித்திரவதை முகாம் வெளியில் வந்திருக்காது.

ஆகவே பாதிக்கப்பட்டவர்கள் இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதால் தான் இந்த சித்திரவதை முகாம் வெளியில் வந்திருக்கின்றது எனவே இது போன்ற வடக்கு கிழக்கில் பல சட்டவிரோத முகாம்கள் காணப்பட்டது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கிய மட்டக்களப்பு சத்திருக்கொண்டான் படைமுகாமில் 4 கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள் முதியோர்கள் பெண்கள் உட்பட 186 பொது மக்களைச் சித்திரவதை செய்து பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து ஒரே இரவில் படுகொலை செய்து குழிகளில் போட்டு நிரப்பினார்கள் அதில் ஒருவர் வெட்டுகாயங்களுடன் தப்பி வெளிவந்து உண்மைகளைத் தெரிவித்தார்.

இந்த சத்திருக் கொண்டான் முகாம் சித்திரவதை படுகொலை காணாமல் ஆக்கப்படுவதற்கு முக்கியமான முகாமாக இயங்கியது அவ்வாறே பல முகாம்கள் இயங்கியதுடன் கொண்டு செல்லப்படுபவர்கள் திரும்பிவராதளவுக்கு கல்லடி, கரடியனாறு, கொண்டைவெட்டுவான், உட்பட பல முகாம்கள் காணப்பட்டது.

ஜே.வி.பியினர் பாதிக்கப்பட்ட விடையம் அவர்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது ஏன் என்றால் தங்களுடைய தோழர்கள் சகாக்கள் கொல்லப்பட்ட விதம் சித்திரவதை செய்யப்பட்ட விதம் அதில் பங்கு கொண்ட முக்கிய புள்ளிகள் தொடர்பாக வெளியில் வந்துள்ளது.

சித்திரவதை என்பது சாதாரன விடையமல்ல அமிலத் தொட்டிகளில் இளைஞர்களைப் போட்டு கொலை செய்துள்ளனர். எங்களை பொறுத்தமட்டில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் சார்பாகச் செயற்படுகின்ற தமிழ் தேசிய கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பே இல்லை எண்ணிக்கை ரீதியாகச் சிறுபான்மையாக இருக்கின்றதனால் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது.

எனவே எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களது நீதியை வெளியில் கொண்டுவரமுடியாது ஆனால் 37 வருடத்திற்கு பின்னர் ஆட்சியை கைப்பற்றியதால் தான் இந்த சித்திரவதை முகாம் வெளி உலகத்துக்கு வந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதை பாலியல் பலாத்காரம் போன்ற அநீதிகள் வெளியில் கொண்டுவருவதாக இருந்தால் நாங்களும் ஆட்சியை கைப்பற்றினால் தான் முடியும்



ஆனால் நாங்கள் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட படுகொலை சித்திரவதை அநியாயம் அராஜகத்தை வெளிக் கொண்டுவருவதற்கு வழியே இல்லை எனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் நாங்கள் உருக்கமாகவும் நியாயமாகவும் கேட்பது உங்கள் தோழர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்காக பட்டலந்தை சித்திரவதை முகாமை கொண்டுவந்திருப்பதாக மற்றவர்களுக்குக் கூறாமல் வடக்கு கிழக்கு பிரதேசத்திலும் இவ்வாறான படுகொலைகள் சித்திரவதைகள் நடந்துள்ளது போன்ற விடையங்களை நீங்கள் வெளிக் கொண்டுவருவதாக இருந்தால் நீங்கள் ஒரு சமத்துவவாதிகள், சத்திருக்கொண்டான் பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி போன்ற பல கிராமங்களை சேர்ந்த மக்களை வெளிப்படையாகச் சுற்றிவளைப்பில் கைது செய்து கூட்டிச் சென்று ஒரே இரவில் படுகொலை இதற்கு நீதி இல்லை.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்ட பகலில் 180க்கு மேற்பட்டவர்கள் கொண்டு சென்று காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இன்றும் கூட புதைக்கப்பட்ட புதைகுழி எது என்று தெரியாமல் உள்ளது இவ்வாறு பல முகாம்களில் இப்படியான அநியாயங்கள் நடந்துள்ளன.

ஆகவே தேசிய மக்கள் சகத்தியினர் பட்டலந்தை முகாம் ஒரு ஆரம்பப்புள்ளியாக இருந்தால் வடக்கு கிழக்கில் முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகளை வெளிக் கொண்டு வரவேண்டும்.

ஆனால் உங்களது தோழர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் நீதியைத் தேடுகின்றீர்கள் எனவே சித்திரவதை முகாம்களில் தமிழர்களுக்கு இடம்பெற்ற அநியாயங்கள் கொண்டுவர வேண்டும் என அவர் தெரிவித்தார்.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**

# காவியுடை அணிய தகுதியில்லாத ஒரு சிலர் [?] புத்த சிலைகளை நில ஆக்கிரமிப்பின் எல்லைக் கற்களாக பயன்படுத்தப்படுகின்றனர்!

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

18.03.2025

காவியுடை அணிய தகுதியில்லாத ஒருசிலர் வடக்கில் புத்த பெருமானின் திருவுருவச்சிலைகளை நில ஆக்கிரமிப்பின் எல்லைக்கற்களாக பயன்படுத்தப்படுகின்றன. நீதிமன்ற கட்டளைகளை மீறி, அத்துமீறி கட்டியெழுப்பப்படும் விகாரைகள் ஒரு பௌத்த சின்னமல்ல ஊழலின் சின்னம். பௌத்த விகாரை ஒன்றையும், அசோகச்சக்கரத்தையும் தனது சின்னமாக கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களம், எவ்வாறு இலங்கையில் உள்ள எல்லா மதத்தவர்களின் தொல்லியலையும் நடுநிலைமையுடன் கையாளக்கூடிய திணைக்களமாக இருக்க முடியும் என கேள்வி எழுப்பிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மதத் திணிப்புக்கள் தொடர்பில் மத விவகாரங்கள் அமைச்சர் நேரடியாக வந்து பார்வையிடவேண்டும். அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

புத்தபிரானின் போதனைகளையும் அவரது பஞ்சசீலக் கொள்கைகளையும் கைவிட்ட சில பௌத்த பிக்குகள் அவர்களின் பின்னின்று இயக்கும் சில அரசியல்வாதிகளின் தயவுடன் இந்தநாட்டில் அமைதியின்மையையும், இனமுறுகலையும் ஏற்படுத்தி இலங்கையில் இன, மத நல்லிணக்கத்தை இல்லா தொழிதுள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இனப்பரம்பல் வீதத்தை மாற்றி அமைக்கமுயலும் பேரினவாத சக்திகளின் ஊதுகுழல்களாக செயற்பட்டு வரும் இந்த பௌத்தப் போக்கினைக் கடைப்பிடித்துவரும் சில பௌத்த பிக்குகள் இலங்கையின் அரசதிணைக்களங்களான, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தொல்பொருள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்பு படைகள் என்பவற்றை வெளிப்படையாகவே வழிநடத்தி வருவது கடந்த காலத்தில் வெளிப்படையாகவே அவதானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் பிரிவில், நாயாற்றுக்கு அண்மையில் உள்ள பழைய செம்மலை பிள்ளையார் ஆலயத்தை குருகந்த இரஜமகா விகாரை எனக்கூறி கொலம்பகே மேதானந்த கீர்த்தி சிறி தேரர் என்ற பௌத்தபிக்கு ஆலய வளாகத்திற்குள் கட்டடம் ஒன்றை அமைக்கத் தொடங்கினார். இக்கட்டட வேலைகளை இவ் ஆலயத்தின் எதிர்த்திசையில் இருந்த இராணுவ முகாமின் இராணுவத்தினர் மேற்கொண்டனர். இதுதொடர்பில் 31823 இலக்கத்தில் வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெற்று 2019.05.06இல் வழங்கப்பட்ட கட்டளைப்படி குறித்த இடத்தில் ஏனும் செயற்பாடுகள் செய்வதானால் சமாதானத்தைப் பேணி நாட்டில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளப் படவேண்டும் என நீதிமன்றால் கட்டளையிடப்பட்டது.

இருந்தபோதும் பிரதேச சபையின் தடை உத்தரவையும் மீறி இவ் ஆலயத்தில் கொலம்பகே மேதானந்த கீர்த்திசிறீ தேரரால் பிரமாண்டமான புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. நீதிமன்ற கட்டளையைமீறிய இந்த நடவடிக்கையை இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கு வேடிக்கை பார்த்திருந்தது. கொலம்பகே மேதானந்த கீர்த்திசிறீ தேரர் மரணமடைந்தார். இவரது உடலை கடற்கரையில் அடக்கம் செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்றும் கட்டளையிட்டது. அந்தக் கட்டளையைமீறி ஞானசாரதேரர் தலைமையான பௌத்ததுறவிகள் குழு அவ்வுடலை பழைய செம்மலை பிள்ளையார் ஆலய தீர்த்தக்குளத்தில் அடக்கம் செய்தனர். எதிர்த்து நின்ற தமிழ்மக்களையும், சட்டத்தரணிகளையும் இலங்கைப் பொலிசார் துரத்தி துரத்தி அடித்தனர். பொலிசாரால் தாக்கப்பட்டு ஆலய பூசகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முல்வைத்தீவு கொக்கிளாய் கிராமத்தில் நீதிமன்றக்கட்டளைகள் மீறப்பட்டு பௌத்தவிகாரை அமைக்கப்பட்டுள்ளது. குருந்தூர்மலை, அது ஒரு தொல்லியல் பிரதேசம் என்பதனை நாம் அனைவரும் அறிவோம். விடுதலைப்புலிகளின் காலத்தில் அங்கிருந்த தொல்பொருள் சின்னங்களுக்கு சிறிதளவேனும் பாதிப்பு ஏற்படவில்லை. அங்கு தொல்பொருள் சின்னங்களுள் ஒன்றாய் பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த திரிசூலம் ஒன்று காணப்பட்டது. அது பல நூற்றாண்டுகளாகவே சுற்றயல் கிராம மக்களால் வழிபடப்பட்டுவந்தது. கிராமியமுறையில் பொங்கல் செய்து படையலிட்டு பயபக்தியுடன் இம்மக்களால் வழிபடப்பட்டு வந்தது. ஆனால் இன்று பிடுங்கி எறியப்பட்டு இந்துமத வழிபாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன .

வவுனியா மாவட்டத்தில், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலை வன்னியில் வாழும் இந்துக்களின் ஆதிவழிபாட்டுத்தலம். கடந்த வருடம் இங்கு சிவராத்திரி வழிபாட்டிற்காக சென்றிருந்த மக்கள் இலங்கைப் பொலிசாரால் துரத்தியடிக்கப்பட்டனர். இங்கு வழிபாடு மேற்கொண்ட பரம்பரை பூசாரியும் இன்னும் 14 பேரும் சிவராத்திரியை வெடுக்குநாறிமலையில் அனுஸ்டித்ததற்காக, இரண்டு வாரங்கள்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்த வருடமும் சிவராத்திரி பூசைகள் மாலை 6. மணிக்கு பின் தொடர அனுமதிக்கப்படவில்லை.

இலங்கையில் தமிழ் இனத்திற்கு எதிராக, அவர்களுடைய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டு, அவர்களுடைய மரபு உரிமைகள் சிதைக்கப்பட்டு அம்மக்கள் நசுக்கப்பட்டு வரும் நிலைமை இன்னமும் தொடர்ந்து வருகின்றது. பௌத்த விகாரை ஒன்றையும், அசோகச்சக்கரத்தையும் தனது சின்னமாக கொண்ட இலங்கை தொல்பொருள் திணைக்களம், எவ்வாறு இலங்கையில் உள்ள அனைத்து மதத்தவர்களின் தொல்லியலையும் நடுநிலமையுடன் கையாளக்கூடிய திணைக்களமாக இருக்கமுடியும். இதுவே இலங்கையில் தொடரும் பௌத்த மேலாதிக்க ஆட்சியின் ஊழலின் சின்னம்.

எமது வழிபாட்டிடங்களில் எம்மை வழிபடவிடுங்கள். பௌத்தர்கள் அல்லாத இடங்களில் எதற்கு பாரிய பௌத்த விகாரைகள், இராணுவ முகாம்களில் பாரிய விகாரைகள் கட்டப்படுகின்றன. கடந்த கால ஆட்சியாளர்கள் இனவாதப் போக்குடன் அராஜகமான போக்குடன் செயற்பட்ட நிலைமைகளை இந்த அரசாங்கம் நீக்கவேண்டும். அமைச்சர் எமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மதத் திணிப்புக்கள் தொடர்பில் நேரடியாக வந்து பார்வையிட வேண்டும். அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# வவுணதீவில் விவசாயிகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

18.03.2025

மட்டக்களப்பு கண்டியனாறு, அடைச்சகல் ஆகிய குளங்களைப் புனரமைக்குமாறும் வருடாவருடம் ஒதுக்கப்படும் 3 ஆயிரம் கோடி ரூபாவிற்கு நிரந்தரமாக விவசாய வாய்க்கால்களைப் புனரமைக்குமாறு அரசாங்கம் மற்றும் விவசாய திணைக்களத்திடம் கோரி விவசாயிகள் வவுணதீவு பிரதேச செயலகத்தின் முன்னால் இன்று செவ்வாய்க்கிழமை (18) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பிரதேச விவசாயிகள் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்ததையடுத்து இன்று காலை 9 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலக்தின் முன்னால் விவசாயிகள் ஒன்று திரண்டனர்.





இதனையடுத்து மாகாண நீர்ப்பாசன திணைக்களமே வெளிப்படையாக வேலைகளைச் செய், கண்டியனாறு திட்டத்தை கைவிடப்பட்டதா? அரசாங்கத்தின் நிதியினை பசளை மானியம் நஷ்டஈடு என விரயம் செய்யவா அரச அதிகாரிகள்? ஏன் எமது இளைஞர் யுவதிகள் வெளிநாடு செல்லவேண்டும், மாகாண நீர்ப்பாசன திணைக்களமே? ஊப்பாற்றில் வீணாகச் செல்லும் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தத் திட்டங்களைத் தீட்டு, 1600 ஏக்கர் விவசாய காணி 4000 ஏக்கர் மேட்டுக்காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு ஏன் தயக்கம், விவசாயிகளை பிரித்தாலும் தந்திரம் வேண்டும், இரஜாங்க அதிபரின் அராஜகம் ஒழிக? பிரதேச அபிவிருத்தியின் நிலை என்ன பிரதேச செயலாளரே? மாவட்டத்தில் வெள்ள நிவாரணம் வழங்குவதே அதிகாரிகளின் கடமையா? விவசாயிகளே விழித் தொழுங்கள் போன்ற வாசகங்களை ஏந்தியவாறு சுமார் ஒருமணிநேரம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

www.sangathamil.ca

# யாழ். மாவட்டத்தில் காணிகள் இல்லாத 11,081 குடும்பங்கள்!

19.03.2025




யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்குக் காணிகள் இல்லை என்றும், காணிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கடந்த 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 823 குடும்பங்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 796 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 828 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 342 குடும்பங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 568 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 730 குடும்பங்களும், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 456 குடும்பங்களும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 855 குடும்பங்களும், உடுவில் பிரதே செயலர் பிரிவில் ஆயிரத்து 176 குடும்பங்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 526 குடும்பங்களும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 256 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 589 குடும்பங்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 109 குடும்பங்களும் என யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்கு காணிகளை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களுக்கும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 72 குடும்பங்களுக்கும் என மொத்தமாக 352 குடும்பங்களுக்கு இவ்வாறு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 729 குடும்பங்களின் கோரிக்கைகள்

# வடக்கு கிழக்கில் காணப்பட்ட பல தொழிற்சாலைகள் திட்டமிடப்பட்டு முடக்கப்பட்டுள்ளது!

### பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன்

19.03.2025



வடக்கு கிழக்கில் காணப்பட்ட பல தொழிற்சாலைகள் திட்டமிடப்பட்டு முடக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் (18) கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'குறிப்பாக யுத்தத்தில் அழிவடைந்த கைத்தொழில் துறைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை' என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்து கருத்துரைத்த கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, ஓட்டுச்சுட்டானில் உள்ள ஓடு உற்பத்தி தொழிற்சாலையின் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

'பண்டார வன்னியன் என்ற பெயரில் குறித்த ஓடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன'.

'அத்துடன் வெப்பத்தை குறைக்கும் வகையிலான திறன் கொண்ட செங்கல் உற்பத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 'அதேபோன்று பரந்தன் இரசாயன தொழிற்துறை வலயத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது'.

'அத்துடன் அரச உப்பு என்ற அடிப்படையில் ஆனையிறவில் இருந்து எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மேசை உப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

'அங்கு வடக்கு இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டார். இதற்கு தமது பாராட்டுக்களை தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், 'ஆனையிறவு உப்பு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பு என்ற வரலாற்று பெயரிலேயே உப்புகள் விநியோகிக்கப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

# நோயாளர் காவுவண்டி சாரதியை நியமிக்க கோரி ஐயன்கன்குளம் கிராமமக்கள் போராட்டம்!

19.03.2025



நோயாளர் காவுவண்டிக்கான நிரந்தர சாரதியை நியமிக்குமாறு கோரி போராட்டம் ஒன்று ஐயன்கன்குளம் கிராம மக்களால் இன்றையதினம் (19.03.2025) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஐயன்கன்குளம் பகுதியில் உள்ள ஐயன்கன்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் நிரந்தர சாரதி இல்லாமையால் குறித்த கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே அதற்கு தீர்வினை பெற்றுதருமாறு இன்றையதினம் (19) காலை ஐயன்கன்குளம் வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த அடிப்படை வசதிகள் குறைந்த கிராமத்தில் இருக்கும் மக்களுக்களுக்கான ஐயன்கன்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் அவசர நோய் நிலைகளுக்கு போனால் உடனடியாக மல்லாவி வைத்தியசாலை கொண்டு செல்லக் கூடிய வகையில் நோயாளர் காவுவண்டிக்குரிய சாரதி நிரந்தரமாக அங்கே பணியாற்றுவதில்லை எனவும், நோயாளர்காவு வண்டி இருக்கின்ற போதும் சாரதி சரியாக பணிக்கு இல்லாத காரணத்தினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், குறித்த சாரதி தான் நினைத்த பாட்டிலே லீவுகளை பெற்றுக் கொள்வதாகவும் தன்னை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு இவ்வாறு செய்வதாகவும் கூறி போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

எனவே உரிய வகையிலே குறித்த நோயாளர்காவு வண்டி சாரதியை நிரந்தரமாக நியமித்து அடிப்படை வசதிகள் குறைந்த கிராமத்திலே நோய்வாய்ப்படுகின்ற மக்களுக்கான உரிய சேவையை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்ததோடு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கான ஒரு மகஜரை குறித்த வைத்தியசாலையின் வைத்தியரிடமும் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களிடமும் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# மிருசுவில் படுகொலையாளியான முன்னால் சிறீலங்கா இராணுவத்தினரான சுனில் ரத்நாயக்கவிற்கு பயணத்தடை [?]

20.03.2025

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டு தமிழர்களை படுகொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரணதண்டனை விதிக்கப்பட்டு பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட குற்றாவளி சுனில் ரத்நாயக்கவிற்கு உயர்நீதிமன்றம் இன்று வெளிநாட்டு பயணத்தடை விதித்துள்ளது.

மார்ச் 2020 இல் சுனில்ரத்நாயக்கவிற்கு அவ்வேளை ஜனாதிபதியாக பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை பூர்த்தியாகியுள்ள நிலையிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ச வழங்கிய பொதுமன்னிப்பிற்கு எதிராக மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்த 9 பேர் 2000ம் ஆண்டு





டிசம்பர் 19ம் திகதி தங்கள் வீடுகளை பார்ப்பதற்காக மீண்டும் மிருசுவில் பகுதிக்கு சென்றனர். இவர்களில் பதின்ம வயதினரும், ஐந்து வயது சிறுவனும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர்கள் தங்கள் பகுதிக்கு திரும்பிவந்தவேளை இரண்டு இராணுவத்தினர் அவர்களின் கண்களை கட்டி மோசமாக தாக்கியுள்ளனர்.

ஒரு இளைஞன் அவர்களின் பிடியிலிருந்து தப்பினான். எனினும் ஏனைய 8 பேரும் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடல்கள் அருகில் உள்ள பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பகுதியில் மீட்கப்பட்டன.

# அனுர தமிழர் பகுதிகளில் மேலும் மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்

23.03.2025

கடந்த ஜனாதிபதி தேர்தலிலே நாடாளுமன்ற தேர்தலிலே அற்ப சலுகைகளிற்காக, இந்த இனவாத அரசாங்கத்திற்கு ,ஆதரவு வழங்கிய தமிழ் புத்திஜீவிகளும் இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள்.

அனுர ஒரு புறத்திலே தான் இனவாதத்திற்கு மதவாதத்திற்கு இடமளிக்கமாட்டேன் என சொல்லிக்கொண்டு, இங்கேமேலும் மேலும் இந்த பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த வளாகத்திற்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிட திறப்பு நடைபெறவிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியின்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

காணி உரிமையாளர்களும் இவ்வாறான தகவல் கிடைத்ததன் பேரில் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று இங்கே இராணுவத்தினரின்வாகனங்கள் அதிகளவில் வந்து ஏற்றி இறக்குகின்ற பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன, இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்பட்டு தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையிலே, இரண்டு நாட்களிற்கு முன்னர் கூட கொழும்பிலே காணி உரிமையாளர்களை அமைச்சர் சந்தித்து இது உங்களுடைய காணிகள் என சொன்னால் விடுவிப்போம் என ஒரு புறத்தில் கூறிக்கொண்டு, மறுபுறத்திலே அதே அரச இயந்திரம், இந்த சட்டவிரோத விகாரைக்குள் அமைக்கப்பட்ட கட்டிட திறப்பு விழாவிற்காக தங்களின் அரச வளங்களை பயன்படுத்திக்கொண்டிருப்பது என்பது, அனுர அரசின் இரட்டை முகத்தை காட்டுகின்றது.

அனுர ஒரு புறத்திலே தான் இனவாதத்திற்கு மதவாதத்திற்கு இடமளிக்கமாட்டேன் என சொல்லிக்கொண்டு, இங்கேமேலும் மேலும் இந்த பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர், அவருடைய தலைமையிலே முன்னெடுக்கின்றனர், பாதுகாப்பு அமைச்சரும் அவர்தான், பௌத்த விவகார அமைச்சரும் அவர்தான்.

எங்கள் மக்கள் இதனை புரிந்துகொள்ளவேண்டும், கடந்த ஜனாதிபதி தேர்தலிலே நாடாளுமன்ற தேர்தலிலே அற்ப சலுகைகளிற்காக, இந்த இனவாத அரசாங்கத்திற்கு, ஆதரவு வழங்கிய தமிழ் புத்திஜீவிகளும் இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள்.

இதனுடைய விளைவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு வந்து முடியும் என்பதை காலம்தான் சொல்லவேண்டும்.



இந்த திறப்பு விழா நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்பது போராட்டக்காராகளின் காணி உரிமையாளர்களின் கோரிக்கையாக உள்ளது எந்த வகையிலும் இது நியாயப்படுத்த முடியாத ஏற்றுக்கொள்ள முடியாத, ஆக்கிரமிப்பு நடவடிக்கை.

இந்த போராட்டத்திற்கு ஆதரவாக, யாழ்குடாநாட்டில் உள்ள மக்கள் பெருமளவிலே திரண்டு வரவேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

# யாழ். தையிட்டி விகாரையில் புதிதாக மற்றுமொரு ஆக்கிரமிப்பு கட்டடம்!

23.03.2025

யாழ்ப்பாணத்தில் உள்ள சர்ச்சைக்குரிய யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரையில் மேலுமொரு சட்டவிரோத கட்டடம் ஒன்று , இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு விகாரதிபதியிடம் கையளிக்கப்பட்ட நிலையில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை குறித்த கட்டடத்தில் பௌத்த மத வழிபாடுகள் இடம்பெற்றன

அந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தையிட்டி காணி உரிமையாளர்கள், அரசியல் தரப்புக்கள், பொதுமக்கள் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

திஸ்ஸ விகாரைப் பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டு பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் என்று பௌத்தசாசன அமைச்சர் சுனில் செனவி அறிவித்திருந்த நிலையில், விகாரை வளாகத்தில் மற்றுமொரு சட்டவிரோதக் ஆக்கிரமிப்பு கட்டடம் கட்டப்பட்டுள்ளமை அப்பகுதி மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை தையிட்டியில் திஸ்ஸ விகாரை வளாகத்தில் வேறுசில சட்டவிரோதக் கட்டடங்களை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் கடந்த ஆண்டு மே மாதமளவில் ஊடகங்களில் செய்திகளும் வெளியாகி இருந்தன.

குறித்த செய்திகளுக்கு யாழ் மாவட்டச் செயாளர் மருதலிங்கம் பிரதீபன் மறுப்புத் தெரிவித்திருந்தார். தான் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதாகவும், அவ்வாறான சட்டவிரோதக் கட்டடங்கள் எவையும் இல்லை என்றும் அவர் அக்கால பகுதியில் கூறியிருந்தார்.

ஆனால், இராணுவத்தால் அமைக்கப்பட்டுவந்த அந்த சட்டவிரோத பௌத்த ஆக்கிரமிப்புக் கட்டடங்களே இன்று மத வழிபாடுகளுக்குப் பின்னர் கையளிக்கப்பட்டன.அந்தக் கட்டடங்கள் பிக்குகள் தங்குவதற்கான மடாலயமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.



சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையில் தொடர்ச்சியாக கட்டிடங்கள் அமைக்கப்படுவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கையாலாகாத தன்மையை வெளிப்படுத்துவதாக பலரும் விமர்சித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தையே தடுத்து நிறுத்துவதற்குத் திராணியற்ற இந்த அரசாங்கம், எவ்வாறு திஸ்ஸ விகாரையை அப்புறப்படுத்தி, மக்களின் காணிகளை மக்களுக்கு உரிய தாக்கும் என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன.

# அன்னை பூபதியின் 37ஆம் ஆண்டு நினைவு மாதம் இந்தியப் பிரதமர் வருகை...!

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்

24.03.2025

ஓர் இனத்தின் அரசியல் விடிவிற்காகவும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகவும் உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை நடாத்தி, உயிர்த் தியாகம் செய்திட்ட உலகின் முதற் பெண்மணி என்ற வகையிலும் ஒரு சாதாரணக் குடும்பப் பெண் தனது தனிப்பட்ட வாழ்வைத் துறந்து, தனது நாட்டுக்காக முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் என்ற வகையிலும் அன்னை பூபதி அவர்களின் போராட்டம் பல விழுமியங்களைத் தொட்டு நிற்கின்றது.

அன்னை பூபதி ஒரு விடுதலைப் போராளி அல்லர். விடுதலைப் போராளி என்ற வகையில் தியாகி திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை ஈந்திருந்தார்.

ஆனால் போராளியாக இல்லாத ஒரு 56 வய தானா சாதாரண குடும்பத் தலைவி - தன்னைத் தன் மக்களுக்காக மட்டுமன்றி, தனது போராளிகளுக்காகவும் தன்னைத் தற்கொடையாக்கிய செயல் என்பதானது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தம் உயிரைத் தருகின்ற போராளிகளின் இலட்சியத்திற்காகத் தன் உயிரைத் தாரை வார்க்க முன்வந்த அன்னை பூபதியின் தியாகம் நாட்டுப்பற்றாளர்களின் தியாகத் திறவும், அர்ப்பணிப்பிற்கும் ஒரு குறியீடாகும் என்ற நோக்கில் தேசிய தலைவர் 2006ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19, ம் நாளை நாட்டுப்பற்றாளர் நாளாக பிரகடனப்படுத்தினார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987, யூலை 29இல் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் 2025, யூலை 29 ஆம் நாள் 38, வருடங்களை எட்டுகிறது.

அந்த ஒப்பந்தத்தால் ஈழவிடுதலைப் போராட்ட சரித்திரத்தில் இரண்டு உயிர்கள் அறவழிப் போராட்டமான உண்ணாவிரப் போராட்டத்தால் ஈகம் இந்தமண்ணில் நடைபெற்றதுதான் மிச்சம் ஒருவர் விடுதலைப் புலிகளின் வீரனான யாழ் மண் ஈன்ற தியாகி திலீபன் கடந்த 1987, செப்டம்பர் 26ஆம் நாள் அடுத்தவர்தான் இந்த தாயார் சாதாரண ஒரு குடும்பத்தலைவியான மட்டக்களப்பு அன்னை பூபதி 1988, ஏப்ரல் 19 ஆம் நாள் 37 ஆண்டு நினைவு வணக்க நாளாகும்.

அறப்போராட்டத்தின் வரலாற்றை கற்பித்த பாரதநாடு அந்த நாட்டுப்படைகளுக்கு எதிராக மேற்கொண்ட இருவரின் உயிர் தியாகங்களும் இந்தியாவின் முகத்தில் கரிபூசிய வரலாறாகவே இதனை கொள் ளலாம்.

இன்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தால் உயிர் நீத்த அன்னை பூபதியின் உண்ணாவிரதம் ஆரம்பித்த 1988, மார்ச் 19 இது 37, ஆண்டுகளை கடந்து அதே நினைவு மாதத்தில்தான் இந்தியப்பிரதமர் மோடி அவர்கள் எதிர்வரும் 2025, ஏப்ரல் 04இல் இலங்கைக்கு வருகிறார்.

அவரை சில சமயங்களில் சந்திக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வரலாற்றை அவருக்கு கூறவேண்டும். அப்படி கூறக்கூடியவர்கள் அவரை சந்திப்பார்களா என்பது அடுத்த வினா? அவர் இலங்கைக்கு வரும் நோக்கம் வேறாக இருந்தாலும் தமிழ் தலைவர்களை சந்திக்கும்போது மீண்டும் அந்த 38 வருடங்களுக்கு முன்பு செய்த ஒப்பந்தத்தையும், 13ஆம் வாய்ப்பாட்டையும் மீட்டிப் பார்ப்பார்கள். இந்தியப் பிரதமரும் அதனை மனனம் செய்வார் அதுதான் நடக்குமே தவிர வேறு எந்த விமோசனமும் ஈழத் தமிழர்களுக்கு கிடையாது படமும் ஊடக அறிக்கையும் மட்டுமே நாம் கண்ட அநுபவம்.

இதுவரை இலங்கை இந்திய ஒப்பந்தத் தால் இலங்கையில் மாறி மாறி ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகளான ஜே ஆர் ஜெயவர்தன, ஆர் பிரேமதாச, டீ பி விஜயதுங்க, சந்திரிகா, மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில் தற்போதைய அனுராவரை 38, வருடத்தை ஆட்சியில் கழித்தவர்கள் தமிழ்மக்களை ஏமாற்றியதே வரலாறு.



அன்னை பூபதியின் தியாக மரணம் தமிழ் மண் பற்றையும் உண்மையான உறுதியையும் கொண்ட இலட்சியப்பாதையையும் தமிழ் இனத்துக்கு அந்த தாயார் விட்டுச்சென்றுள்ளார். அவ்வாறானவர்களின் தியாகத்தை மறந்து இன்று ஈழத்தேசிய தமிழ் அரசியல் தலைவர்கள் என கூறும் போலி முகங்கள் தமிழ்த்தேசியத்தை சிதைக்கும் நோக்கில் செயல்படுவதுதான் ஈழத் தமிழினத்தின் சாவக்கேடு.

"தியாகிகள் சாகலாம் தியாகம் சாகாது"

# யாழ் தையிட்டியில் சட்டவிரோத கட்டடத்தை திறந்து வைத்த வடமாகாண சிறீலங்கா பிரதி பொலிஸ்மா அதிபர்!

24.03.2025

யாழ்ப்பாணத்தில் தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரையான திஸ்ஸ விகாரையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மண்டபம் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வடமாகாண சிறீலங்கா பிரதி பொலிஸ்மா அதிபர் தனபாலவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தி, சட்டவிரோதமான முறையில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில் , விகாரையை அகற்றி, தமது காணிகளை தம்மிடம் கையளிக்குமாறு காணி உரிமையாளர்கள் கோரி வருவதுடன், போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இருந்த போதிலும், விகாரை நிர்வாகம், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன், மடாலயம் ஒன்றினை எவ்வித அனுமதியும் பெறாது சட்டவிரோதமான முறையில் அமைத்து நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சட்ட ஒழுங்கை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிசார். அசமந்தமாக செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், சட்டவிரோத கட்டடத்தை பிரதி பொலிஸ்மா அதிபர் தனபால திறந்து வைத்துள்ளார்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபடும் மக்களை தொடர்ந்தும் பொலிசார் அச்சுறுத்தி வருகின்றனர். தமது காணிகளை கேட்டு போராடும் மக்களுக்கு எதிராக பிணையில் வெளியில் வர முடியாத சட்டத்தின் கீழ் வழக்குகளை தொடரவும் முயற்சித்து வந்தனர்

இந்நிலையில் பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு எதிராக கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மனிதவுரிமை ஆணைக் குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தற்



போதே மனித உரிமை ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான நிலையில் விகாரை நிர்வாகத்தின் சட்ட ரீதியற்ற செயற்பாடுகளுக்கு பொலிஸார் தொடர்ந்தும் துணை போவது குறித்து காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

**தமது தியாகத்தால் இந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்குமாக இருந்தால், அந்தச் சாவு இந்த விடுதலைப் போராட்டத்தை உந்தி முன் தள்ளுமாக இருந்தால், அந்தச் சாவை அணைத்துக்கொள்ள எமது போராளிகள் போட்டியிடுவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# இனப்படுகொலையாளிகள் மீதான பயணத் தடை: பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வரவேற்பு!

25.03.2025

இலங்கையில் தமிழர்கள் மீதான இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை ஆயுதப்படையின் முன்னாள் தலைவர் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள்தளபதி வசந்த கரன்னகொட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் இலங்கை இராணுவத்தின் சார்பாக செயற்பட்ட துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது பிரித்தானியா விதித்துள்ள தடை ஈழத் தமிழர்களின் நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று எனவும், அந்த அறிவிப்பை தாம் வரவேற்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ள சிறீதரன் எம்.பி, இந்த விடயம் குறித்து அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வுகளுக்கு முன்னதாக, இனப்படுகொலையின் பங்குதாரர்களான நால்வர் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள பயணத்தடை, காலம் தாழ்த்தியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீள அரும்பச் செய்திருக்கிறது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீது பேரினவாத அரசு வலிந்து நடத்திய போரின்போது மோசமான மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட இந்த நான்கு பேர் மீதும் பிரித்தானிய அரசு விதித்திருக்கும் தடையையும், சொத்து முடக்க அறிவிப்பையும், சர்வதேச நீதி கோரும் பயணத்தில் தமக்கு கிடைத்திருக்கும் ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே ஈழத் தமிழர்கள் பார்க்கிறார்கள்.

எண்பது வருடங்களுக்கு மேலாக கேட்பாரற்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் எண்ணங்களுக்கும் இறந்துபோன ஆத்மாக்களுக்கும் இந்தத் தடை அறிவிப்பு தமக்கான நீதியின் கதவு திறக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது.

காலனித்துவ ஆட்சி முடிவில், சுதேசிகளான தமிழர்களின்



இறைமையை பிறிதோர் இனத்தவரிடம் ஒப்படைத்துச் சென்றமை வரலாற்றுத் தவறு என்பதை உலகம் இப்போதாவது உணரத் தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றுள்ளது.

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அனுர அரசு மீண்டும் பொய்யான வாக்குறுதிகளுடன் தேர்தல் களத்தில்

## மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந்

25.03.2025

பத்தொன்பது வயதில் கைதுசெய்யப்பட்ட சிவகுமார் பார்த்தீபன் என்ற இருவர், முப்பது வருடங்கள் கடந்தும் இன்று 50 வருடங்கள் ஆகியும் விடுதலையடைய முடியாமல் சிறையில் உள்ளனர் என தெரிவித்துள்ள மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் ஆனால் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் என்பிபி தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் மீண்டும் தேர்தலிற்காக களத்தில் குதித்துள்ளனர் என தெரிவித்துள்ளார்.

மகசின் சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகள் சிலரை பார்த்த பின்னர் கருத்து தெரிவிக்கையில்இதனை குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

என்பிபி அரசாங்கம் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் வந்து ஆறு மாதங்களிற்கு மேல் ஆகிவிட்டது, இந்த ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக மக்களிற்கு சில உறுதிமொழிகளை வழங்கியிருந்தார்கள்.

அதில் நாங்கள் தொடர்ச்சியாக வேலை செய்துகொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை மிகவும் முக்கியமானது ஒன்று.

இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ,தொடர்ச்சியாக நாங்கள் போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அரசியல் கைதிகள் பல்வேறு ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர், இன்று 30 ஆண்டுகளிற்கு மேல் இந்த சிறைச்சாலைக்குள் பல அரசியல் கைதிகள் உள்ளனர்.

நான் அவர்களில் ஒரு சிலரை பார்ப்பதற்காக இங்கு வந்தேன். கிட்டத்தட்ட 19 வயதில் கைதுசெய்யப்பட்ட, பத்தொன்பது வயதில் கைது செய்யப்பட்ட சிவகுமார் பார்த்தீபன் என்ற இருவர், முப்பது வருடங்கள் கடந்தும் இன்று 50 வருடங்கள் ஆகியும் விடுதலையடைய முடியாமல் சிறையில் உள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக விஜித ஹேரத் அவர்களிடம் ஒக்டோபர் மாதம் நான், வலியுறுத்தியிருந்தேன் அதற்கு பதிலளித்த அவர் விடுதலை இடம்பெறுகின்றது அதற்கான வேலைகள் இடம்பெறும் என தெரிவித்திருந்தார்.

அதற்கு பின்னர் பிரதியமைச்சர் ஒருவரின் ஊடாக ஹர்ச நாணயக்கார அவர்களிற்கு எடுத்துக்கூறியிருந்தேன். அதற்குரிய பதில் எனக்கு கிடைக்கவில்லை.

அதன் பின்னர் பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கு பல்வேறு தகவல்களை அனுப்பியிருந்தேன், செய்திகளை அனுப்பியிருந்தேன், எத்தனையோ ஊடக சந்திப்புகள் ஊடாக அரசியல் கைதிகள் தொடர்பாக, அவர்களின் கஷ்டங்கள், ஏற்கனவே




வழங்கப்பட்ட வாக்குறுதி, மக்கள் ஆணை கிடைத்திருக்கின்றது அவர்களின் விடுதலை என்பது காலத்தின் கட்டாயம் என்பதை தொடர்ச்சியாக எடுத்துக்கூறிக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் இன்றுவரை இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மீண்டும் என்பிபி தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் தேர்தலிற்காக களத்தில் குதித்துள்ளனர்.

இவர்களிற்கு முதுகெலும்பு இருந்தால் அரசியல் கைதிகளின் விடுதலையின் பின்னர் இவர்கள் இந்த தேர்தலை எதிர்கொள்ளவேண்டும்.

தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டு பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டிராமல் இந்த சித்திரவதையை இத்துடன் நிறுத்தி அவர்கள் வாழ்வதற்கு அனுமதிக்கவேண்டும்.

இதற்கு முன்னர் விடுதலையான எந்தவொரு அரசியல் கைதியும் இந்த சமூகத்திலே எந்தவொரு பிழையான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டு அரசியல் இலாபம் தேடும் நோக்கிலே இந்த அரசாங்கம் நகரக்கூடாது.

அவர்களின் விடுதலைக்கு எந்த காரணமும் தடையாகயிருக்க வாய்ப்பில்லை, ஏனென்றால் இரண்டு வருடங்களிற்கு முன்னர் நாற்பத்தெட்டு பேர் இருந்தனர், 38 பேரின் விடுதலை இடம் பெற்றுள்ளது அதேபோல மிகுதி பத்துபேரின், விடுதலை நிச்சயமாக இடம்பெறக்கூடிய ஒன்றுதான்,

ஏனென்றால் அனைத்து அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியினால் அவர்களிற்கான பொதுமன்னிப்பை வழங்க முடியும், சட்டமா அதிபர் அவர்களிற்கு எதிரான வழக்குகளை தள்ளுபடிசெய்து அவர்களை விடுதலை செய்யலாம். ஏனென்றால் போதுமான வாக்குமூலங்கள் கிடையாது, சிங்களத்தில் பதியப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாக கொண்டுதண்டனை வழங்கப்பட்டுள்ளது,

தண்டனையாகயிருந்தால் கூட அவர்கள் இரண்டு ஆயள் தண்டனையை அவர்கள் எதிர்நோக்கி முடித்திருக்கின்றார்கள்....!

**சீற்றங்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை தடுத்து நிறுத்திய சிறீலங்கா பொலிசார்

26.03.2025

யாழ்ப்பாண பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் சிறீலங்காப் பொலிசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டமையால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.





வேலையில்லா பிரச்சினைக்கு தீர்வு கோரி இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களினால் இன்றைய தினம் புதன் கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

பேரணி ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மருத்துவபீடத்திற்கு முன்பாக பெருமளவான பொலிசார் குவிக்கப்பட்டு, பேரணி சென்ற மாணவர்களை தடுத்து நிறுத்தினர்.

உள்ளூராட்சி தேர்தல் காலமாக இக்கால பகுதி உள்ளமை யால், பேரணிகள், ஊர்வலங்கள் நடாத்த தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறியே மாணவர்களை பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

தாம், அரசியல் ஊர்வலம் செல்லவில்லை. வேலை வாய்ப்பு கோரியே போராட்டம் நடாத்துவதாக மாணவர்கள் கூறிய போதிலும், பொலிசார் பேரணியை தொடர்ந்து செல்லவிடாது தடுத்து நிறுத்தி இருந்தனர்.








# இல்மனைட் அகழ்வதற்கு அனுமதியில்லை

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

27.03.2025

முல்லைத்தீவு - கொக்கிளாய் தொடக்கம், செம்மலைவரை 'மிஸ்வெஸ்ட் ஹெவி சாண்ட் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனம் இல்மனைட் அகழ்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரியிருந்த நிலையில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கடுமையான எதிர்ப்பினையடுத்து இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்குவதில்லை என முடிவெடுக்கப் பட்டுள்ளது.

அத்தோடு ஏற்கனவே கொக்கிளாயில் இல்மனைட் அகழப்பட்ட இடங்களும் குறித்த நிறுவனத்தால் சீர்செய்யப்படவேண்டு மெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழக் கூட்டம் நேற்று (26) இடம்பெற்றபோதே இந்தவிடயம் தொடர் பில் பேசப்பட்டது. இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்கமுடியாது. கொக்கி ளாய் முகத்துவாரத்தில் ஏற்கனவே மக்களுக்குரிய 44 ஏக்கர் காணியில், மக்களின் அனுமதி பெறப்படாமல் இல்மனைட் அகழ்வு செய்யப்பட்டதால் அந்த இடங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அப்பகுதியில் இல்மனைட் அகழ்ந்தால், கடல் நீர் உட்புகும், கடற்றொழில் பாதிக்கப்படும், கரவலைத் தொழில் பாதிக்கப்படுமென அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு ஏற்கனவே அந்த மக்களால் தெரிவிக்கப்பட்டதைப் போலவே தற்போது அங்கு மிகமோசமான பாதிப்பு நிலமைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் முல்லைத்தீவு கரையோரப் பகுதிகளை அழிவுறச் செய்கின்ற நோக்கத்திலேதான் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது என்கின்ற கருத்தும் எமது மக்களிடம் காணப்படுகின்றது.

இவ்வாறு ஏற்கனவே இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப் பட்டதன் மூலம் கொக்கிளாயில் மிகமோசமாகப் பாதிக்கப் படுள்ள பொதுமக்களின் காணிகள் சீர்செய்து கொடுக்கப் படுவதுடன், பாதிப்புகளுக்கான நிவாரணங்களும் வழங்கப் படவேண்டும்.

இனி இவரும் இல்மனைட் அகழ்விற்கென முல்லைத்தீவிற்கு வருகைதரக்கூடாது. அதற்கு அனுமதிகளும் வழங்கப்படக் கூடாது. அதனை மீறிச் செயற்பட்டால் எமது மக்களின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருக்கும். என தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் இல்மனைட் அகழ்விற்கு அனுமதி வழங்கப் படுவதில்லை என்ற தீர்மானம் முல்லைத்தீவு மாவட்ட அபி விருத்தி ஒருங்கிணைப்புக் குழுவில் எடுக்கப்பட்டதுடன், ஏற் கனவே இல்மனைட் அகழ்வின்மூலம் பகுதியை குறித்த "மிட்வெஸ்ட் ஹெவி சான்ட்ஸ் பிறைவேட் லிமிட்டெட்" நிறு வனம் சீர்செய்யவேண்டுமென ஆளுநர் வேதநாயகத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டதுடன், தீர்மானமும் எடுக்கப்பட்டது


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# "எனது மகன் உயிருடன் இருக்கின்றார் என உறுதியாக நம்புகின்றேன்"

## 15 வருடங்களாக தேடும் பாலேந்திரன் ஜெயக்குமாரி

26.03.2025

எனது மகன் உயிருடன் இருக்கின்றார் என உறுதியாக நம்புகின்றேன் சாதாரண மக்களின் துயரங்களை நன்கு அறிந்தவர் என்ற அடிப்படையில், நீங்கள் எங்கள் கண்ணீரை கதறல்களை செவிமடுப்பீர்கள் என நாங்கள் கருதுகின்றோம் எங்கள் மன்றாட்டங்களை நீங்கள் செவிமடுப்பீர்கள் என நாங்கள் புதிய நம்பிக்கையை கொண்டுள்ளோம் என காணாமல்போன தனது மகனை 15 வருடங்களிற்கு மேலாக தேடிவரும் பாலேந்திரன் ஜெயகுமாரி சிறீலங்கா ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.







2008ம் ஆண்டு பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட தனது மகன் குறித்த விபரங்களை வெளியிடுமாறு கோரி பாலேந்திரன் ஜெயகுமாரி ஜனாதிபதி அலுவலகத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிடம் இன்று கடிதமொன்றை கையளித்துள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி புளியம்பொக்கனை மாசுரன்பட்டியில் வசிக்கும் நான், விதவை, நான்கு பிள்ளைகளின் தாய். ஆழ்ந்த வேதனையை ஏற்படுத்தக்கூடிய இழப்புகளை சந்தித்துள்ளேன்.

மோதலின் போது எனது இரண்டு புதல்வர்கள் கொல்லப்பட்டனர், எனது இளைய மகன் 2008 இல் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டார்.

எனது கணவருடன் சேர்த்து நான் எனது குடும்ப உறுப்பினர்கள் நால்வரை இழந்துள்ளேன். என்னுடன் எனது ஒரேயொருவர் மாத்திரம் இருக்கின்றார், எனது இளைய மகள், அவர் தற்போது என்னுடன் வசித்து வருகின்றார்.

மோதல்காலத்தில் நான் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுவில் உள்ள பைந்தமிழ் குடியிருப்பில் எனது இளைய மகன் பாலேந்திரன் மகிந்தன, எனது இளைய மகள் பாலேந்திரன் விபூசீகாவுடன் வசித்துவந்தேன்.

எங்களிற்கு வருமானம் உணவு ஆதரவிற்கு வேறு வழியில்லாததால், காபொ சாதாரண பரீட்சையை எடுத்த பின்னர் எனது மகன் 2008 டிசம்பர் 18ம் திகதி வேலை தேடி வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றார்.

ஆனால் அவர் வீடு திரும்பவில்லை. அவரை அதன் பின்னர் நான் பார்க்கவில்லை அதன் பின்னர் அவருடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் நாங்கள் இடம்பெயர்ந்தவேளை எனது மகன் எங்களை தேடினார் என பலர் தெரிவித்திருந்தனர். இவர்களில் இருவர் யுத்தத்தின் இறுதிதருணங்களில் கொல்லப்பட்டனர், என்னால் ஏனையவர்களை தொடர்பு கொள்ளமுடியவில்லை.

எனது மகனை வேறு மூவருடன் இராணுவத்தினர் கொண்டு செல்வதை பார்த்ததாக ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 15 வருடங்களாக நான் அவரை சாத்தியமான அனைத்து வழிகளிலும் தேடிவருகின்றேன், ஆனால் இதுவரை எனது மகன் குறித்து என்னால் எந்த தகவலையும் பெறமுடியவில்லை, மேலும் பல தரப்பினரிடம் நான் முறைப் பாடு செய்துள்ளேன்.

ஆனால் அவர் உயிருடன் இருக்கின்றார் என நான் உறுதியாக நம்புகின்றேன், நம்பதன்மை மிக்க வட்டாரங்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் நான் அவர் உயிருடன் இருக்கின்றார் என நம்புகின்றேன்.

ஐரிஸ் டைம்ஸ் செய்திதாள், 2009 இல் நீதியமைச்சினால் நிர்வகிக்கப்பட்ட அம்பேபுச புனர்வாழ்வு முகாம் குறித்து எழுதியிருந்தது. இளைஞர்கள் புனர்வாழ்வளிக்கப்படும் படமொன்றையும் அது வெளியிட்டிருந்தது. அந்த பத்திரிகை கிடைத்ததும் அதில் காணப்படுவது எனது மகன் என்பதை நான் உடனடியாக அடையாளம் கண்டேன்.

மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் 2012 இல் புனர்வாழ்வு பெறும் இளைஞர்களின் படங்களை உள்ளடக்கிய நூல் ஒன்றை வெளியிட்டிருந்தது, அதில் எனது மகனும் காணப்படுகின்றார். அந்த புகைப்படத்தை லங்கா புவத்தே எடுத்திருந்தது.

எனது மகன் காணாமல்போன பின்னர் இலங்கையை ஆளும் ஐந்தாவது ஜனாதிபதி நீங்கள், சாதாரண மக்களின் துயரங்களை நன்கு அறிந்தவர் என்ற அடிப்படையில் நீங்கள் எங்கள் கண்ணீரை கதறல்களை செவிமடுப்பீர்கள் என நாங்கள் கருதுகின்றோம் எங்கள் மன்றாட்டங்களை நீங்கள் செவிமடுப்பீர்கள் என நாங்கள் புதிய நம்பிக்கையை கொண்டுள்ளோம்

எனது மகனை கண்டுபிடிப்பது தொடர்பில் உங்களை தனியாக சந்தித்து பேசுவதற்கு எனக்கும் எனது மகளிற்கும் அனுமதி தாருங்கள்.

2009இல் நீதியமைச்சு நிர்வகித்த அம்பேபுஸ்ஸ புனர்வாழ்வு முகாம் பற்றிய விபரங்களை பெற உதவுங்கள்.

# மீனவர் விவகாரம்: "நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும்

### வடமாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் ஊடகப்பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா

26.03.2025

'மீனவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசமட்ட பேச்சுவார்த்தையினை முன்னெடுத்து நிரந்தர தீர்வு எட்டவேண்டும்' என்று இலங்கை இந்திய மீனவர்கள் வலியுறுத்துவதாக வடமாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் ஊடகப்பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினையை சுமூகமாக தீர்க்கும் நோக்கில் இருநாட்டு மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை இன்று (26) இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் பங்கேற்பதற்காக தமிழக மீனவ சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐவர் நேற்று (25) இலங்கைக்கு வந்துள்ளனர்.

அதேநேரம், வட மாகாணத்தில் உள்ள மீனவ சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 பேர் இன்றைய கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இந்தநிலையில் இருதரப்பு பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட வடமாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் ஊடகப்பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, 2016ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற இலங்கை இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இன்று வரை நடைமுறை படுத்தாமையினால் தமிழ்நாட்டிலும் வடமாகணத்திலும் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

எனவே கடந்த 9 வருடங்களாக நடவடிக்கை மேற்கொள்ளாததையிட்டு இருநாட்டு மீனவர்களும் இன்று கலந்துரையாடியுள்ளதாகவும் இந்த கலந்துரையாடல் மூலம் இலங்கை மீனவர்கள் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்த பிரச்சினையை அரசமட்ட பேச்சுவார்த்தையாக கொண்டு சென்று அதனூடாக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்படவேண்டும் என்பதை இரு அரசாங்கங்களுக்கும் வலியுறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் ஊடகப்பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்

**எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; என்பதே எமது குறிக்கோள். இதுவெ எமது தேசத்தின் அபிலாசை.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# மீனவர்களின் நலன்கருதி முல்லைத் தீவில் வெளிச்சவீடு அமைக்கப்படவேண்டும்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

28.03.2025

முல்லைத்தீவில் வெளிச்சவீடு இன்மையால் கடலுக்குச்செல்லும் மீனவர்கள் கரைதிரும்புவதில் பாரிய இடர்பாடுகளை நீண்ட காலமாக எதிர்நோக்கிவருகின்றனர்.



எனவே மீனவர்களின் நலன்கருதி முல்லைத்தீவு கடற் கரையில் வெளிச்சவீடொன்று அமைக்கப்படவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களால் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று முன் மொழியப்பட்டது.

குறித்ததீர்மானம் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டதுடன், இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தை கடற் றொழில் அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர் களுக்கும் அனுப்பிவைப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்பு முல்லைத்தீவு - மணற்குடியிருப்புப் பகுதியில் வெளிச்ச வீடொன்று இருந்தது. அது தற்போது முற்று முழுதாக அழி வடைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொக்கிளாயி லிருந்து பேப்பாரப்பிட்டிவரை சுமார் 74கிலோமீற்றர் வரையி லான கடற்கரையோரத்தில் அதிகளவான மீன்பிடித் துறைகளி லிருந்து, மீனவர்கள் கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச்சேரந்த மீனவர்கள், முன்பு வெளிச்சவீட்டின் உதவியுடன் இடர்பாடுகளின்றி கடலுக்குச் சென்று தமது துறைகளில் கரையேறுவார்கள்.

தற்போது வெளிச்சவீடு முற்றாக அழிவடைந்துள்ளதால் மீன வர்கள், கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கரையேறுவதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றில், கடற்றொழில் அமைச் சருடனும் பேசியுள்ளேன். அவரும் வெளிச்சவீட்டினை அமைப் பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித் திருந்தார்.



எனவே இந்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், ஏற்கனவே முன்பிருந்த இடத்தில் வெளிச்சவீட்டை அமைப்பதென ஒரு தீர்மானத்தை எடுப்பதுடன், அந்தத்தீர் மானத்தை கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கும் நடவடிக்கைக்காக அனுப்பிவைப் பதென்ற ஒரு தீர்மானத்தையும் எடுப்போம் - என்றார்.

இந்நிலையில் வெளிச்சவீடு அமைப்பதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், குறித்த தீர்மானத்தை கடற்றொழில் அமைச் சர் உள்ளிட்ட உரிய தரப்பினருக்கு அனுப்பிவைப்பதென்ற முடிவும் எடுக்கப்பட்டது.

# கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

28.03.2025

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப் பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரையும் விடுதலை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் வெள்ளிக்கிழமை (28) மலை 06.30 மணி முதல் 7.30 மணிவரை பல்கலைக் கழகத்திற்கு முன்பாக கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் களில் 27 பேரை பொலிசார் கைது செய்தனர். இவர்களில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப் பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (28) உத்தரவிட்டுள்ளது.

அத்தோடு மேலும் கைது செய்யப்பட்ட ஏனைய 25 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து சுகாதார அமைச் சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் உட்பட 27 பேரை நீதிமன்ற உத்தரவை மீறி சுகாதார அமைச்சின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றத்தின் பேரில் பொலிசார் கைது செய்திருந்தனர்.

இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீட மாணவர் சங்கம் வியாழக்கிழமை (27) பிற்பகல் சுகாதார அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப் பாளர் உட்பட ஒரு குழுவினர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் 8 பேர் சுகாதார அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தையில் ஈடுப்பட்டனர். பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் ஆர்ப் பாட்டங்கள் மற்றும் பேரணிகளைத் தடைசெய்யும் நீதிமன்ற உத்தரவை மீறி அவர்கள் தொடர்ந்து அதே இடத்தில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன் போது, பொலிஸார் 27 பேரை கைது செய்தனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாவத்தை நீத வான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (28) உத்தரவிட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட ஏனைய 25 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந் நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரையும் விடுதலை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் இன்று மாலை 06.30 மணி முதல் 7.30 மணிவரை பல்கலைக் கழகத்திற்கு முன்பாக கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



**நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்த ஒரு சக்தியாலும்எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# ஆனையிறவு உப்பின் அடையாளப் பெயரை உறுதி செய்க:

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை

29.03.2025

ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதி செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.




கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும், வட மாகாணத்தின் கைத்தொழிற் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தேவையான செயற்பாடாகும். 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் இன்று முதல் (29) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், 'ஆனையிறவு உப்பு' என்ற அடையாளப் பெயர் 'ரஜ லுணு' என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

வட மாகாணத்தின் கைத்தொழிற் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும்.

அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும் போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே, எமது




மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த 2025.03.18ஆம் திகதி, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 22.7இன் கீழ், ஆனையிறவு உப்பளம் குறித்து நாடாளுமன்றில் நான் கேள்வி எழுப்பியபோது வலியுறுத்தியதற்கு அமைவாகவும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை 'ஆனையிறவு உப்பு' என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதி செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உப்பின் பெயரில் ஆனையிறவைத் தவிர்ப்பதற்கு அது ஒன்றும் உப்புச்சப்பற்ற இடப்பெயர் அல்ல!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

30.03.2025

இலங்கையில் உப்பளங்களை நிர்வகித்து வருகின்ற தேசிய உப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் (National Salt Ltd) ஆனையிறவில் விளையும் உப்புக்கு றஜலுனு (Rajalunu) எனப் பெயரிட்டுள்ளது. இதுகாலவரையில் ஆனையிறவு உப்பு என விழிக்கப்பட்டு வந்த உப்பு றஜலுனு எனப் பெயரிடப்படும் அளவுக்கு, ஆனையிறவு ஒன்றும் உப்புச்சப்பற்ற இடப்பெயர் அல்ல. அது தமிழ் மக்களின் வரலாற்றில், வாழ்வியலில், பொருளியலில், போரியலில் பின்னிப்பிணைந்து அவர்தம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்துவிட்ட பெயர் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனையிறவில் தயாரிக்கப்படும் உப்புக்கு 'றஜலுனு' என்ற வர்த்தக நாமம் சூட்டப்பட்டிருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

யானைகள் தாவர உண்ணிகள் என்பதால் அவற்றின் உடலில் உப்புச்சத்துப் பற்றாக்குறைவு ஏற்படும்போது அவை உப்பைத் தேடிச்சென்று உண்பது வழமை.

ஆனையிறவு என்ற பெயர் நிலவுவதற்கு, வன்னிக் காட்டு யானைகள் உப்பைத் தேடிவந்த கடவை இது என்பதோடு, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வன்னியானைகள் ஏற்றுமதியின் பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பாதையாக இது அமைந்தமையுமே காரணமாகும்.

ஆனையிறவுக் கடல் நீரேரிகளின் கரைகளில் உப்பு விளைவதை அவதானித்த ஆங்கிலேயர்கள் 1938இல் ஆனையிறவு உப்பளத்தை அமைத்தனர். இங்கு விளையும் உப்பை மூலப் பொருளாகக் கொண்டு 1954இல் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உருவானது. உப்பளமும், இரசாயனத் தொழிற்சாலையும் யுத்தம் உச்சம்பெறும் வரைக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைவாய்ப்புகளை வழங்கியிருந்தன.

ஆனையிறவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக 1760இல் போர்த்துக்கேயர்கள் தங்களது இராணுவத் தளமாக இங்கு கோட்டையொன்றை உருவாக்கினர். பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று இலங்கையை ஆண்ட அந்நியர்களிடம் கைமாறிய இக்கோட்டை சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வசமாகியது. 1952இல் இக் கோட்டை நவீனவசதிகளுடன் கூடிய இராணுவத் தளமாக வடிவமைக்கப்பட்டது.

ஆனையிறவுப் பாதையால் பயணிப்பது என்பது மரணத்தின் குகையினூடாகச் செல்வதற்கு ஒப்பானது என்று தமிழ் மக்கள் நடுங்கும் அளவுக்கு பின்னாளில் இங்கு அமைந்திருந்த சோதனைச் சாவடிகள் திகிலூட்டுவனவாக அமைந்திருந்தன. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் இங்கு கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதும், பின்னர் இக் கோட்டை விடுதலைப்புலிகள் வசமாகி நிர்மூலமாக்கப்பட்டதும்




வரலாறு.

ஆனையிறவு இவ்வளவு முக்கியத்துவங்களோடு இடவமைவு காரணமாக இங்கு விளையும் உப்புக்கு முதல்தரமான உப்பு என்ற பெருமையையும் தேடிக்கொடுத்தது. ஆனால், இவற்றையெல்லாம் புறந்தள்ளி மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடாக றஜலுனு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. உப்பில்லாப் பண்டம் மட்டுமல்ல, அது றஜலுனு உப்பாக இருந்தால் தமிழ் மக்களின் மனோவுணர்வில் அதுவும் குப்பையில்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சியில் போராட்டம்

30.03.2025

கிளிநொச்சியில் வலிந்து காணாமல் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஞாயிற்றுக்கிழமை (30) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் அனைத்து மாவட்டங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், தங்கள் கையினால் கையளித்த தங்களது உறவுகளை மீட்டு தருமாறு கோரியும் சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தியும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.




www.sangathamil.ca

# "பிரித்தானியாவின் தடையை வரவேற்கிறோம்" வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம்

30.03.2025

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத்தடைவிதித்துள்ளதை நாம் வரவேற்பதுடன் சில முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இவ்வாறான தடைகள் விதிக்கப்படவேண்டும் என வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதிக்கு முன்பாக அவர்களால் இன்று ஞாயிற்றுக்கிழமை (30) முன்னெடுக்கப்பட்ட ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.






தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

இலங்கை அரசானது நீண்டகாலமாக பொறுப்புக்கூறலில் இருந்து தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகிறோம்.

இன்று போர்குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாக சில இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத்தடைவித்துள்ளதன் மூலம் இனப்படுகொலைஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை உணரமுடியும்.

இவ்வாறு தடைவிதிக்கப்படவேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்கவேண்டும்.

அனைத்துலக நாடுகளும் இந்த பயணத்தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி சர்வதேச பொறிமுறையூடாக எமக்கான நீதியை பெற்றுத்தரவேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு.

இதேவேளை 19காணாமல் போனஉறவுகள் உயிருடன் இருப்பதை தாம் கண்டுபிடித்துள்ளதாக காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினர் அண்மையில் கூறியுள்ளனர்.

அவர்கள் உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை. நாம் தந்த சாட்சியங்களில் ஒன்றை கூட அந்த அலுவலகத்தினர் கண்டுபிடிக்கவில்லை.

மாறாக சர்வதேசத்துக்கு அப்பட்டமான பொய்களை சொல்கின்றனர். பொய்யான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றனர்.

எனவே எமது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். இந்த நிலையில் சர்வதேச நீதிப்பொறிமுறையூடாகவே எமக்கான நீதியை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.









# யாழ். பல்கலைகழகத்தில் பகிடிவதையால் விஞ்ஞான பீட மாணவன் செவித் திறனைஇழந்தார்

31.03.2025

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் தலைக்கவசத்தால் தாக்கி, சித்திரவதை புரிந்தமையால் மாணவனின் காது கேட்கும் திறன் குறைவடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

மகன் மீதான தாக்குதல் சம்பவம் மற்றும் சித்திரவதை ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மகனின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்குமாறும் தந்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நாத்தாண்டியா பகுதியைச் சேர்ந்த மாணவனே பாதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு நடந்து வந்து கொண்டிருந்த புதுமுக மாணவனை விரிவுரைக்குச் செல்லவிடாமல் தடுத்த சிரேஷ்ட மாணவர்கள் சிலர், அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றி, தனியார் மாணவ விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வைத்து அம்மாணவனையும் வேறு சில புதுமுக மாணவர்களையும் கடுமையான சித்திரவதைகளுக்குள்ளாக்கிய சிரேஷ்ட மாணவர்கள், தலைக்கவசத்தாலும் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் காரணமாக மயக்கமடைந்த மாணவனுக்கு கட்டாயப்படுத்தி பனடோல் பருக்கிய பின்னர், தனியார் விடுதியிலிருந்து துரத்தி விட்ட பின்னர், கூகிள் வரைபட உதவியுடன் பல்கலைக்கழக விடுதிக்குச் சென்று அங்கிருந்து அம்புலன்ஸ் மூலமாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார்.

தாக்குதல் மற்றும் சித்திரவதைக்கு உள்ளான நாத்தாண்டிய பகுதியை சேர்ந்த மாணவன் ஒரு காது கேட்கும் திறனை



இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக நீதியானதும், சுதந்திரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உடலை விலும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்ட தனது மகனுக்குப் பாதுகாப்பளிக்குமாறு கோரியுள்ள தந்தை, பொலீஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

**சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்துக்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான – கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–




# கனடாவின் நீதி அமைச்சரானார் ஈழத்தமிழன் ஹரி ஆனந்தசங்கரி

15.03.2025

கனடா வரலாற்றில் முதல் முறையாக ஈழத்தமிழன் ஹரி ஆனந்தசங்கரி நீதி அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தனது 13 ஆவது வயதில் புலம் பெயர்ந்து அவர் கனடா சென்றார்.

கனடாவில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் வன் முறைகளை தீர்த்து வைக்கும் வகையில், கனடாவில் இளை ஞர்கள் சேவை நிலையமொன்றை ஆரம்பித்ததுடன், கனடா தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளிலும் அவர் பெரும் பங் களிப்பை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில், கனடாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளு மன்ற தேர்தலில் ஒன்ராரியோ மாகாணத்தில் ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதியில் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் இரண்டாவது முறையாக ஹரி ஆனந்தசங்கரி லிபரல் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினராகியிருந்தார்.

இந்நிலையில் கனடாவின் 24 ஆவது பிரதமராக மார்க் கார்னி 14.03.2025 அன்று பதவியேற்றார்.

அதனை தொடர்ந்து புதிய அமைச்சரவை பதவியேற்பின் போது ஹரி அனந்தசங்கரி கனடாவின் நீதி அமைச்சராகவும், அட்டர்னி ஜெனரலாகவும், மற்றும் கிரவுன் - இனிஜினஸ் ரிலேஷன்ஸ் மற்றும் வடக்கு விவகாரங்கள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்



# மீண்டும் திருக்றளில் உறுதிமொழியேற்று அமைச்சரான கனடியத் தமிழர் விஜய் தணிகாசலம்

19.03.2025

19.03.2025 புதன்கிழமையன்று ஒன்ராரியோ மாநில முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களால் விஜய் தணிகாசலம் அவர்கள் சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். விஜய் தணிகா சலம் அவர்கள் மூன்று முறை ஒன்ராரியோ மாநிலத்தின் ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதியின் சட்டமன்ற உறுப்பின ராகவும் மூன்று முறை இணை அமைச்சராகவும் பொய்யா மொழிப் புலவரின் உலகப் பொதுமறையாம் "திருக்குறள்" மீது பதவியேற்பு உறுதிமொழி எடுத்து தனது பதவிகளை ஏற்றிருந் தார். புலம்பெயர்ந்த கனடியத் தமிழர்களின் வரலாற்றிலும், தெற்காசியாவிற்கு வெளியேயுள்ள தமிழர்கள் மத்தியிலும் திருக் குறள் மீது தனது பதவியேற்பு உறுதிமொழியை எடுத்துக் கொண்ட ஒரே அரசியல்வாதியாக விஜய் தணிகாசலம் அவர்கள் மட்டுமே விளங்குகிறார் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.



இவர், 2018ஆம் ஆண்டு ஸ்காபரோ றூஜ் பார்க்கின் முதலாவது தமிழ், மாநில சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவாகி வரலாறு படைத்தார். அத்துடன், மீண்டும் 2022ஆம் ஆண்டு பெரு வாரியான மக்களின் ஆதரவுடன் அதே பகுதிக்கான சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2023இல் போக்குவரத் துத் துறைக்கான இணை அமைச்சராகப் பதவி உயர்த்தப்பட்ட இவர், 2024இல் வீட்டுவசதித்துறைக்கான இணை அமைச் சராகப் பதவியேற்று, இன்று சுகாதார அமைச்சின் உளநலத் துறையின் இணை அமைச்சராக சமூகத்துக்கான தனது அர்ப்பணிப்புடனான பணியைத் தொடங்குகிறார்.

தனது சமூகத்தின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கை, தமிழர் பாரம்பரியத்தின் மீதுள்ள பெருமிதம் ஆகியவையே அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்களின் தலைமைத்துவப் பண்பை வரையறுக்கும் கூறுகளாகும். இவர் 2021ஆம் ஆண்டில், இலங்கையில் தமிழ் மக்களுக்கு நேர்ந்தது இனவழிப்பு எனவும் அதை புலம்பெயர்ந்த தமிழர்களும் ஒன்ராரியோ வாழ் மக் களும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தி விழிப்புணர்வு அளிக் கவும், நிரந்தர தீர்வைப் பெறவும், தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டத்தினைக் கொண்டுவந்தார். ஒன்ராரியோ மாநிலம் இலங்கையில் தமிழின அழிப்பு நடைப்பெற்றென்பதை அங் கீகரித்த புலம்பெயர் தேசங்களில் முதல் பிராந்தியமாக விளங் குகிறது. இது தமிழ் மக்களுக்கு ஒரு வரலாற்றுத் தருணமாகும். மேலும், நவீன வசதிகளுடனான தமிழ் சமூக மையத்துக்கான முன்னெடுப்பையும் அதற்கு ஆதரவளிப்பதற்காக ஏறத்தாழ 12 மில்லியன் நிதியைப் பெறுதல் போன்ற முயற்சிகளிலும் தமிழ் சமூகத்துக்கான இவரது பங்களிப்பு அளப்பரியது. தனது தொகு திக்குள்ளும் அதற்கு வெளியேயும் ஒன்ராரியோ மக்களுக்கான சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான இவரது சிறந்த செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

தனது சமூகத்திற்கும், ஒன்ராரியோ மாநிலத்தின் நலனுக்கும் அயராது பாடுபடும் விஜய் அவர்கள், ஸ்காபரோ நிலக்கீழ் தொடரி வழித்தட விரிவாக்கம், அப்பகுதியில் முதலாவது மருத்துவப் பள்ளியை நிறுவியமை, ஸ்காபரோ சுகாதாரக் கட்டமைப்பின் மீள்மேம்பாடு போன்ற பல மாற்றங்களைத் தனது பிரதேசத்தில் கொண்டுவந்ததில் முக்கிய பங்காற்றியுள்ளார். அத்துடன், 2023 ஆம் ஆண்டில் பொதுப் போக்குவரத்துத்துறையில் கொண்டுவரப்பட்ட "ஒற்றைக் கட்டணத்" திட்டத்தைத் தொடக்கி வைத்ததன் மூலம், பயணச் செலவினைக் குறைத்து, பய







ணிகள் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 1600 டொலர்களைச் சேமிப்பதற்கான வழியினையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கடந்த ஆண்டு இவர் வீட்டுவசதித்துறைக்கான இணை அமைச்சராகப் பதவி வகித்தபோது மாநிலத்துக்கான குடியிருப்பு வசதிகளில் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்ட வீடுகள் உட்பட்ட புதுமை மிகு முறையில் குடியிருப்பு நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகளை முன்னகர்த்தியிருந்தார்.

14 வயதில் கனடாவிற்கு புலம்பெயர்ந்த ஓர் ஈழத்தமிழ் மகன் இன்று கனடாவின் ஒன்ராரியோ மாநிலத்தில் அமைச்சராகப் பதவிவகிப்பதுடன் தமிழ் சமூகத்தின் அடையாளமாகவும் ஒன்ராரியோ மக்களினது குரலாகவும் கடமையாற்றுவதை யிட்டு நாம் அனைவரும் பெருமையடைகின்றோம். அனைத் திலும் புதுமையைப் புகுத்தல், சேவை மனப்பான்மை, அவற் றுக்கான தளராத நிலைப்பாடு ஆகியவற்றின் மூலம் அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தனது சமூகத்திலும் ஒன்ராரியோ மாநிலமெங்கும் நிலைத்த மாற்றத்தினை ஏற்படுத்துவதிலும் உறுதியாகவுள்ளார். இவரது தலைமைத்துவப் பண்பு அனை வரையும் ஈர்ப்பதுடன், ஏனையோருக்கும் ஓர் உந்துவிசையாக விளங்குகிறது.



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்**
**நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,**
**எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# கனடாவின் மக்கள் தொகை 41.5 மில்லியனாக உயர்வு!

20.03.2025

கனடாவின் மொத்த மக்கள் தொகை 2025 ஜனவரி 1 நிலவரப்படி 41,528,680 ஆக உயர்ந்துள்ளது என கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் (அக்டோபர் 1, 2024 முதல் ஜனவரி 1, 2025 வரை) மக்கள் தொகை 63,382 அதிகரித்துள்ளது.

வளர்ச்சி வீதம் 0.2% ஆக உள்ளது, இது 2020ம் ஆண்டில் கொரோனா தொடர்பான பயணக் கட்டுப்பாடுகளுக்கு பின்னர் மிகக் குறைந்த வளர்ச்சியாகும்.

2023 மூன்றாம் காலாண்டில் (Q3 2023), மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்துள்ளது.

இப்போது, வளர்ச்சி வீதம் மந்தமடைந்து வருகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்றாண்டுகளில் பணிநிலை குடியேறிகள் (Non-Permanent Residents - NPR) தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில், இப்போது முதல் முறையாக குறைந்துள்ளது.

2024 அக்டோபர் 1க்கு ஒப்பிடும்போது, 2025 ஜனவரி 1க்குள் 28,341 பணிநிலை குடியேறிகள் குறைந்துள்ளனர்.

2024ம் ஆண்டில் மொத்தம் 744,324 பேர் கனடாவில் குடியேறியுள்ளனர்.




# கனடாவில் ஏப்ரல் 28ஆம் திகதி தேர்தல் கனடியப் பிரதமர் மார்க் கார்ணி அறிவிப்பு

23.03.2025

கனேடிய பிரதமர் மார்க் கார்ணி இன்று ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தலை அறிவித்தார். எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு முன்னதாக ஐந்து வார தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார்.




அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் கொள்கைகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய அவசியம் இருப்பதால், பதவியேற்ற ஒன்பது நாட்களுக்குள் தேர்தலை நடத்துவதாக கார்ணி கூறினார்.

ஜனாதிபதி டிரம்பின் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நமது இறையாண்மைக்கு அவர் விடுத்த அச்சுறுத்தல்கள் காரணமாக, நமது வாழ்நாளின் மிக முக்கியமான நெருக்கடியை நாம் எதிர்கொள்கிறோம் என்று கார்ணி கூறினார்.

கனடாவைப் பாதுகாக்க இன்னும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. கனடாவில் முதலீடு செய்ய, கனடாவைக் கட்டியெழுப்ப, கனடாவை ஒன்றிணைக்க வேண்டும் என்றார்.

அதனால்தான் நான் எனது சக கனடியர்களிடமிருந்து வலுவான ஆணையைக் கேட்கிறேன். பாராளுமன்றத்தைக் கலைத்து ஏப்ரல் 28 ஆம் திகதி தேர்தலுக்கு அழைப்பு விடுக்குமாறு கவர்னர் ஜெனரலை நான் கேட்டுக் கொண்டேன்.

அதற்கு அவர் சம்மதித்துள்ளார். என்று கனடாவின் அரச தலைவரான பிரிட்டன் மன்னர் சார்லஸின் தனிப்பட்ட பிரதிநிதியான கவர்னர் ஜெனரல் மேரி சைமன் தேர்தலுக்கான தனது கோரிக்கையை அங்கீகரித்த பின்னர் கார்ணி செய்தியாளர்களிடம் கூறினார்.

ஜனாதிபதி டிரம்ப் கனடா ஒரு உண்மையான நாடு அல்ல என்று கூறுகிறார். அமெரிக்கா நம்மை சொந்தமாக்கிக் கொள்ள அவர் நம்மை உடைக்க விரும்புகிறார். நாங்கள் அதை நடக்க விடமாட்டோம் என்று கார்னி கூறினார்.



துரோகத்தின் அதிர்ச்சியிலிருந்து நாம் மீண்டுவிட்டோம். ஆனால் நாம் கற்றுக்கொண்ட பாடங்களை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. நாம் நம்மைக் கவனித்துக் கொள்ள வேண்டும். நாம் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றார்.

பின்னர் கேள்விகளுக்கு பதிலளித்த மார்க் கார்ணி, அமெரிக்க ஜனாதிபதி கனடாவின் இறையாண்மையை அங்கீகரிக்கும் வரை டிரம்பை நேரில் சந்திக்கப் போவதில்லை என்று கூறினார்.

# பொறுப்புக்கூறலை நோக்கிய முக்கியமான நடவடிக்கை: பிரிட்டனின் தடைகள் குறித்து கனடாவின் நீதியமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி

25.03.2025

இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள கனடாவின் நீதியமைசர் திரு. ஹறி ஆனந்தசங்கரி இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கை இது என தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது. இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்துள்ளதை நான் வரவேற்கின்றேன். இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கைஇது.

2023 இல் கனடா மகிந்த ராஜபக்ச கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக விதித்த தடைகளை தொடர்ந்து பிரிட்டனும் தடைகளை விதித்துள்ளது. இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் கலாச்சாரத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கனடா தொடர்ந்து பாடுபடும்.





# வாகன உற்பத்தித்துறைத் தொழிலாளர் பயிற்சிக்கு ஒன்ராரியோ மூன்று மில்லியன் முதலீடு

26.03.2025

மின்வாகன உற்பத்தி மற்றும் இருவிசை (Hybrid) வாகன உற்பத்திக்கு மாறுவதற்கு உறுதுணையாக வாகன உற்பத்தித் துறைத் தொழிலாளர்களுக்கு இலவச பயிற்சியளிக்கும் பொருட்டு முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களின் ஒன்ராரியோ அரசு 3 மில்லியன் டொலர்களை ஒதுக்குகிறது. வானக உற்பத்தித்துறையில் ஒன்ராரியோ மாநிலத்தை உலகில் வலுவான முன்னணி நிலையில் வைப்பதற்கு இம்முயற்சி உதவுவதுடன் மின் வாகன உற்பத்தித்துறையின் கட்டண அதிகரிப்புகளுக்கு மத்தியிலும் வேலைவாய்ப்புகளைப் பாதுகாக்க வழிவகுக்கும்.

“வாகன உற்பத்தித்துறையில் ஒன்ராரியோ முன்னணி வகிக்கிறது. இது எமது தொழிலாளர்கள் எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய தொழில்சார் திறனைப் பெற்றிருப்பதை உறுதிப் படுத்த உதவுகிறது” என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

ஒன்ராரியோவின் வாகன உற்பத்தித்துறையில் 700,000 இற்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்டுள்ள நிலையில், இம் முதலீடானது உலகளாவிய வர்த்தக சவால்களையும் போட்டி நிலையையும் தொழிலாளர்கள் எதிர்கொள்வதற்கும் அதற்கு ஈடுகொடுக்கும் நிலையிலும் அவர்களை வைத்திருக்க உதவும். இந்த நேரடி பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், தொழிலாளர்கள் வேகமாக வளர்ந்து வரும் துறையில் சிறந்து விளங்கத் தேவையான நிபுணத்துவத்தைப் பெறுவார்கள்.



# சட்டமூலம் 104: தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை மீதான வழக்கை கனடா உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது

## விஜய் தணிகாசலம், ஒன்ராரியோ மாநில சட்டமன்ற உறுப்பினர்

27.03.2025

சட்டமூலம் 104ஐ எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்களால் கனடா மேன்முறையீடு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கனடா உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்துள்ளது. இது கனடா வாழ் தமிழர்களுக்கு மட்டுமல்ல, இன அழிப்பினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள முனையும் உலகெங்கிலுமுள்ள தமிழர்களுக்கும் அவர்களின் தலை முறையினருக்குமான கல்வி அறிவூட்டலுக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.





இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, ஒவ்வொரு ஆண்டும் மே 12 முதல் 18 வரை ஒன்ராரியோவில் தமிழின அழிப்புத் தொடர்பான அறிவு புகட்டல் வாரமாக அங்கீகரிக்கப்பட்டு, பள்ளிகள், கல்வியாளர்கள், தமிழ் சமூகம் மற்றும் அனைத்து ஒன்ராரியோ மக்களும் தமிழின அழிப்புப் பற்றி கற்றுக்கொள்ள இச்சட்டம் வழியமைக்கிறது.



VIJAY THANIGASALAM, MPP

FOR IMMEDIATE RELEASE

March 27th, 2025

**Supreme Court of Canada Rejects The Appeal Against Bill 104: Tamil Genocide Education Week, Act**

**Toronto, ON –** The Supreme Court of Canada has dismissed the appeal made by Tamil genocide deniers against Bill 104, Tamil Genocide Education Week, Act. This is a major victory for the Tamil people in Canada and across the world and a key step towards healing and education for future generations.

This historic decision ensures that the week of May 12th - 18th each year will continue to be recognized in Ontario as Tamil Genocide Education Week allowing schools, educators, the Tamil community, and all Ontarians to learn about, and to maintain their awareness of the Tamil genocide.

I am grateful to Premier Doug Ford, my legislative colleagues, over 60 Tamil organizations, community members, and especially the Tamil youth whose tireless efforts helped defend Bill 104. The Supreme Court of Canada's historic decision recognizes the innocent lives lost and serves as a milestone in the global movement for justice for the Tamil genocide.

Yours Truly,

Hon. Vijay Thanigasalam
Member of Provincial Parliament
Scarborough-Rouge Park

VIJAY THANIGASALAM, MPP

உடனடி வெளியீடு

மார்ச் 27, 2025

**சட்டமூலம் 104: தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை மீதான வழக்கை கனடா உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது**

சட்டமூலம் 104ஐ எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்களால் கனடா மேன்முறையீடு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கனடா உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்துள்ளது. இது கனடா வாழ் தமிழர்களுக்கு மட்டுமல்ல, இன அழிப்பினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள முனையும் உலகெங்கிலுமுள்ள தமிழர்களுக்கும் அவர்களின் தலைமுறையினருக்குமான கல்வி அறிவூட்டலுக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, ஒவ்வொரு ஆண்டும் மே 12 முதல் 18 வரை ஒன்ராறியோவில் தமிழின அழிப்புத் தொடர்பான அறிவு புகட்டல் வாரமாக அங்கீகரிக்கப்பட்டு, பள்ளிகள், கல்வியாளர்கள், தமிழ் சமூகம் மற்றும் அனைத்து ஒன்ராறியோ மக்களும் தமிழின அழிப்புப் பற்றி கற்றுக்கொள்ள இச்சட்டம் வழியமைக்கிறது.

இத்தருணத்தில், ஒன்ராறியோ முதல்வர் டக் ∴போர்ட் அவர்களுக்கும், எனது சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமூலம் 104 ஐப் பாதுகாப்பதில் அயராது அர்பணிப்புடன் பணியாற்றிய அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோருக்கும் நான் மிகவும் நன்றியுடையவனாயுள்ளேன். கனடா உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தீர்ப்பு, இழந்த அப்பாவி உயிர்களுக்கான நீதியையும், நடைபெற்ற தமிழின அழிப்புக்கான நீதிகோரலுக்கான செயற்பாட்டுக்கும் வலுச் சேர்க்கிறது.

இவ்வண்ணம்,

விஜய் தணிகாசலம்,
ஒன்ராறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ - றூஜ் பார்க்

இத்தருணத்தில், ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களுக்கும், எனது சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமூலம் 104 ஐப் பாதுகாப்பதில் அயராது அர்பணிப்புடன் பணியாற்றிய அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோருக்கும் நான் மிகவும் நன்றியுடையவனாயுள்ளேன். கனடா உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தீர்ப்பு, இழந்த அப்பாவி நீதிகோரலுக்கான செயற்பாட்டுக்கும் வலுச் சேர்க்கிறது.

# அமெரிக்காவுடனான உறவுகள் முடிவிற்கு வந்துவிட்டது

## கனேடியப் பிரதமர் மார்க் கார்ணி

28.03.2025

அமெரிக்காவுடனான ஆழமான உறவுகளின் யுகம்முடிவிற்கு வந்துவிட்டது என கனடா பிரதமர் மார்க் கார்ணி தெரிவித்துள்ளார்.

கனடாவுடனான உறவுகளை டிரம்ப் முழுமையாக மாற்றிவிட்டார் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மார்க் கார்ணி எதிர்காலத்தில் எவ்வாறான வர்த்தக உடன்பாடுகள் ஏற்பட்டாலும் இருநாடுகளிற்கும் இடையிலான உறவுகளில் மாற்றம் ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

நமது பொருளாதாரங்களின் ஆழமான ஒருங்கிணைப்பு, இறுக்கமான பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை அடிப்படையாகொண்ட இரு நாடுகளிற்கும் இடையிலான உறவு பழைய உறவு முடிந்துவிட்டது என கனடா பிரதமர் மார்க் கார்ணி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் கார்வரிகள் நியாயப்படுத்த முடியாதவை என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மார்க் கார்ணி, அவை இரண்டு நாடுகளிற்கும் இடையில் ஏற்கனவே உள்ள உறவுகளை மீறும் செயல் என குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் டிரம்பின் புதிய வரிகளிற்கு எதிரான பதில் நடவடிக்கையை அடுத்தவாரம் அறிவிப்போம், வரிகளிற்கு எதிராக போராடுவது, பாதுகாப்பது கட்டியெழுப்புவதே எங்கள் வழிமுறை எனகனடா பிரதமர் மார்க் கார்ணி தெரிவித்துள்ளார்.



# ஒன்ராரியோவைத் தாக்கிய உறை பனிமழை: பல இலட்சக் கணக்கான வீடுகளுக்கு மின் தடை

30.03.2025

ஒன்ராரியோ மாநிலத்தின் பல பகுதிகளில் கடும் உறை பனிமழை காரணமாக மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் விழுந்து, ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான வீடுகள் மின்சாரமின்றி தவிக்க நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மாகாண மின்சார அமைப்பான Hydro One தெரிவித்ததன்படி, ஞாயிற்றுக்கிழமை மதியம் மட்டுமே 3.5 இலட்சத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் மின்சாரமின்றி இருந்தனர்.

சில பகுதிகளில் மக்கள் விரைவில் மின் இணைப்பு பெற முடியாது எனவும் தெரிவித்தனர்.






# உலக நாடுகளில் உள்ள தமிழ்ச் சுவடிகள் மின் பதிப்பாக்கம் செய்ய பழ. நெடுமாறன் வேண்டுகோள்

15.03.2025

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழக அரசின் 2025 - 2026 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அறிவித்திருக்கிறார். மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களையும் அவற்றுக்கான நிதி ஒதுக் கீடுகளையும் அறிவித்திருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் வரலாற்றின் தொன்மையை உலகறியச் செய்யும் திட்டங்கள், ஐ.நா. பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 193 உலக நாடுகளின் அலுவல் மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்ப்புத் திட்டம், 500 தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடும் திட்டம், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப நூல் களைத் தமிழ்மொழியில் வெளியிடும் திட்டம், தமிழ்நாடெங்கும் அரசு நடத்தும் புத்தகக் கண்காட்சிகளை இந்தியாவின் பிற மாநில முக்கிய நகரங்களிலும், வெளிநாடுகளிலும் நடத்தும் திட்டம், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் இளைய தலைமுறையினருக்குத் தமிழ் மரபு, தமிழ்மொழி மற்றும் தமிழ்க் கலைகள் ஆகியவற்றைப் பயிற்றுவிக்க 100 தமிழா சிரியர்கள் மற்றும் கலைஞர்களை அந்நாடுகளுக்கு அனுப்பி நேரடியாக வகுப்புகள் நடத்திடும் திட்டம், தமிழ்ச் செம்மொழி யின் பெருமையினையும், தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினையும் உலகத் தமிழ் இளைஞர்களிடையே பரப்பிட செய்யும் நோக்கத் தில் அவர்களுக்குக் கணினி வழி தேர்வு முறையில் உலகத் தமிழ்ப் போட்டி திட்டம், தமிழ்மொழியின் தொன்மையினை இளைய தலைமுறையினருக்கு உணர்த்தும் வகையில் அகரம் மொழிகளின் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம், தமிழ் நாட்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை விரிவாக பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளும் திட்டம், அகழ்வாராய்ச்சியில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களை ஆய்வதற்கு உலகப்புகழ் பெற்ற ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் திட்டம், காவிரிபூம்பட்டினம் முதல் நாகப்பட் டினம் வரை ஆழ்கடல் அகழாய்வினை மேற்கொள்ளும் திட் டம், தமிழ்நாடெங்கும் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச் சிகளில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களைக் காட் சிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகங்களை அமைக்கும் திட்டம், சிந்துவெளி பண்பாட்டுக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டின் நிறைவையொட்டி சென்னை அருங்காட்சியகத்தில் சிந்து வெளிப் பண்பாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம், சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள 2000த்திற்கும் மேற்பட்ட செப்புச் சிலைகளை அனைவரும் கண்டு மகிழும் வகையில் காட் சிப்படுத்த புதிய கட்டடம் ஆகியவற்றை உருவாக்கும் திட்டங் களைத் தமிழக அரசு மேற்கொள்வதை உளமாறப் பாராட்ட தமிழர்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.

பழந்தமிழ் ஓலைச்சுவடிகள், அரிய ஆவணங்கள் ஆகிய வற்றை மின் பதிப்பாக்கம் செய்திடும் திட்டத்தை நிதியமைச்சர் அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள பழந் தமிழ் ஓலைச்சுவடிகள் அரிய ஆவணங்களை மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா, கனடா போன்ற நாடு களிலும் அமைக்கப்பட்டுள்ள அரசு அருங்காட்சியகங்களிலும், அந்நாடுகளின் தேசிய நூலகங்களிலும் பல்லாயிரக்கணக்கான பழம் ஓலைச்சுவடிகள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. மேலும் இந்நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள், கிருத் தவ பாதிரிகள் ஆகியோர் இங்கிருந்து கொண்டு சென்ற பழம்



ஓலைச்சுவடிகளும், ஆவணங்களும் இந்நாடுகளில் உள்ள தனியார் அருங்காட்சியகங்களிலும் ஏராளமாக உள்ளன.

இவற்றின் காலம் 300 அல்லது 400 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காது. எனவே, இவற்றையெல்லாம் உடனடியாக மின் பதிப்பாக்கம் செய்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து சேமித்து வைக்கவேண்டும்.

தமிழக ஆய்வாளர்கள் இவற்றை ஆய்வு செய்வதற்கு உதவ வேண்டும். இதன்மூலம் இதுவரை கிடைக்காத பழந்தமிழ் நூல்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உருவாகும். எனவே, பழந் தமிழ் சுவடிகள், ஆவணங்கள் ஆகியவற்றை மின் பதிப்பாக்கம் செய்யும் திட்டத்தை உலக நாடுகளுக்கும் விரிவாக்க வேண்டும் என நிதியமைச்சரையும் முதலமைச்சர் அவர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

# தமிழ் குடிவாரிக் கணக்கெடுப்பும் சமூகநீதியும்! பறுஞ்சமர் நில மீட்பும்: மாபெரும் பொதுக்கூட்ட நிகழ்வு!

16.03.2025

தமிழ்நாடு அரசு, தமிழ் குடிவாரி கணக்கெடுப்பை உடனடியாக நடத்தி உண்மையான சமூகநீதியை நிலைநாட்ட வலியுறுத்தியும், பஞ்சமர் நிலங்களை மீட்க வலியுறுத்தியும் நாம் தமிழர் கட்சி சார்பாக 16-03-2025 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், திருப் போரூரில் அண்ணல் அம்பேத்கர் சிலை அருகில், மாபெரும் பொதுக்கூட்டம் பேரெழுச்சியாக நடைபெற்றது.







# தமிழகத்தில் பள்ளி இறுதி வகுப்பு வரை தமிழை பயிற்று மொழியாக்கி அரசு சட்டம் இயற்ற வேண்டும்

## பாமக நிறுவனர் இராமதாஸ்

18.03.2025

தமிழை வளர்க்க பள்ளி இறுதி வகுப்பு வரை பயிற்று மொழியாக்கி சட்டம் இயற்ற வேண்டும் என்று பாமக நிறுவனர் இராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழை வளர்ப்பதற்கோ, மொழிக் கொள்கையில் உறுதியைக் காட்டு வதற்கோ 'ரூ' போடத் தேவையில்லை. மாறாக அன்னைத் தமிழை வளர்ப்பதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழை எட்டாம் வகுப்பு வரையிலாவது பயிற்றுமொழியாக்கி சட்டம் இயற்ற வேண்டும் என்று வலியுறுத்தி 1999-ல் சென் னையில் 102 தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநிலை மேற்கொண்டனர். அவர்களுக்கு அளித்த வாக்குறுதியின்படி தமிழை பயிற்றுமொழியாக்கி சட்டம் இயற்றத் தவறிய அன் றைய திமுக அரசு, அதற்கு பதிலாக 5-ம் வகுப்பு வரை மட்டும் தமிழை பயிற்றுமொழியாக்கி அரசாணை பிறப்பித்தது.

ஆனால், அடுத்த 5 மாதங்களில் அந்த அரசாணையை உயர் நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது. அதை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீடு 25 ஆண்டுகளாக உச்ச நீதிமன்றத்தில் தூங் கிக் கொண்டிருக்கிறது. தமிழை பயிற்று மொழியாக்குவதற் கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டிய திமுக அரசு 2006-ல் முதன் முதலில் சென்னையில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வியை அறிமுகப்படுத்தி தமி ழுக்கு துரோகம் செய்தது. இன்று வரை அதன் தமிழ்த் துரோகம் தொடர்கிறது.

ஆக்கப்பூர்வ நடவடிக்கையே தீர்வு: மொழி விஷயத்தில் உணர்ச்சிகளைத் தூண்டுவது அரசியல் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது தான் தீர்வு என்பதை தமிழக அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். பள்ளி இறுதி வகுப்பு



வரை தமிழைப் பயிற்றுமொழியாக்க நடப்புச் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்டம் இயற்ற வேண்டும். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

www.sangathamil.ca

# விளைநிலங்களை வேறு பயன்பாட்டுக்கு மாற்றுவதை தடுக்க சட்டம் வேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் இராமதாஸ்

20.03.2025

வேளாண் விளைநிலங்களை வேறு பயன்பாட்டுக்கு மாற்றுவதை தடுப்பதற்கு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

திண்டிவனம் அருகே தைலாபுரம் தோட்டத்தில் இன்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வேளாண் விளை நிலங்கள் மாற்றுப்பணிக்கு பயன்படுத்துவதற்கு தடை விதிக்க வேண்டும். கேரள அரசு நெல் விளையும் நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு அனுமதிக்கமாட்டோம் என கூறியுள்ளது. இந்த நிலைப்பாடு பாராட்டத்தக்கது. ஆனால் தமிழகத்தின் நிலை என்ன? மூன்று போகம் விளையும் நிலமாக இருந்தாலும் அதிகாரிகளின் துணையோடு வீட்டுமனை பட்டாவாக மாற்ற முடியும். மேலும் சிப்காட் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசே விளை நிலங்களை கையகப்படுத்துகிறது.

விளைநிலங்களை வீட்டுமனைகளாக்க அனுமதிக்க கூடாது என்று நான் வலியிறுத்தி போராட்டங்கள் நடத்தியுள்ளேன். இதனால் சாகுபடி பரப்பு 40 இலட்சம் ஹெக்டர் பரப்பளவும், 15 ஆயிரம் ஏரிகள் காணாமல் போயியுள்ளன. கேரளா போல தமிழகத்தில் இந்தச் சட்டப்பேரவை கூட்டத்தில் இதற்காக சட்டம் கொண்டு வரவேண்டும். நில ஒருங்கிணைப்பு சட்டத்தை திரும்ப பெறவேண்டும்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஏப்ரல் 30 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக அரசில் அதிகநாள் நடைபெறும் கூட்டத்தொடர் இதுவாகும். கடந்த காலங்களில் எத்தனை நாட்கள் சட்டப்பேரவை நடைபெற்றதை புள்ளி விவரங்களுடன் சுட்டிக்காட்டியதால் தற்போது நீடிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இது போதுமானதல்ல.

தமிழகத்தில் திட்டமிட்டு நடைபெறும் கொடூரக்கொலைகள் அதிகரித்துவருகிறது. நெல்லை, ஈரோடு ஆகிய இடங்களில் கொடூரக்கொலைகள் நடைபெற்றுள்ளது. எத்தகைய குற்றம் செய்தாலும் இந்த ஆட்சியில் தப்பிவிடலாம் என்ற மனநிலையே இதற்கு காரணமாகும். இந்நிலை தொடர்ந்தால் தமிழகம் கொலைகார நாடாக மாறிவிடும். எனவே சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும்.

தற்காலிக ஊழியர்களின் பணிநிலைப்பை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களைப் பணி நிலைப்பு செய்யவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. திமுக தேர்தல் அறிக்கையில் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள் பணிநிலைப்பு செய்யப்படுவர் என அறிவித்தும் அதை செயல்படுத்தவில்லை.

நகைக்கடனுக்கான விதிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி மாற்றி அமைத்துள்ளது. முன்பு வட்டியை மட்டும் புதுபித்து கொள்ளும் நிலை இருந்தது. தற்போது விதிமுறைப்படி நகையை மீட்டு, அடுத்த நாள் தான் மீண்டும் அடகு வைக்க முடியும். இதனால் ஏழை, நடுத்தர வர்க்கத்து மக்கள் பாதிக்கப்படுவார்கள். நகைக்கடன் தொடர்பான புதிய விதி முறைகளை ரிசர்வ் வங்கி திரும்பப் பெறவேண்டும்.

புதுச்சேரியில் கடைகளின் பெயர் பலகை தமிழில் இருக்க வேண்டும் என்று முதல்வர் இரங்கசாமி அறிவித்துள்ளது பாராட்டுக்குரியது, வரவேற்கதக்கது. சென்னையில் உள்ள கடைகளின் பெயர் பலகை ஒரு வாரத்தில் தமிழில் மாற்றா விட்டால் கடைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும் என்ற சென்னை மாநகராட்சியின் அறிவிப்பும் வரவேற்கதக்கது. தமிழகத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் மொழிப்பற்று அதிகமாக உள்ளது. குறிப்பாக கர்நாடகாவில் அதிகமாக உள்ளது



உண்மையிலும் உண்மை” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து திமுகவை போல பொது இடத்தில் உள்ள பாமக கொடி கம்பங்களை அகற்ற ஆணையிடுவீர்களா என்ற கேள்விக்கு பதில் அளித்த இராமதாஸ், “பொது இடத்தில் கொடி கம்பங்கள் அமைக்க அனுமதிக்கவேண்டும். அதே நேரம் நீதிமன்றம் விதிக்கும் விதிமுறைகளை கடைபிடிக்கவேண்டும்.

சுவரில் அரசியல் விளம்பரங்கள் எழுதுவதை தவிர்க்க வேண்டும். மற்ற மாநிலங்களில் இந்த நடைமுறை இல்லை. வெளிநாடுகளில் இது போன்ற நடைமுறை இல்லை. மாநாட்டு விளம்பரம் எழுதினால் மாநாடு முடிந்த பின் அக்கட்சியே இதனை அழிக்கவேண்டும் என்ற விதிகள் உள்ளன. இதை தடை செய்ய வேண்டும் என்றார்.

# இலங்கைச் சிங்கள இனவெறிக் கடற்படையால் தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவதைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!!

22.03.2025

நாம்தமிழர்கட்சி – மீனவர் பாசறை நடத்திய இலங்கைச் சிங்கள இனவெறிக் கடற்படையால் தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவதைக் கண்டித்து, தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சூசீமான் அவர்களின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம், 22-03-2025 அன்று, இராமேசுவரம் தங்கச்சி மடத்தில் நடைபெற்றது.







# இயக்குநர் பாரதிராஜாவின் மகனும் நடிகருமான மனோஜ் உடல் நலக்குறைவால் காலமானார்!

25.03.2025

இயக்குநர் பாரதிராஜா தனது மகன் மனோஜ் பாரதிராஜாவை தாஜ்மஹால் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். இப்படம் மனோஜ் பாரதிராஜாவுக்கு நல்ல அறிமுகத்தை தேடித் தந்தது. தொடர்ந்து அவர் சமுத்திரம், கடல் பூங்கா அல்லு அர்ஜுனா உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்துள்ளார்.

மனோஜ் பாரதிராஜா கடந்த 2023ஆண்டு தனது தந்தையை வைத்து ‘மார்கழி திங்கள்’ என்ற படத்தை இயக்கினார். இதன்



மூலம் அவர் தமிழ் சினிமாவில் இயக்குநர் அவதாரம் எடுத்தார். சென்னையில் வசித்து வரும் மனோஜ் பாரதிராஜா சமீபத்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இதய அறுவை சிகிச்சை செய்துள்ளார்.

இந்த நிலையில் மனோஜ் பாரதிராஜா (48) மாரடைப்பால் காலமாகியுள்ளார். அவரின் மறைவுக்கு திரைப்பிரபலங்கள் ரசிகர்கள் உள்ளிட்ட பலர் சமூக வலைத்தளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். மனோஜ் பாரதிராஜாவின் மறைவு தமிழ் திரையுலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**நாம் அரசியல்வாதிகளல்லர், நாம் புரட்சிவாதிகள்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# கச்சத்தீவை மீட்கக்கோரிய வழக்கு; விசாரணைக்கு எடுத்துக்கொண்டது உச்ச நீதிமன்றம்

25.03.2025

கச்சத்தீவை மீட்கக்கோரிய வழக்கு ஐந்து ஆண்டு இடைவெளிக்கு பின்னர் உச்ச நீதிமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தியா, இலங்கை இடையான 1974 மற்றும் 1976ம் ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்தது செல்லாது என அறிவிக்க கோரி, கடந்த 2008ம் ஆண்டு அப்போதைய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) பொதுச்செயலாளர் ஜெ.ஜெயல்லிதாவும், அதேபோல ஏ.கே.செல்வராஜ் என்பவர் சார்பிலும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கில் கடந்த 2009 ஜனவரி 5ம் திகதியன்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. பின்னர் வழக்கு விசாரணை விரைந்து நடைபெறாததால், வழக்கை விரைந்து விசாரிக்கக்கோரி கடந்த 2012 செப்டம்பர் 18ம் திகதி ஜெயலலிதா சார்பில் மீண்டும் ஒரு மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அதில், தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இந்த மனுவை தாக்கல் செய்வதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த வழக்கை பொறுத்தவரை ஜெயலலிதா 3வது முறையாக கடந்த 2011ம் ஆண்டு தமிழக முதலமைச்சராக பதவியேற்றதும், சட்டப்பேரவையில் அறிவித்தபடி கச்சத்தீவு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் வைத்துள்ள தமிழக அரசின் வருவாய்த் துறையும் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அதேபோல, கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதால் தொடர்கதையாகி வரும் மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்திய பிரதமருக்கு ஜெயலலிதா எழுதிய கடிதங்களும் மனுவோடு இணைக்கப்பட்டன.

இதனிடையே கடந்த 21.09.2013ல் கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் அடங்கிய ஆவணங்களை தமிழக அரசின் வருவாய்த்துறை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.




இதனையடுத்து இந்த வழக்கு கடைசியாக கடந்த 2020ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதனையடுத்து 5 ஆண்டு இடைவெளிக்கு பிறகு, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வில், இந்த வழக்கு விசாரணைக்கு செவ்வாய்க்கிழமை (25) பட்டியலிடப்பட்டுள்ளது.

# தமிழ் – இந்தோ – ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி நூல்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்

26.03.2025

தமிழ்நாடு பாடநூல் கழகம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையும் இணைந்து உருவாக்கிய தமிழ் - இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2022-23-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், "தமிழ் மொழிக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்துக்கும் இடையிலான உறவை வெளிக்கொணரும் வகையில், தமிழ் வேர்ச்சொல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, தமிழ் - இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம் செயல்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழுக்கும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவினை ஆய்வு செய்யும் இத்திட்டம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேற்பார்வையில் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு. அரசேந்திரன் தலைமையில் 2022 ஜூலை முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் முதன்மைப் பதிப்பாசிரியர் உட்பட 20 அறிஞர்கள் பணி செய்து வருகின்றனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தோ - ஐரோப்பிய மொழிகள் யாவும் 461 வேர்ச்சொற்களில் உருவானது என ஆங்கில வேர்ச்சொல் அறிஞர் வால்டர் ஸ்கீட் கண்டுபிடித்துள்ளார். இந்த 461 வேர்ச்சொற்களில் 300 வேர்ச்சொற்கள் தமிழுடன் உறவுடையன என இக்குழு கருதுகிறது. இந்த ஆய்வு முடிவுகளை 12 தொகுதிகளாக வெளியிட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையுடன் கடந்த ஜன.13-ம் தேதி ஒப்பந்தம் செய்தது.

அதன் அடிப்படையில், தமிழ் - இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் பொது முன்னுரை நூலையும், முதல் தொகுதி நூலையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்புத் துறையின் இந்தியப் பிரிவு மேலாண்மை இயக்குநர் சுகந்தா தாஸ் பெற்றுக் கொண்டார்.



இந்நிகழ்ச்சியில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் ஐ.லியோனி, தலைமைச்செயலர் நா.முருகானந்தம், பள்ளிக் கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலர் வே.ராஜாராமன், தமிழ்நாடு பாடநூல் கழக மேலாண் இயக்குநர் பொ.சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 'மீண்டு வருவேன்' மரணத்தோடு போராடிய கராத்தே ஷிஹான் ஹுசைனி உயிரிழந்தார்!

26.03.2025

கராத்தே ஹுசைனி என்று அறியப்படும் ஷிஹான் ஹுசைனி இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார். தொடர் சிகிச்சையில் இருந்தவர், இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உயிரிழப்பு அவரின் மாணவர்கள், மாணவிகளிடமும் ரசிகர்களிடமும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கே.பாலச்சந்தரின் புன்னகை மன்னன் படத்தில் அறிமுகமான ஷிஹான் ஹுசைனி மதுரையைச் சேர்ந்தவர். கராத்தே மாஸ்டரான இவர், பல படங்களில் நடித்துள்ளார். நடிகர் விஜய் நடித்த 'பத்ரி' படத்தில் அவருக்கு கராத்தே சொல்லிக் கொடுக்கும் மாஸ்டராக நடித்திருந்தார். இதுவரை 400-க்கும் மேற்பட்ட வில்வித்தை வீரர்களுக்கு பயிற்சி அளித்து, தமிழகத்தில் நவீன வில்வித்தைக்கு முன்னோடியாக இருந்தவர்.

அவருக்கு இரத்தப் புற்றுநோய், அப்லாஸ்டிக் அனீமியா இருப்பது உறுதிசெய்யப்பட்டு, தீவிர சிகிச்சையில் இருந்தார். சமீபத்தில் அவர் வெளியிட்டிருந்த வீடியோவில்கூட 'மீண்டு வருவேன்' எனக் குறிபிட்டிருந்தது அவரின் மாணவர்கள் உள்பட பலரின் மனதை உறையச் செய்தது.

அதைத் தொடர்ந்து அவர் தன் முகநூல் பக்கத்தில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில், "மருத்துவம், உடற்கூறியல் மற்றும் ஆராய்ச்சிக்காக என் உடலை தானம் செய்கிறேன். நான் இறந்த 3 நாள்களுக்குப் பிறகு ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனை மற்றும் பல்கலைக்கழகத்திற்கு என் உடலை தானம் செய்ய விரும்புகிறேன். என் இதயத்தை மட்டும் பாதுகாப்பதற்காக, என் வில்வித்தை - கராத்தே மாணவர்




களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டிருந்தார். தற்போது அவரின் மரணம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

**புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பையொத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக – மனித மலைகளாக – உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

# கூடங்குளம் அணுமின் நிலையம் தென் தமிழ்நாட்டு மக்களின் தலையில் எரிமலையாக அமர்ந்திருக்கிறது!

### மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ





27.03.2025

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள், இன்று 26.03.2025 நாடாளுமன்ற மாநிலங்களவையின் நேரமில்லா நேரத்தின் போது, கூடங்குளம் அணுமின் நிலையத்தால் தென் தமிழ் நாட்டுக்கு ஏற்படப் போகும் பாதிப்பு குறித்து உரையாற்றினார். அவரது உரை வருமாறு:-

அவைத் துணைத் தலைவர் அவர்களே!

குஜராத் மாநிலத்தில் மிதி-விர்தி கிராமத்திற்கு அருகிலுள்ள பாவ்நகரில் அணுமின் நிலையத்தை நிறுவ ஒன்றிய அரசு ஒரு திட்டம் வகுத்தது. அந்த நேரத்தில், குஜராத் முதல்வராக இருந்த விஜய் ரூபானி அவர்கள் குஜராத் மாநிலத்தில் அனுமதி தர மறுத்தார். குஜராத் மாநிலம் இந்திய பிரதமருக்கு சொந்த மாநிலம். எனவே, அவர் குஜராத்தில் அணுமின் நிலையத்தை நிறுவ ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

நவம்பர் 22, 1988 அன்று, அப்போதைய சோவியத் ஒன்றிய அதிபர் கோர்பச்சேவ் இந்தியாவிற்கு வருகை தந்துபோது, அப்போதைய இந்திய பிரதமர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஓர் அறிக்கை வெளியிட்டு உரையாற்றினார். அதில், இந்தியாவும் சோவியத் ஒன்றியமும் இணைந்து, இந்தியாவில் அணுமின் நிலையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாகக் கூறினார். மக்களவையில், இது குறித்து அறிக்கை வெளியிட்டபோது யாரும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை. ராஜ்யசபாவிலும் யாரும் கேள்வி எழுப்பவில்லை. இந்திய பிரதமரிடம் இது குறித்து விளக்கம் கேட்ட ஒரே ஒரு உறுப்பினர் நான்தான். அணுமின் நிலையம் அமைக்க நீங்கள் எந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள் என்று கேட்டேன். பதில் இல்லை. ஆனால் தென் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியான கூடங்குளத்தில் அணுமின் நிலையத்தை அமைக்க நீங்கள் திட்டமிட்டுள்ளீர்கள் என்று கூறினேன். இது பற்றி அறிந்ததும் கூடங்குளம் பகுதி பொது மக்களும், மீனவர்களும் கிளர்ந்தெழுந்தனர்.

அமெரிக்காவின் மூன்று மைல் தீவில் உள்ள அணு உலையிலும், சோவியத் ரஷ்யாவின் செர்னோபிலிலும் அணு உலை பேரழிவுகள் நிகழ்ந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். ஜப்பான் புகுஷிமாவில், மார்ச் 11, 2011 அன்று, அணு பேரழிவு ஏற்பட்டு பலர் இறந்தனர். அணுக் கதிர் பாதிப்பால் மக்கள் இன்றும் அவதிப்படுகிறார்கள்.

இந்த உண்மைகளை எல்லாம் மறைக்க முயற்சிக்கிறார்கள். ஏதேனும் பேரழிவு ஏற்பட்டால், தென் தமிழ்நாடு முற்றிலுமாக அழிக்கப்படும்.

கூடங்குளத்தில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆயிரக்கணக்கான மீனவ பெண்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். அவர்கள் 18 மாதங்கள் போராடினர். நானும் மூன்று முறை அந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டேன். போராட்டம் நடத்திய மக்கள் மீது அப்போதைய மாநில அரசால் குற்றவியல் வழக்குகள் தொடரப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தில் என் மீதும் வழக்குத் தொடுக்கப்பட்டது.

கூடங்குளத்தில் ஏற்கனவே நான்கு அணு உலை அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இரண்டு அலகுகள் அமைக்க முடிவுசெய்துள்ளனர். மேலும் முழுப் பகுதியும் அணு நரகமாக மாறி வருகிறது.

பேரழிவு ஏற்பட்டால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள். கற்பனை செய்ய முடியாத அளவு மரணங்கள் நடக்கும்.

இப்போது எழும் முக்கியமான மில்லியன் டாலர் கேள்வி என்னவென்றால், அவர்கள் அணுக்கழிவுகளை பாதுகாப்பாக எங்கே அப்புறப்படுத்தப் போகிறார்கள்? இப்போது அணுக் கழிவுகள் ஆலையிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அணுக் கழிவுகளை கடலில் கொட்டப் போகிறார்கள் என்று நான் அச்சப்படுகின்றேன். ஒரு எரிமலை எங்கள் தலையில் அமர்ந்திருக்கிறது.

இதை எதிர்த்துப் போராடும் பூவுலக நண்பர்கள் அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அதில். அணுமின் நிலையம் 2018 ஆம் ஆண்டுக்குள் நிலத்தடி ஆழ்நிலைக் கிடங்கு (DGR) அமைக்க வேண்டும் என்று கூறியது.

அது அமைக்கப்படாததால், பூவுலகின் நண்பர்கள் அமைப்பு மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. உச்ச நீதிமன்றமானது DGR கட்டுவதற்கு ஏப்ரல் 2022 வரை காலகெடு வழங்கியது. ஆனால் இது வரை அதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை.

கூடங்குளம் அணுமின் நிலையம் தென் தமிழ்நாட்டு மக்களின் தலையில் எரிமலையாக அமர்ந்திருக்கிறது, இந்த அணுக் கழிவுகளை அணு உலைக்கு அருகிலுள்ள கடற்கரையைத் தவிர வேறு எங்கும் கொட்டப் போவதில்லை. அணுஉலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்பதுதான் தென் தமிழக மக்களின் கோரிக்கையாகும். அணுமின் நிலையத்தை மூடவும், வரவிருக்கும் பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றவும் நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய அரசையும், பிரதமர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்."

வைகோ அவர்கள் இவ்வாறு உரையாற்றினார்.

# திருச்சி – யாழ்ப்பாணம் விமான சேவை ஆரம்பம்

30.03.2025

திருச்சி விமான நிலையத்திற்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கும் இடையிலான விமான சேவைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (30) முதல் ஆரம்பமாகியுள்ளது.






திருச்சியில் இருந்து மதியம் புறப்பட்ட விமானம், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த வேளை, விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதரகர் சாய் முரளி உள்ளிட்ட துணைத்தூதராக அதிகாரிகள், விமான நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த விமான சேவையானது தினசரி மதியம் 1.25 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு, 2.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 3.15 மணிக்கு புறப்பட்டு, திருச்சியை மாலை 4 மணியளவில் சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூர் பயணிக்க விரும்புவோர், திருச்சி சென்ற திருச்சி ஊடாக சிங்கப்பூர் பயணிக்க கூடியவாறான விமான சேவை திட்டமிடப்பட்டுள்ளமையால் , கொழும்பு சென்று சிங்கப்பூர் செல்வதற்கான நேர விரயம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை தமிழ் அகதியின் மகளுக்கு இந்திய குடியுரிமையை வழங்குவது குறித்து மத்திய அரசாங்கம் ஆராயவேண்டும்

31.03.2025

இலங்கை தமிழ் அகதியாக தமிழகம் வந்த தம்பதியருக்கு பிறந்த பெண்ணுக்கு இந்திய குடியுரிமை கோரி விண்ணப்பித்த விண்ணப்பத்தை மத்திய அரசு நிராகரித்திருப்பதாக கூறி ரம்யா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் அந்த பெண்ணுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது குறித்து பரிசீலிக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 1984 ம் ஆண்டு உள் நாட்டு போர் காரணமாக சரவணமுத்து, தமிழ்செல்வி தம்பதியர் இலங்கையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தனர். பின் வெளிநாட்டவருக்கான மண்டல பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கோவையில் பல ஆண்டுகளாக தங்கியுள்ளார் இந்நிலையில் கடந்த 1987 ஆம் ஆண்டு கோவையில் அத்தம்பதியருக்கு ரம்யா என்ற பெண் குழந்தை பிறந்து, அக்குழந்தை கோவையிலேயே பள்ளிப்படிப்பை முடித்து கோவையை சேர்ந்தவரை திருமணம் செய்து 37 ஆண்டுகள் கோவையில் வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் இந்தியாவில் தொடர்ந்து தங்கி இருக்க பதிவை புதுப்பிக்க அணுகிய போது, சரவணமுத்து, தமிழ்செல்வி தம்பதியரின் பதிவை புதுப்பிக்க மறுத்ததுடன் 1987 ஜூலைக்கு பிறகு பிறந்தவர் இந்தியாவில் பிறந்தவர் என்ற அடிப்படையில் மட்டும் இந்திய குடியுரிமை கேட்க முடியாது எனக்கூறி ரம்யாவின் இந்திய கடவுச்சீட்டை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது.

இதனிடையே இந்திய குடியுரிமை கோரி விண்ணப்பித்த விண்ணப்பத்தை மத்திய அரசு நிராகரித்திருப்பதாக கூறி ரம்யா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி பரத சக்ரவர்த்தி முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் இளமுகில் ஆஜராகி வாதிட்டார். பின்னர் இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி மனுதாரர் இலங்கைக்கு சென்று ஆவணங்களை பெற்று இந்தியாவுக்கு வரும்படி கூறுவது தேவையில்லை என்றும் இந்தியாவில் பிறந்து இந்தியரை மணந்து 37 வருடமாக வாழ்ந்து வருவதை கருத்தில் கொண்டு ஆன்லைன் மூலம் குடியுரிமை கோரி அவர் விண்ணப்பம் அளிக்க மனுதாரரை அனுமதிக்க வேண்டும் என மத்திய உள்துறைக்கு நீதிபதி உத்தரவிட்டார்.



அந்த விண்ணப்பம் மீது சட்டப்படி பரிசீலிக்க வேண்டும் என்றும் அந்த விண்ணப்பித்தின் மீது மத்திய அரசு முடிவெடுக்கும் வரை இந்தியாவில் இருந்து மனுதாரரை வெளியேற்ற கூடாது எனவும் மத்திய அரசுக்கு உத்தரவிட்டு வழக்கினை முடித்து வைத்தார்.

# உலக செய்திகள்

# காசாவில் ஒரே இரவில் 404 பேரைக் கொன்று குவித்த இசுரவேல்

## காசா சுகாதார அமைச்சகம்

18.03.2025

காசா மீது இரவு முழுவதும் இசுரவேல் நடத்திய தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது 404 ஆக உயர்ந் துள்ளதாக ஹமாஸ் நடத்தும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.



இசுரவேலிய வான்வழித் தாக்குதல்களில் 404 பேர் கொல்லப் பட்டதாக டெலிகிராமில் ஒரு பதிவில் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன் வாட்ஸ்அப் சேனலில், அது 413 என்ற சற்று அதிக எண்ணிக்கையைக் கூறியுள்ளது.

சில பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளதாக அமைச்சகம் மேலும் கூறுகிறது.

இறந்தவர்களில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் குழந் தைகள் என்று அமைச்சகத் தலைவர் முகமது ஜாகுத் கூறியதாக ஏஎஃப்பி செய்தி நிறுவனம் மேற்கோள் காட்டியது.

மேலும் 660 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் டஜன் கணக்கானோர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும் அவர் கூறுகிறார்.

தாக்குதலானது அதிகாலை 2 மணியளவில் தொடங்கியதாக உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றன.

காசாவில் நடந்த படுகொலைகளுக்கு அமெரிக்கா "முழுப் பொறுப்பையும் ஏற்கிறது" என்று ஹமாஸ் புதிதாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புனித ரமலான் மாதம் என்பதால், பலர் விடியற்காலையில் உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, காசாவில் வெடிப்



புகள் தொடங்கியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

20க்கும் மேற்பட்ட இசுரவேலிய போர் விமானங்கள் பறந்ததாக அவர்கள் தெரிவித்தனர். பின்னர் விமானங்கள் காசா நகரம், ரஃபா மற்றும் கான் யூனிஸில் உள்ள இலக்குகளைத் தாக்கத் தொடங்கின.

இசுரவேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாது காப்பு அமைச்சர் இசுரவேல் காட்ஸ் ஆகியோர் செவ்வாய்க் கிழமை காலை தாக்குதல்களுக்கு உத்தரவிட்டதாக பிரதமர் அலுவலக அறிக்கை தெரிவித்துள்ளது.

# 09 மாதங்களின் பின்னர் பூமிக்குத் திரும்பும் விண்வெளிவீரர்கள்

18.03.2025

ஒன்பது மாதங்களுக்கும் மேலாக விண்வெளியில் சிக்கித் தவித்த நாசா விண்வெளி வீரர்களான பாரி "புட்ச்" வில்மோர் மற்றும் சுனி வில்லியம்ஸ் செவ்வாய்க்கிழமை பூமிக்குத் திரும்ப உள்ளனர்.

போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, ஒரு வார காலப் பயணம் நீடித்த இந்த இருவரும், செவ்வாய்க்கிழமை காலை சர்வதேச விண்வெளி நிலையத்தி லிருந்து (ISS) ஸ்பேஸ்எக்ஸ் காப்ஸ்யூலில் புறப்பட்டனர் .

வில்மோர் மற்றும் வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீரர் நிக் ஹேக் மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் ஆகிய இரு விண்வெளி வீரர்களுடன், அதிகாலை 1.05 ET (0505 GMT) மணிக்கு பூமிக்கு 17 மணி நேர பயணத்தை மேற்கொண்டனர்.



# பிரித்தானியாவில் சிறீலங்கா படைத்துறை சார் நால்வர் மீது தடை விதிப்பு

25.03.2025

சரணடையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொலை செய்யவேண்டும் என உத்தரவிட்டவர் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டங்களில் 58 வது படையணி யின் தளபதியாக விளங்கிய சவேந்திர சில்வா என பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதிகள் கடற்படை தளபதி மற்றும் விநாயகமூர்த்தி முரளீதரன் மீதான தடைகளிற் கான காரணங்களை தெளிவுபடுத்தும் ஆவணமே இவ்வாறு தெரிவித்துள்ளது.

சவேந்திர சில்வா தனிநபரின் வாழ்வதற்கான உரிமை, சித்திர வதைக்கு உட்படுத்தப்படாமலிருப்பதற்கான உரிமை, ஈவிரக் கமற்ற, அல்லது மனிதாபிமானற்ற விதத்தில் நடத்தப்படாம லிருப்பதற்கான, இழிவான விதத்தில் நடத்தப்படாமலிருப்பதற் கான, அல்லது தண்டிக்கப்படாமலிருப்பதற்கான உரிமையை பாரதூரமாக மீறும் நடவடிக்கைகளிற்கு காரணமாக இருந் துள்ளார், இருக்கின்றார் என்ற அடிப்படையில். உலகளாவிய மனித உரிமைகள் தடைகள் 2020 இன் அர்த்தங்களுடன் சவேந்திர சில்வா சம்பந்தப்பட்ட நபராகும்.

சவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் 58வது பிரிவின் தளபதியாக செயற்பட்டார், இக்காலப்பகுதியில் 58வது படைப்பிரி வினர் சட்டவிரோத படுகொலைகள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதுடன், சித்திரவதை, ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள், கீழ்த்தரமான நடவடிக்கைகள் தண்டனைகளை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

சரணடையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொலை செய்யவேண்டும் என உத்தரவிட்ட சவேந்திர சில்வா சரணடைந்த விடுதலைப்புலிகளை தனது படையினர் சுட்டுக் கொன்றவேளை போர் முன்னரங்கிலேயே காணப்பட்டார்.
ஜெயசூரிய தனிநபரின் வாழ்வதற்கான உரிமை , சித்திர வதைக்கு உட்படுத்தப்படாமலிருப்பதற்கான உரிமை, ஈவிரக் கமற்ற, அல்லது மனிதாபிமானற்ற விதத்தில் நடத்தப்படாம லிருப்பதற்கான, இழிவான விதத்தில் நடத்தப்படாமலிருப்பதற் கான, அல்லது தண்டிக்கப்படாம லிருப்பதற்கான உரிமையை பாரதூரமாக மீறும் நடவடிக் கைகளிற்கு காரணமாக இருந்துள் ளார், இருக்கின்றார் என்ற அடிப்படையில். உலகளாவிய மனித உரிமைகள் தடைகள் 2020 இன் அர்த்தங்களுடன் ஜெயசூரிய சம்பந்தப்பட்ட நபராகும்.

விசேடமாக ஜகத் ஜெயசூரிய 2007 முதல் 2009 வரை வன்னியில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினரின் தளபதி யாக விளங்கினார்.

இக்காலப்பகுதியில் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இலங்கை இராணுவத்தினர்,சட்டவிரோத படுகொலைகள், சித்திரவதை ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள் கீழ்த்தரமான நட வடிக்கைகள் தண்டனைகளை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

வசந்த கரணாகொட தனிநபரின் வாழ்வதற்கான உரிமை , சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமலிருப்பதற்கான உரிமை, ஈவிரக்கமற்ற, அல்லது மனிதாபிமானற்ற விதத்தில் நடத்தப் படாமலிருப்பதற்கான,இழிவான விதத்தில் நடத்தப் படாமலிருப் பதற்கான, அல்லது தண்டிக்கப்படாமலிருப் பதற்கான உரிமையை பாரதூரமாக மீறும் நடவடிக் கைகளிற்கு காரணமாக இருந்துள்ளார், இருக்கின்றார் என்ற அடிப்படையில். உலக ளாவிய மனித உரிமைகள் தடைகள் 2020 இன் அர்த்தங் களுடன் கரணாகொட சம்பந்தப்பட்ட நபராகும்.

2005 முதல் 2009 வரை இலங்கை கடற்படையின் தளபதியாக வசந்த கரணாகொட பதவி வகித்தார்.

இக்காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் வசந்த கரணா கொடவின் கட்டளைப்பொறுப்பின் கீழ் சட்டவிரோத படு கொலைகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதுடன், சித்திர வதை, ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள், கீழ்த்தரமான நடவடிக் கைகள் தண்டனைகளை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

இலங்கை இராணுவத்தின் சார்பாக செயற்பட்ட துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தலைவர் கருணா அம்மான் என்றும் அழைக்கப் படும் விநாயகமூர்த்தி முரளிதரன்.

குறிப்பாக LTTE, விநாயகமூர்த்தி முரளிதரனின் கட்டளையின் கீழ் உள்ள படைகள' கருணா தலைமையில் பிரிந்து சென்ற அரசாங்க சார்புப் பகுதியும் சட்டவிரோத கொலைகளில் நேரடி யாக ஈடுபட்டன.



UK Government

Update to the UK Sanctions List: Global Human Rights Regime

Today, 24 March, the UK Government has designated 4 individuals under the Global Human Rights Sanctions Regime. This package targets former Sri Lankan commanders and an ex–Liberation Tigers of Tamil Eelam (LTTE) commander responsible for serious human rights violations and abuses during the civil war under the Global Human Rights Sanctions Regulation 2020.

The following individuals have been sanctioned:

| Name 1 | Name 2 | OFSI Group ID | Unique ID |
|---|---|---|---|
| Shavendra | SILVA | 16830 | GHR0148 |
| Wasantha | KARANNAGODA | 16831 | GHR0149 |
| Jagath | JAYASURIYA | 16833 | GHR0150 |
| Vinayagamoorthy | MURALITHARAN | 16834 | GHR0151 |

Communications

Press Release



# ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலிருந்து சிறீலங்கா வெளியேறவேண்டும்: ரணில் விக்கிரமசிங்க

21.03.2025

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கை வெளியேறவேண்டும் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய கிளை குறித்து விசாரணைகளை கோரவேண்டும் என தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் 40,000 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுவதை நிராகரித் துள்ள அவர் நல்லாட்சிகாலத்தில் உருவாக்கப்பட்ட உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நாடாளுமன்றத்தில் சமர்ப் பித்து அதனை நிறைவேற்றி விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

பேட்டியொன்றில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டார். அந்த உடன்படிக்கையை நாங்கள் மதிக்க வேண்டும் என்பதே எனது கருத்து. காணாமல்போனவர்கள் உட்பட பல விடயங்களிற்கு தீர்வை காண்பதற்கான நடவடிக் கைகளை நாங்கள் ஆரம்பித்தோம்,அவை மிகவும் மெதுவாகத் தான் செயற்பட்டன ஆனாலும் நாங்கள் ஆரம்பித்தோம்.

இப்போது எஞ்சியிருக்கின்ற விடயம் விசாரணைகள் தொடர் பானது, இந்தியா உட்பட பல நாடுகள் இதனை இலங்கை நீதி பதிகளே முன்னெடுக்கவேண்டும் என வெளிநாட்டவர்கள் இல்லை என விரும்புகின்றன. ஆனால் நாங்கள் கண்காணிப் பாளர்களை ஏற்க தயார் என தெரிவித்தோம்.

நாங்கள், மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் போது ஆணைக்குழு தொடர்பான புதிய நகல்வடிவமொன்றை உரு வாக்கினோம்.ஜப்பான் தென்கொரியாவின் உதவியுடன் புதிய தொன்றை உருவாக்கினோம், இதுவே உண்மை நல்லிணக்க ஆணைக்குழு.அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் செயற்படஆரம்பிக்கவேண்டும் .

இந்த ஆணைக்குழு அனைத்து தேவைகளையும் நிறை வேற்றும், விசாரணைகளை இந்த ஆணைக்குழு முன்னெடுக் கலாம் அதன் பின்னர் அடுத்தகட்டம் குறித்து சட்டமா அதிபர் தீர்மானிப்பார்.

இதன் பின்னணி என்ன? நாங்கள் செய்திருக்கின்றோம் - ஆனால்மேற்குலகம் ஐரோப்பாகளங்களை கண்டிக்கின்றது விமர்சிக்கின்றது, ஏன்?

யுத்தம் நடந்தது 40 பேர் கொல்லப்படவில்லை, காசாவில் 40000 பேர் கொல்லப்பட்டனர், அங்கு சனத்தொகை என்பது பல மில்லியன்.

ஆனால் இங்கு மில்லியன் கணக்கான மக்கள் இருந்திருக்க வேண்டும் வடக்கின் சனத்தொகை மில்லியன் கணக்கில் இல்லை.

மோதலின் நடுவில் சிக்கி பலர் இறந்துள்ளனர் அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன் ஆனால் அது சொல்லப்படுகின்ற எண் ணிக்கை அளவிற்கு இல்லை.

பிரான்சிஸ் ஹரிசனிடம் நான் கேள்வி எழுப்பியவேளை அவர் தான் 40,000 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கவில்லை என்றார்.

இதன் காரணமாக நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள் ளோம் - ஜனநாயகத்தை நீண்டகாலமாக பின்பற்றி வரும் ஜன நாயகநாடு இலங்கை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

நாங்கள் யுத்தத்தை எதிர்கொண்டோம், நாங்கள் தேர்தல்களை நடத்தினோம், நாங்கள் எங்கள் தலைவர்கள் சிலரை இழந்தோம், சில வேட்பாளர்களை இழந்தோம்,

1988 முதல் நாங்கள் அனைத்து தேர்தல்களையும் நடத்தியுள் ளோம் அதற்கு நீங்கள் எங்களை பாராட்டவேண்டும்.

எங்களிற்கு எதிராக ஆயுதம் ஏந்தியவர்கள் தமிழர்கள் ஜேவிபி யாக இருக்கலாம் அவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின் றனர், அரசாங்கத்தில் உள்ளனர். ஜனாதிபதியாக உள்ளனர்- வேறு எந்த நாட்டினால் இவ்வாறானதொரு வரலாறு குறித்து பெருமிதம் கொள்ள முடியும்.

நாங்கள் வழங்கிய எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற வேண்டும், தமிழ் மக்கள் தங்களிற்கு நீதி கிடைத்ததாக உணரும் நிலையேற்படவேண்டும். எதுவும் செய்யவேண்டாம் என தெரிவிப்பவர்களிற்கு எதிரானவன் நான்.



ஆனால் அதேவேளை மனித உரிமை பேரவையிலிருந்து வெளியேறுங்கள் என நான் தெரிவிப்பேன். அதற்கான நேரம் இதுதான். டிரம்ப் வெளியேறிவிட்டார், நீங்கள் உங்களால் முடியாது என்கின்றீர்கள்.

இல்லாவிட்டால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய கிளை குறித்து விசாரணையை நாங்கள் கோரவேண்டும்.

ஐக்கிய நாடுகள் நாயகத்திற்கான எங்களின் வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றப்போகின்றோம் என்றால் நாங்கள் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

அதனை நிறைவேற்றாவிட்டால் நாங்கள் நெருக்கடியான நிலையை சந்திப்போம். அனைத்து கட்சிகளும் இணைந்து எங் களின் காலத்தில் உருவாக்கப்பட்ட உண்மை நல்லிணக்க ஆணைக்குழு குறித்த யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்பித்து நிறைவேற்றவேண்டும். நான் அதற்கு ஆதரவை வழங்குவேன்.

அதன் பின்னர் நாங்களும் முன்னோக்கி செல்கின்றோம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு தெரிவிக்க வேண்டும்.

டிரம்பினால் செய்யமுடியும் என்றால் ஏன் எங்களால்முடியாது? மனித உரிமை பேரவை ஒரு சிலர் மீது மாத்திரம் பாயமுடியாது.

# “மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேச நீதி மன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என நான் தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுப்பேன்”

## பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் உமாகுமரன்

25.03.2025

இலங்கையின் உள்நாட்டு போரின் போது பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்களிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள பிரிட்டனின் நாடாளு மன்ற உறுப்பினர் உமாகுமரன் மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேசநீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என நான் தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுப்பேன் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் உள்நாட்டு போரின் போது பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்களிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை நான் வரவேற்கின்றேன்.

யுத்தத்தின் இறுதி தருணங்களில் இழைக்கப்பட்ட அட்டூழியங் களிற்கு நீதி வழங்கப்படவேண்டும் என ஐக்கிய இராச்சியத்தில் வாழும் தமிழர்களும் உலகெங்கிலும் வாழும் தமிழர்களும் நீண்டகாலமாக வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

மோதலின் வடுக்களும், பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல் லப்பட்டமையும்என்றும் நினைவிலிருந்து அழியாது. தமிழ் சமூகத்திற்குள் இது குறித்த வலி எவ்வளவு ஆழமானதாக காணப்படுகின்றது என்பது எனக்கு தெரியும், அவர்களில் பலர் 15 வருடங்களாக நீதிக்கான பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்களிற்கு எதிரான தடை முக்கியமான முத லாவது நடவடிக்கையாகும்.மிக நீண்டகாலமாக குற்றவாளிகள் தண்டனையின் பிடியிலிருந்து தப்பியுள்ளனர் .

மனித உரிமை மீறல்களிற்கு காரணமானவர்கள் தண்டனை யின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை அனுமதிக்கப்போவ தில்லை என பல காலமாக தொழில்கட்சி உறுதியளித்து வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்தது போன்று மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வ தேசநீதிமன்றத்திற்கு பாரப்படுத்தவேண்டும் என நான் தொடர்ந் தும் அழுத்தங்களை கொடுப்பேன்.



உயிர்பிழைத்தவர்கள்,விடைகளை இன்னமும் தேடும் குடும்பத்தவர்கள், இந்த குற்றங்களின் நிழலில் வளரும் அடுத்த தலைமுறையினருக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், நீதி பொறுப்புக்கூறலிற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு எனது குரலை பயன்படுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டேன்

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# பிரித்தானிய அரசாங்கத்தின் தடை நடவடிக்கையினை பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்கிறது!

27.03.2025

இலங்கை உள்நாட்டுப் போரின் போது நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் உட்பட கடுமையான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான நான்கு நபர்கள் மீது சொத்து முடக்கம் மற்றும் பயண தடைகளை விதித்ததற்காக பிரித்தானிய தமிழர் பேரவை (BTF), பிரித்தானிய அரசாங்கத்தை வரவேற்று பாராட்டுகின்றது.

உலகளாவிய மனித உரிமைகள் தடை விதிமுறைகளின் கீழ் மாக்னிட்ஸ்கி பாணியிலான (Magnitsky Style) தடையை அமல்படுத்தவும், (1) இலங்கை ஆயுதப் படைகளின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா, (2) முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, (3) இலங்கை முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் (4) துணை இராணுவக் குழுவின் முன்னாள் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கருணா அம்மான் (கருணா குழு) ஆகியோருக்கு எதிராகப் பயணத் தடை மற்றும் சொத்துக்களை முடக்குவதற்காக எடுக்கப்பட்ட இங்கிலாந்து அரசாங்கத்தின் முடிவினைப் பாராட்டுகிறோம்.

பிரித்தானியாவில் 2024 இல் நடந்து முடிந்த தேர்தலின் போது, தாங்கள் அளித்த வாக்குறுதிகளில் ஒரு பகுதியை நிறைவேற்றியதற்காக பிரதமர் ரைட் ஹானரபிள் சேர் கெய்ர் ஸ்டார்மர் (Rt Hon Sir Keir Starmer MP) மற்றும் வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான செயலாளர் ரைட் ஹானரபிள் டேவிட் லாமி எம்பி (Rt Hon David Lammy MP) ஆகியோருக்கு நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிரதமர் தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதியானது இந்த நேரத்தில் நினைவுகூரத் தக்கது. (https://www.youtube.com/watch?v=6aFa36ZY61E)

அத்துடன் இலங்கையில் குற்றவாளிகளுக்கு எதிராக மாக்னிட்ஸ்கி சட்டத்தை பிரயோகித்தமைக்காக அமெரிக்கா மற்றும் கனடாவுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

அமெரிக்காவின் “மேக்னிட்ஸ்கி சட்டம்” போன்ற சட்டத்தைப் பயன்படுத்தி, பிரித்தானியா தமிழர் பேரவை, பிரித்தானியாவில் வசித்து வரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் வாழும் தமிழ் மக்கள் அமைப்புகளின் பத்து வருட காலத்திற்கும் மேலாக இலங்கை அரசாங்கத்திற்கெதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சர்வதேச நீதி விசாரணைக்காக, தொடர்ச்சியான கோரிக்கைகளை ஐ.நாவில் முன்வைக்க எம்முடன் தொடர்ந்து பயணித்த பல அரசியல்வாதிகளுடன், குறிப்பாக முன்னாள் கன்சர்வேடிவ் பாராளுமன்ற உறுப்பினர் ரைட் ஹானரபிள் தெரசா வில்லியர்ஸ் (Rt Hon Theresa Villiers), ரைட் ஹானரபிள் சேர் ஸ்டீபன் டிம்ஸ் எம்.பி. (Rt Hon Sir Stephen Timms MP) ஆகியோர் குறிப்பிடப்படக் கூடியவர்கள். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளுக்கு எம்முடன் கலந்துகொண்ட வெஸ் ஸ்ட்ரீட்டிங் பாராளுமன்ற உறுப்பினர் (Wes Streeting) MP, ரைட் ஹானரபிள் சேர் எட் டேவி பாராளுமன்ற உறுப்பினர் (Rt Hon Sir Ed Davey) போன்றோர் இலங்கையில் அட்டூழியக் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கக் கோட்பாட்டைப் (Universal Jurisdiction) பயன்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையாளர்கள் மீண்டும் மீண்டும் உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

2020 மார்ச்சில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு பிரித்தானிய தமிழர் பேரவையுடன் விஜயம் செய்த தெரசா வில்லியர்ஸ், அப்போதைய கன்சர்வேட்டிவ் அரசாங்கம் இது தொடர்பாக ஒரு சட்டத்தை முன்வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக எங்களுக்கு உறுதியளித்தார். இதன் விளைவாக ஜூலை 2020 இல் உலகளாவிய மனித உரிமைகள் தடை விதிமுறைகள் (Global Human Rights Sanctions Regulations) உருவாக்கப்பட்டன. இந்த சட்டம் தற்போது நடைமுறையில் உள்ள நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறலுக்காக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நீதிக்காக போராடும் அதே வேளை, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனவழிப்பு போன்ற அட்டூழியக் குற்றங்கள் செய்தவர்களுக்கு எதிராக பிரித்தானியாவில் தடைகளை விதிப்பதற்கான நடவடிக்கைகளை BTF தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

மார்ச் 2009இலிருந்து ஐ.நா.மனித உரிமை கழகத்தில் (UNHRC) BTF இன் தொடர்ச்சியான முயற்சிகள், அங்கு மேற்கூறிய அரசியல்வாதிகள் மற்றும் எம் சகோதர அமைப்புகளுடன் இணைந்து எடுத்த காத்திரமான நடவடிக்கைகளின் விளைவாக மார்ச் 2021 இல் HRC/RES/46/1 எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து அக்டோபர் 2022 இல் HRC/RES/51/1 என்ற மேலும் வலுவூட்டப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த இரண்டு தீர்மானங்களின் அடிப்படையில் சிறீலங்கா பொறுப்புக்கூறல் திட்டத்தை (OSLAP) நிறுவி செயல்பாடுகளை தொடங்கின.

OSLAP இற்கு வழங்கப்பட்ட ஆணை (Mandate), மனித உரிமை மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான (1) எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்குவதற்கும், (2) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் தப்பியவர்களுக்காக வாதிடுவதற்கும், (3) தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்துடன் உறுப்பு நாடுகள் உட்பட தொடர்புடைய நீதித்துறை நடவடிக்கைகள் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் (5) தகவல் மற்றும் ஆதாரங்களை சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாத்தல் போன்றனவாகும். அத்துடன் இனவழிப்பு குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களையும் OSLAP இற்கு தொகுத்து அனுப்பி வைக்க முடியும்.

இதன் விளைவாக, ஆகஸ்ட் 2024 இல் வெளியிடப்பட்ட OHCHR இன் இடைக்கால அறிக்கை (HRC/57/19), இலங்கை




ஆயுதப் படைகளால் இழைக்கப்பட்ட பல மனித உரிமை மீறல்களை OSLAP இன் சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு சுட்டிக் காட்டியது.

2024 செப்டெம்பர் மாதத்தில் (OSLAP) தனது வசமுள்ள முக்கியமான அடையாள வழக்குகளை (Emblematic Cases) உள்ளடக்கிய தனது அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக மேலும் ஒரு வருட கால நீட்டிப்பு வழங்கப்பட்டு, 2025 செப்டெம்பரில் நடைபெறவுள்ள 60வது மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை மீது கொண்டு வரவிருக்கும் புதிய தீர்மானம் இலங்கை அரசாலும் பாதுகாப்புப் படையினராலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களின் அளவையும் அதன் பாதிப்புகளையும் வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

OSLAP இற்கு வழங்கப்பட்ட ஆணைக்கு அமைய, ஐ.நா. உறுப்பு நாடுகள் தங்கள் நீதித்துறை பொறிமுறைகளில் சட்ட நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கான தகவல்களை வழங்க OSLAP தயாராக உள்ளது, ஒரு முக்கியமான சாதகமான அம்சமாகும்.

இவ்வாறாக முக்கியமான சர்வதேச தளங்களில் தமிழ் மக்கள் எடுத்த முக்கியமான நகர்வுகளின் தொடர்ச்சியாக ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றமிழைத்தவர்கள் மீது அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியாவில் கொண்டு வரப்பட்டுள்ள தடைகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை.

உலகளாவிய மனித உரிமைகள் விதிமுறைகள் 2020 இன் (Global Human Rights Sanctions Regulations) கீழ் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதில் இங்கிலாந்து அரசாங்கம் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதை தொடர்ந்து மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் பல நாடுகளை, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) உள்ள நாடுகள் அதனை பின்பற்ற ஊக்குவிக்கும்.

# வெளிநாட்டு மகிழுந்து மீது 25 % புதிய இறக்குமதி வரிகளை அறிவித்தார் அமெரிக்க ஜனதிபதி டொனால்ட் டிரம்ப்

27.03.2025

உலகளாவிய வர்த்தகப் போரை விரிவுபடுத்தும் அச்சுறுத்தலாக, அமெரிக்காவிற்குள் வரும் மகிழுந்துகள் மற்றும் மகிழுந்துப் பாகங்கள் மீது 25% புதிய இறக்குமதி வரிகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

புதிய வரிகள் ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும், வாகனங்களை இறக்குமதி செய்யும் வணிகங்கள் மீதான கட்டணங்கள் அடுத்த நாள் தொடங்கும் என்றும் டிரம்ப் கூறினார். பாகங்கள் மீதான கட்டணங்கள் மே அல்லது அதற்குப் பின்னர் தொடங்கவுள்ளது.

இந்த நடவடிக்கை மகிழுந்து துறையில் மிகப்பெரிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று கூறிய ஜனாதிபதி, இது அமெரிக்காவில் வேலைகள் மற்றும் முதலீட்டை அதிகரிக்கும் என்று உறுதியளித்தார்.

ஆனால் இந்த நடவடிக்கை அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க மகிழுந்து உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்துவதற்கும், விலைகளை அதிகரிப்பதற்கும், நட்பு நாடுகளுடனான உறவுகளை சீர்குலைப்பதற்கும் வழிவகுக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு அமெரிக்கா சுமார் எட்டு மில்லியன் மகிழுந்துகளை இறக்குமதி செய்தது. இது சுமார் $240 பில்லியன் வர்த்தகத்தையும் ஒட்டுமொத்த விற்பனையில் பாதியையும் கொண்டிருந்தது.

அமெரிக்காவிற்கு மகிழுந்துகளை வழங்கும் வெளிநாட்டு விநியோக முகவர்களில் மெக்சிகோ முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து தென் கொரியா, ஜப்பான், கனடா மற்றும் ஜெர்மனி உள்ளன. டிரம்பின் சமீபத்திய நடவடிக்கை உலகளாவிய மகிழுந்து வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிகளை உயர்த்த அச்சுறுத்துகிறது.



பல அமெரிக்க மகிழுந்து நிறுவனங்கள் மெக்சிகோ மற்றும் கனடாவிலும் செயல்பாடுகளைக் கொண்டுள்ளன. அவை மூன்று நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ் அமைக்கப்பட்டன.

இந்த உத்தரவு முடிக்கப்பட்ட மகிழுந்துகளுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவில் அசெம்பிள் செய்வதற்கு முன்பு பெரும்பாலும் பிற நாடுகளிலிருந்து அனுப்பப்படும் மகிழுந்து பாகங்களுக்கும் பொருந்தும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இருப்பினும், கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து வரும் பாகங்கள் மீதான புதிய வரிகள் விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லை ரோந்து வரிகளை மதிப்பிடுவதற்கான ஒரு அமைப்பை அமைத்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அண்டை நாடுகள் ஒவ்வொரு நாளும் பில்லியன் கணக்கான மதிப்புள்ள பொருட்கள் எல்லைகளைக் கடப்பதைக் காண்கின்றன.

நேற்றுப் புதன்கிழமை, ஜெனரல் மோட்டார்ஸின் பங்குகள் தோராயமாக 3% சரிந்தன. ஜனாதிபதி வரிகளை உறுதிப்படுத்தியபோது கூறிய கருத்துக்களுக்குப் பின்னர், விற்பனை ஃபோர்டு உட்பட பிற நிறுவனங்களுக்கும் பரவியது.

வரியில் மாற்றிக்கொள்ள வாய்ப்பு உள்ளதா என்று கேட்டதற்கு டிரம்ப் இல்லை என்று பதிலளித்தார். இது நிரந்தரமானது என்று கூறினார்.

# முன்னாள் சிறீலங்கா இராணுவ தளபதிகள் உள்ளிட்டோருக்கான பிரித்தானிய அரசாங்கத்தின் தடையை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வரவேற்பு

27.03.2025

'மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையின் உள்ள நால்வருக்கு எதிராக தடை விதித்துள்ளதன் ஊடாக பிரித்தானியா இலங்கையில் பொறுப்புக்கூறலை மேம்படுத்தியுள்ளது' என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.




இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் முன்னாள் இராணுவ தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரிய, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு எதிராக பிரித்தானிய அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

இந்தநிலையில் இது தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பிரதி பணிப்பாளர் மீனாக்சி கங்குலி விடுத்துள்ள அறிக் கையில் குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

'1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை அரச தரப்புக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற போரில் பரலவான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களைச் செய்தனர்' என்று அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எனினும் அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் மனித உரிமை மீறல்களை மூடிமறைப்பதற்கும் அவற்றுக்கு பொறுப்பானவர்களை பாதுகாக்கவும் முயன்றதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

'அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச குற்றங்கள்



தொடர்பாக ஆதாரங்களை சேகரித்து பொறுப்புக் கூறலை கோருவதற்கான தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்மொழிந்த இணைத் தலைமை நாடுகளில் பிரித்தானியாவும் ஒன்றாகும்'. எனவே, 'இலங்கை பொறுப்புக்கூறலை அடைவதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், நீதியைப் பெறுவதற்கான சர்வதேச நடவடிக்கைகள் அவசியமாகும்' என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

'வெளிநாட்டு அரசாங்கங்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதிக்க வேண்டும்'.

# மியான்மர் மற்றும் தாய்லாந்தில் நிலநடுக்கம்: 1600 பேருக்கு மேல் உயிரிழப்பு

29.03.2025

மியான்மரை ஒரு சக்திவாய்ந்த நிலநடுக்கம் உலுக்கியுள்ளது, இராணுவ ஆட்சிக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பாங்காக் வரை பலத்த நில



நடுக்கம் உணரப்பட்டது, அங்கு அதிகாரிகள் அவசரகால நிலையை அறிவித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மத்திய மியான்மரை 7.7 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது, தாய்லாந்தின் பாங்காக் வரை பலத்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் (USGS) இந்த நிலநடுக்கத்தின் மையப்பகுதி மியான்மரின் மண்டலே நகருக்கு அருகில், சுமார் 10 கிலோமீட்டர் ஆழத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் சுமார் 800 மைல்கள் தொலைவில் உள்ள பாங்காக் வரை எதிரொலித்துள்ளது.

சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக நூற்றுக்கணக்கான குடியிருப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் அதிர்ந்த கட்டிடங்களிலிருந்து வெளியேறினர்.

இந்த நிலநடுக்கத்தில் 1600க்கும் அதிகமாக இறந்துள்ளதாகவும், 3500 பேர் காயமடைந்துள்ளதாகவும் மியான்மர் இராணுவ ஆட்சிக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் மியான்மரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தியது, இதில் நிலநடுக்கத்தின் மையப்பகுதியான மண்டலே நகரத்தில் உள்ள முன்னாள் அரச அரண்மனையின் சில பகுதிகளும் அடங்கும்.

பாங்காக்கில், கட்டுமானத்தில் இருந்த ஒரு உயரமான கட்டிடம் இடிந்து விழுந்ததில் குறைந்தது எட்டு பேர் இறந்ததாக உறுதிப்படுத்தப்பட்டது, மேலும் டஜன் கணக்கானவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரான்ஸ் உறுதியளித்துள்ளன.

# ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் ஆதிகாரப்பூர்வ மகிழுந்து வெடித்து தீப்பிடித்தது; கொலை முயற்சியில் இருந்து தப்பிய அதிபர்

31.03.2025

மாஸ்கோ: ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் அதிகாரப்பூர்வ மகிழுந்துகளில் ஒன்று சாலையில் நின்றிருந்த நிலையில் திடீரென வெடித்து தீப்பிடித்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது அதிபர் புடினை கொல்வதற்கான சதியா என்ற கோணத்தில் விசாரிக்கப்படுகிறது. ரஷ்யா தலைநகர் மாஸ்கோவின் லிப்யான்கா பகுதியில் எப்எஸ்பி உளவுத்துறையின் தலைமையகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் முன்பாக சாலையில் அதிபர் புடினின் அதிகாரப்பூர்வ மகிழுந்துகளில் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. இந்த மகிழுந்து திடீரென வெடி சத்தத்துடன் தீப்பிடித்து எரிந்தது. இயந்திரப் பகுதியில் பிடித்த தீ மளமளவென மகிழுந்து முழுவதும் பற்றியது. உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் விரைந்து தீயை அணைத்தன. இந்த சம்பவத்தை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதிபர் புடின், எப்போதுமே ரஷ்யாவின் தயாரிப்பான லிமோசின் மகிழுந்துகளை மட்டுமே பயன்படுத்துவார். அவரது அவுரஸ் செனட் லிமோசின் மகிழுந்துகள் பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் கொண்டவை. சுமார் ரூ.3 கோடி மதிப்பிலான இந்த மகிழுந்துகளை அதிபர் மாளிகை பராமரித்து வருகிறது. இவற்றில் ஒரு மகிழுந்து தான் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. அந்த சமயத்தில் மகிழுந்தில் யார் இருந்தார்கள் என்பது பற்றி ரஷ்யா தகவல் வெளியிடவில்லை.

இது அதிபர் புடினை கொல்வதற்கான சதித்திட்டமாக இருக்குமா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படுகிறது. உக்ரைனுக்கு எதிரான போரைத் தொடர்ந்து புடினை கொல்ல ஏற்கனவே பலமுறை சதித்திட்டங்கள் நடந்துள்ளதாக கூறப்படுகிறது. இத்தகவலை உக்ரைன் இராணுவ உளவுத்துறை தலைவர் புடானோவே கூறி உள்ளார். எனவே, புடினை கொல்வதற்கான உக்ரைனின் சதித்திட்டமாக இது இருக்குமோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இதுதவிர சமீபகாலமாக ரஷ்யாவின் இராணுவ உயர் அதிகாரிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டு வருகின்றனர். கடந்த



ஆண்டு மாஸ்கோவில் நடந்த குண்டுவெடிப்பில் ரஷ்ய அணுசக்தி படைகளின் தலைவர் ஜெனரல் இகோர் கொல்லப்பட்டார். இந்த படுகொலைக்கு உக்ரைன் பொறுப்பேற்றது. எனவே அதிபர் புடினின் மகிழுந்து தீப்பிடித்ததற்கும் உக்ரைனுக்கும் உள்ள தொடர்பு குறித்தும் விசாரிக்கப்படுகிறது.

**எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப்போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்குத் தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்று தான் அழைக்க வேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறும்

-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -



மக்கள் வெளியேறிய நிலையில் இடிபாடுகளுடன் சுடுகாடாய்க் கிடக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவப் பேய்கள் வெற்றிக்கொடியைப் பறக்கவிடலாம். தமிழரின் இராச்சியத்தை கைப்பற்றிவிட்டதாக நினைத்து தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதக் கும்பல்கள் பட்டாசு கொளுத்திக் குதூகலிக்கலாம். இராணுவ மேலாதிக்க நிலையை எட்டிவிட்டதாக எண்ணி சந்திரிகா அரசு சமாதானப் பேச்சுக்கான சமிக்ஞைகளையும் விடலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றை தெட்டத்தெளிவாக எடுத்தியம்ப விரும்புகிறோம். அதாவது யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும்வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்கு பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பொழுதும் பங்குபற்றப் போவதில்லை. இதுதான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி. பாரிய இராணுவப் படையெடுப்பை முடுக்கி விட்டு பல இலட்சம் மக்களை இடம் பெயரச்செய்து, வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்மண்ணை ஆக்கிரமிப்பதன் மூலம் சமாதான சூழ்நிலையும் சமரசத் தீர்வும் ஏற்பட்டுவிடும் என சந்திரிகா அரசு எண்ணுமானால் அதைப்போல அரசியல் அசட்டுத்தனம் வேறேதும் இருக்க முடியாது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது சந்திரிகாவின் ஆட்சிபீடம் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறாகும். இதன் விளைவாக சமாதானத்திற்கான சகல பாதைகளையும் கொழும்பரசு மூடிவிட்டதுடன் முழுத்தீவையுமே பெரியதொரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. யாழ்ப்பாணச் சமரில் புலிகள் இயக்கம் பேரிழப்பைச் சந்தித்து விட்டதென்றும், பலவீனப்பட்டு விட்டதென்றும் அரசு பிரச்சாரச் சாதனங்கள் உரிமை கொண்டாடுவதில் எவ்வித உண்மையும் இல்லை. இந்தச் சமரில் புலிகள் பலவீனப்படவுமில்லை. பெரிய உயிரிழப்பைச் சந்திக்கவுமில்லை. யாழ்ப்பாணச் சமரில் புலிகைளவிட இராணுவத்தினருக்கே பெரிய அளவில் உயிரிழப்பும் தளபாட இழப்பும் ஏற்பட்டிருக்கின்றது. பெரிய அளவிலான ஆட்பலத்துடன் பெரிய அளவிலான ஆயுத சக்தியைப் பிரயோகித்து தனக்குச் சாதகமான நிலப்பரப்பு வழியாக முன்னேற முயன்ற பெரும் படையணிகளை எதிர்த்து எமது சக்திக்கு ஏற்ற வகையில் நாம் சாதுரியமாகப் போராடினோம். பெரும் இடர்கள், ஆபத்துக்கள் மத்தியில் போராடியபோதும் பெருமளவில் உயிரிழப்புக்களை நாம் சந்திக்கவில்லை. இதனால் எமது படைபல சக்திக்கும் படையணிக் கட்டமைப்புக்கும் பாதிப்பு நிகழவில்லை. மரபுவழிப் போர் முறைக்கு புலிகளை ஈர்த்து எமது படைபலத்தை அழித்து விடலாம் என எண்ணிய இராணுவத்திற்கு இது ஏமாற்றைத்தையே கொடுத்திருக்கின்றது. ஒட்டு மொத்தத்தில் யாழ்ப்பாணச்சமர் எமக்கு ஏற்பட்ட பின்னடைவே தவிர தோல்வியல்ல. அதுவும் ஒரு தற்காலிகப் பின்னடைவேதான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்திலும் இதைவிட பெரிய பின்னடைவுகளைச் சந்தித்தோம். ஆனால் அந்தப்போரில் நாம் தோற்றுவிடவில்லை. இந்திய இராணுவமே இறுதியில் தோல்வியைச் சந்தித்தது. எனவே இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறுவது திண்ணம்.

சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக்கிறது. பெரும்படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக்கொள்ளுவதற்கு வெகுகாலம் செல்லாது.

(தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் - 1995ஆம் ஆண்டு மாவீரர்நாள் செய்தியிலிருந்து)



Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com




K
Kurinchi
Beauty Creations
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# சுடரான தாய்

அன்னை உதரத்தின் அக்கினி!
எண்ணை விளக்காகி
எங்களுள் எரிகின்றது!

அது தீயாகி பின் சுடராகி
முது உருவின் உணர்வாகி
மட்டுநகரில் நெஞ்சுமுட்டும்
சுட்டதுயராகித் துலங்கியது!

தம்பி திலீபன்
தாங்கிய வேள்வியில்
தம்முடல் காய்ந்து
வெந்துடல் சோர்ந்து
உயிர் ஓய்ந்தது கண்டு நாம்
கண்ணீர் விட்டோம்!
கவிதைகள் பாடினோம்!
கும்பிட்டோம்! பின்பு,
வெம்பல் அடங்கி எம்
வேலைகளில் மூழ்கினோம்!
ஆனால், பாரும்!
அன்னைபூபதித்தாய்
தன்னையும் பசித்தணலிலே திணித்து
எண்ணிறைந்த காயங்கள் பட்ட
பொன் உதரத் தீயோடு,
மன்னன் திலீபனின் ஆத்மாவைப்
பின்தொடர்ந்து,
தாய்மையின் நித்தியச்சுடராய்
நிலமிசை நிமிர்ந்தாள்!

வாழ்வைச் செதுக்கும்
வலிமை கொண்டவள் தாய்!
வீழ்பழி நேர்ந்தக்கால்
சூழ் புயலாகி
பகை உழுதபாதையில்
நெருப்பாய்ப் பெருகி
தொகை எதிரி துகளாக
துர்க்கையாய் மாறுவாள்!

உள் துளைத்த சினம்
உருப்பெருக்கம் எய்தியதால்
உதிரம் கருகவென
உணவுமறுத்து,
உட்திணிந்த விடுதலைப்பசி நெருப்பில்
உருகி ஆன்மா ஓடவென
முப்பதுநாள் முழுதும் துடித்தே அன்று
சுதந்திரத்தின்
சுடரானாள் பூபதித் தாய்!

திசைவெளி விருட்சங்கள்
தீப்பிடித்து எரிய
அன்னை ஒய்ந்தகணத்தில்
அவதரித்த போரில்,
வேய்ந்த ஒரு இலட்சம்
வெகுளிப்படையில்
தோய்ந்த குரதியாடி
தொகையானோர் வீழ,
பாய்ந்த புலியின் முன்
பாரதம் நிற்கமுடியாது,
வேரறுந்தே வெளிப்பட்டு,
பாராமுகச் சிங்களத்தின்
பாதகத்தைச் சந்தித்து,
வெந்தமனத்தோடு
விழுந்த தம் படைவிட்டு
அழுந்துவசை அவர் சுமந்தே
அழாக்குறையாக அகன்றார்!

கருவறையில்காவி
உருதந்து, உணர்வு ஈந்து
உதிரம்பெருக்கி எம்
சதிரம்நோகாது ஈன்று,
மதுரப்பால் தந்து
மருந்து தான் உண்டு
வருத்தி வகை வகையாய்
அருந்த, உண்ண
அனைத்தும் தந்து,
விருந்து ஈந்து வளர்க்கும்
தாயின் அன்ன உதரம்
சுடரானபோதும் அது
தீமைசூழின் தீயாக மாறுமில்
உவமையென பூபதி
இவ்வையத்தில்
வாழ்ந்து சென்றாள்!

நெடுந்துயர்காவி
நொந்தெரிந்து சுருண்டு கருகி
மாய்ந்து கிடக்கும் எம்
மண்ணைப் பார்த்து
மனம் பொறுக்காது
உதிரம் தீயாக உருப்பட
அதரங்கள் நெரும
அங்கே தாயகத்தில்
ஆயுதங்கள் தாங்கி
சமராடும்காட்சி கண்டு அன்று
சிங்களம் அடங்கியது! இன்றோ
நடுங்கிக் கிடக்கின்கிறது!
பொங்கிய துயரின் பெருக்கிடை
கங்குல்கழியவே எங்கள்
தாய்க் குலம்
கலங்கள் தூக்கவே
விளங்கும் ஒளியானாள்
கலங்கரைப் பூபதித்தாய்!

சுதந்திரத்தின் சுடரான
அன்னை இவள்
பதந்தனைத் தொடர்ந்த
புதிய பூபதிகள்
நிதம்எழுந்து நிலமிசை விரிய,
உதித்த தாரகைகள்
கதிர்த்தெழுந்த கதிரவனாய்
முதிர்ந்த விடுதலையின்
மூலச்சுடராய்
கொதித்தே குதித்துள்ளனர்!

சிதைக்கப்பட்ட தாயின்,
சோதரியின், சொந்தங்களின்
சதைத்துண்டங்களை
திரட்டியெடுத்த தீரத்தின் உருவாய்
பகைவிரட்டும் தீயாய்
உவகைத் தாயகத்தை
மிகை வீரத்தால் மீட்க
பூவிரியும் நினைவுகளோடு
புதுயுகம்காணப் புறப்பட்ட
எமதீழ மகளிர் மாபடைஎழுக

பசிநெருப்பு எனும் உதிரத்தீயால்
திசைகள் திறந்திட அன்று
நடுதிசி இருளில்...
அன்னை பூபதி ஏற்றிவைத்த
சுதந்திரச் சுடரின்
விதந்திடும் தோற்றம்
வீறுகொண்டு
இது வழியெனக்காட்டி
வெற்றியின் பாதையில்
நாட்டுப் பற்றாளர்களைக்
கூட்டி வளர்க்கின்றது!

நன்றி - ந.கிருஷ்ணசிங்கம், எரிமலை ஏப்ரல் 2006




# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்பு 10.04.2002

***கிளிநொச்சியில் 10.04.2002 அன்று நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தெரிவித் திருந்தார். 700ற்கும் மேற்பட்ட செய்தியாளர்களைச் சந்தித்த தலைவர் அவர்கள் சுமார் இரண்டரை மணிநேரம் செய்தி யாளர் மாநாட்டை நடாத்தியிருந்தார். அங்கே பலதரப்பட்ட கேள் விகளுக்கும் அவர் விரிவான பதில்களை வழங்கியிருந்தார்.***





## "தாயகம் - தேசியம் - தன்னாட்சி நிரந்தரத் தீர்விற்கான அடிப்படைகள்"

### - தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள்

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள் பற்றியும் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடுகள் பற்றியும் ஊடக வியலாளர்கள் தொடுத்த வினாக்களுக்கு விடையளித்தார். இச் செய்தியாளர் மாநாட்டில் தலைவர் பிரபாகரனுடன், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், உட்பட திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் உடனிருந் தனர். செவ்வியின் முக்கிய அம்சங்களை கீழே தொகுத்தளித் துள்ளோம்.



தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமாதான முயற் சிகளில் புலிகள் இயக்கத்தின் நேர்மை மற்றும் உண்மைத் தன்மை பற்றிக் கேட்டபோது தலைவர் பிரபாகரன் கூறினார் “நாங்கள் உண்மையாகவும், நேர்மையுடனுமே சமாதான நட வடிக்கைகளில் இறங்கியுள்ளோம். நாங்கள் ஒரு உண்மை யான சமாதானத்தை விரும்புகின்றோம். ஆரம்பத்தில், ஒரு தலைப்பட்சமாக நான்கு மாதங்களாக நாம்தான் போர் ஓய்வைக் கடைப்பிடித்திருந்தோம், அது மட்டுமல்லாது சமாதான சூழலை உருவாக்குவதற்காக தொடர்ந்தும் பல்வேறு முயற் சிகளை எடுத்து வருகின்றோம்”.



இலங்கையிலிருந்து அதிகதொலைவிலுள்ள நோர்வே நாட்டை பேச்சு அனுசரணையாளராக தேர்ந்தெடுக்க எவை காரணம் என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டபோது தலைவர் பிரபாகரன் சொன்னார் “அரசியல் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் நோர்வே பிரபல்யம் பெற்றுள்ளது. பல நாடுகளில் மக்கள் இனங் களுக்கு இடையேயான பிணக்குகளை தீர்த்துவைக்கும் முயற் சிகளில் நோர்வே ஈடுபட்டு வருகின்றது, நோர்வேயின் அனு சரணையை முதலில் சிறீலங்கா அரசே கோரியிருந்தது குறிப் பிடத்தக்கது, நோர்வே நடுநிலையான நாடு. இந்தப் பிராந்தியத் தில் அதற்கென எந்தவொரு மூலோபாயநலனும் இல்லை. இந்த வகையில் சிறீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைக்கு அனு சரணை வழங்குவதற்குப் பொருத்தமான நாடு நோர்வே என்று நாமும் கருதியதால் அதை அனுசரணையாளராக எமது ஒருஇயக்கமும் ஏற்றுக் கொண்டது”.



அமெரிக்க நகரங்களை தாக்கிய தற்கொலை விமானத்தாக் குதல் நடந்த “செப்டெம்பர்-11“ சம்பவத்தின் விளைவாக எழுந்த உலக அரசியற் சூழலே புலிகள் இயக்கத்தை சமாதானப் பாதைக்கு இழுத்துவந்தது என்று கூறப்படுவதுபற்றி தலைவ ரிடம் ஒரு செய்தியாளர் கேட்டபோது அவர் சொன்னார். “அவ் வாறு இல்லை... அந்த சம்பவம் நடக்க நாலு மாதங்கள் முன் னரே நாம் ஒருதலைப்பட் சமாகப் போர் நிறுத்தத்தை பிரகடனப் படுத்திக் கடைப்பிடித்திருந்தோம், அதுமட்டுமல்ல, நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்கெய்ம் வன்னி வந்து எம்மைச் சந்தித்திருந்தார். அவரிடம் நாங்கள் சமாதானத்தை விரும்பு கின்றோம் என்றும் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருக கின்றோம் என்றும் கூறியிருந்தோம், எனவே செப்-11 சம்ப வத்தின் விளைவாகவே நாம் சமாதானப் பாதைக்கு வந்தோம் என்று கூறுவது தவறு” என்று தலைவர் அவர்கள் தெளிவுபடுத் தியிருந்தார்.

அப்படியானால், புலிகள் இயக்கம், சமாதான வழிமுறையை நாடியதற்கு என்ன காரணம் என்று செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது தலைவர் கூறினார்... “எமது மக்களின் அர சியல் போராட்டம், முதலில் சாத்வீக வழியிலேயே ஆரம்ப மானது. முன்னைய தமிழர் தலைமைகள் சாத்வீகப் போராட் டத்தின் மூலம் எமது மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுவிடலாம் என நம்பினர், ஆனால், அவர்களது அகிம்சைப் போராட்டத்தை சிங்கள அரசு ஆயுதபலம் கொண்டு நசுக்கிய போது, ஆயுதங்களைக் கையிலெடுத்த நாம் எம்மைத் தற்காத் துக் கொள்ளப் போராடினோம். எனவே, புறச்சூழலின் நிர்ப்பந் தத்தால்தான் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம், எனினும் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம். தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சிங்கள அரசுடன் நாங்கள் பேச்சு வர்த்தைகளை நடாத்திவரு கின்றோம்”.







இந்தச் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டியதன் நோக்கமென்ன என்று கேட்டபோது தலைவர் சொன்னார்... “புலிகள் இயக்கம் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவது தொடர்பாக பல்வேறான தப்பபிப்பிராயங்கள் பரப்பப்பட்டுவருகின்றன. ஆகவே, சர்வதேச ஊடகவியலாளர்களை இங்கு வரவழைத்து சமாதான முயற்சிகள் தொடர்பான எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்துக்கூறி, சமாதானவழியில் அரசியல் தீர்வுகாணும் உறுதிப்பாட்டுடன் புலிகள் இயக்கம் உள்ளது என்பதையும் அதற்காக நேர்மையுடனும், உண்மையுடனும் நாம் செயற்பட்டு வருகின்றோம் என்பதையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறுவதே இந்தச்செய்தியாளர் மாநாட் டின் நோக்கமாகும்” என்று பதிலளித்தார்.

முன்னைய பேச்சுவார்த்தைகளைப் போலவே இப்போது நடைபெறும் சமாதான முயற்சியும் தோல்விகாணுமா! அல்லது வெற்றிகரமாகத் தொடருமா! என்று கேட்டதற்கு தலைவர் பிரபாகரன் கூறினார்... “முன்னைய பேச்சுவார்த்தைகளை விட இது முற்றிலும் வேறுபட்டது, ஏனெனில், இங்கே மூன்றாம் தரப்பு அனுசரணையாளராக நோர்வே செயற்படுகின்றது, எனவே, இம்முறை பேச்சு வார்த்தைகள் நல்லமுறையில் நடைபெறும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்குண்டு”.

அப்படியாயின், தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு சமஸ்டி முறைபோன்று அரசியல் வடிவத்தை ஒரு நிரந்தரத்தீர்வாக ஏற்றுக் கொள்வீர்களா எனக்கேட்டபோது தலைவர் பிரபாகரன் சொன்னார்... “அதற்கான ஒரு அவசியம் ஏற்படவில்லை, தனிநாட்டுக்கோரிக்கையானது தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட ஒரு அரசியல் ஆணையாகும். 1977ம் ஆண்டு நடத்த பொதுத் தேர்தலில் தமிழீழத் தனி அரசை அமைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் வாக்களித்து மக்களாணையை வழங்கியிருந்தனர். அந்த மக்களாணை மனுவை ஏற்றுக்கொண்ட நாம் எமது மக்களின் அரசியல் சுதந்திரத்திற்காகவும் தனி அரசிற்காகவும் போராடிவருகின்றோம். தாயகம், தேசியம், தன்னாட்சி என்பன தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளாகும், இந்த முப்பெரும் அரசியல் ஆதாரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓர் அரசியல்தீர்வு முன்வைக்கப்படுமானால், அதை எமது மக்களும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தனி அரசுக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்வதுபற்றி நாம் பரிசீலிப்போம்”.

ஈழத்தைத் தவிர மற்றைய விடயங்கள் பற்றிப்பேச தான் தயாராக உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறியுள்ளார், இப்படியான நிலைப்பாட்டுடனேயே தாய்லாந்து செல்ல உள்ளீர்களா? என்று கேட்டபோது தலைவர் சொன்னார்.... “இப்போதைக்கு ஒருமுடிவும் எடுக்கப்படவில்லை. முடிவான தீர்வுகளும் எட்டப்படவில்லை இடைக்கால நிருவாகத்தை நடாத்துவது தொடர்பாகப் பேசத்தான் நாம் தாய்லாந்து செல்ல முடிவெடுத்துள்ளோம்”.



இடைக்கால நிருவாக அலகு பற்றிக் கேட்டபோது “தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் போதுதான் அதற்குரிய அதிகாரங்கள் பற்றிப் பேசி முடிவெடுக்கவுள்ளோம். எனவே, இடைக் கால அரசு எப்படி இருக்கும் எவ்வாறு செயற்படும் என்று இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது”.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் பற்றித் திருப்திப் படுகின்றீர்களா? என்று கேட்டதற்கு தலைவர் சொன்னார்.. “ஆம், நான் திருப்திப்படுகின்றேன். அத்துடன், சமாதானப் பாதையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் துணிச்சலான உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்”.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் சமாதான முயற்சிகளைக் குழப்பமுனைவாரா? என்று கேட்தற்கு “நாங்கள் அப்படி நினைக்க வில்லை” என்று பதிலளித்த தலைவர் அவர்கள் “அவ்விதம் அவர் முயற்சிப்பாரேயானால் அதைக் கையாளவேண்டிய பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினுடையதாகும்” என்றார்.

தமிழர் தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்பவற்றை ஏற்றுக்கொண்ட ஒரு தீர்வை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன் வைக்குமா? என்று கேட்டதற்கு தலைவர் பிரபாகரன் கூறினார்... “இத்தகையதொரு நிரந்தரத் தீர்வை முன்வைக்கும் அரசியல் அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் இப்போதைய நிலையில் இல்லையென்று நாங்கள் கருதுவதாலேயே ஒரு இடைக்கால நிருவாகத்தை சிபார்சு செய்துள்ளோம். இந்த இடைக்கால நிருவாகத்தால் வடக்கு கிழக்கு அபிவிருத்தி அடையும். அதுபோல தென் இலங்கையை பொருளாதார ரீதியாக அபிவிருத்திசெய்ய ரணில் விக்கிரமசிங்கவால் முடியும். எனவே, தமிழரைப் போல இடைக் கால நிருவாக நடைமுறையால் சிங்களவரும் நன்மை பெறுவர். இதேசமயம், இந்த இடைக்கால நிருவாத்தால் தேவையான நேரத்தையும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் பெற்றுக்கொள்ளும். அதன்பிறகு நிரந்தரத்தீர்வு பற்றி அவரது அரசாங்கத்துடன் நாங்கள் பேசமுடியும்”.

புலிகள் இயக்கம் மீதான தடையை இந்நிய அரசு விலக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா? என்று ஒரு செய்தியாளர் கேட்டபோது தலைவர் சொன்னார்... “அதை நாங்கள் விரும்புகின்றோம் தகுந்த நேரம் வரும்போது எமது இயக்கம் மீதான தடையை நீக்குமாறு இந்திய அரசிடம் கேட்டுக்கொள்வோம்”.

ராஜீவ் காந்தியின் கொலைபற்றிக் கேட்டபோது பத்துவருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு துன்பியலான சம்பவம் அதுவாகும் மேலும், இதைப்பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்க விரும்ப





வில்லை” என்று தலைவர் பதில்கூறினார்.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என உலகின் சிலநாடுகள் பிரகடனப்படுத்தியிருப்பது பற்றிக் கேட்டபோது “சில நாடுகள் அவ்விதம் செய்திருப்பது உண்மைதான். சிங்கள அரசின் சதித்தனமான பரப்புரை காரணமாக சில நாடுகள் எமது இயக்கத்தை தடைசெய்துள்ளன. எனவேதான், பேச்சுவார்த் தைகள் ஆரம்பிக்கப்படமுன்னர் எமது இயக்கம் மீது சிறீலங்கா அரசு விதித்த தடையை அது அகற்ற வேண்டும் என்று நாம் சிறீலங்கா அரசாங்கத்தைக் கோரியுள்ளோம். எமது இயக்கம் மீதான தடையை சிங்கள அரசு நீக்கும்போது எமது இயக் கத்தை தடைசெய்த ஏனைய நாடுகளும் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும்படி நாம் பிரச்சாரம் செய்வோம்” என்று தலைவர் பிரபாகரன் பதில் கூறினார்.

செம்மணி, கோணேஸ்வரி போன்ற வழக்குகளை பேச்சுவார்த் தைக்காக விட்டுக்கொடுக்கவிரும்புவீர்களா! என்று கேட்டபோது தலைவர் சொன்னார். “இந்தப் படுகொலைகள் பற்றிய வழக் குகள் தொடர்ந்து நடக்க வேண்டும். இந்த மனிதப்படுகொலை களில் ஈடுபட்ட குற்றவாளிகள் நீதியின்முன் நிறுத்தப்பட வேண்டும்”.

சிறீலங்காவின் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழிளைஞர்களது விடுதலைக்காக புலிகள் இயக்கம் மேற் கொள்ளும் நடவடிக்கை பற்றிக்கேட்டபோது “தமிழ் இளைஞர் களது விடுதலை பற்றி நாம் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றோம் இவர்களில் பெரும்பாலானோர் புலிச்சந்தேக நபர் என்றுகூறி பயங்கரவாததடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்தக் கொடும் சட்டம் நீக்கப்படவேண்டும் என்று சிறீலங்கா அரசை பேச்சுவார்த்தைகளின்போது கோரப்போகின்றோம். இதே வேளை, இவர்களது விடுதலை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றும் அவர்களைக் கோரியுள்ளோம்” என்று தலைவர் பிரபாகரன் பதிலளித்தார்.









# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# பட்டித்திடல் படுகொலை 26.04.1987

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் பத்து கி.மீ. தொலைவில் பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது. மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள இப்பூர்வீக கிராமத்தில் விவசாயம் செய்பவர்களும் கூலிவேலை செய்பவர்களும் அதிகமாக வாழ்கின்றார்கள். 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிங்கள இராணுவத்தின் தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்ற வண்ணம் இருந்தன. பட்டித்திடல் கிராமமும் 26.04.1987 அன்று இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியது.

பட்டித்திடல் கிராமத்திலிருந்து நெடுஞ்சாலையின் மேற்கே மல்லிகைத்தீவு சந்தியும் வாசிகசாலையும் உள்ளன. அப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடந்தது. அதனை அறிந்த மக்கள் தாங்கள் இராணுவத்தால் தாக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊரைவிட்டு அகன்றுவிட்டனர். பழிதீர்க்கும் எண்ணத்தில் கிராமத்திற்குள் வந்த இராணுவத்தினர் மக்களை தேடி வந்த போது கிறிஸ்தவக் குடம்பமான பொன்னம்மா குடும்பத்தை சேர்ந்த பதினெட்டுப் பேர் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் தங்களுக்கொன்றும் நடக்காது என்ற நம்பிக்கையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

வீடு வீடாகத் தேடிக்கொண்டு வந்த இராணுவத்தினர் இறை வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன். குற்றுயிரோடு இருந்தவர்களை வெட்டிவிட்டு அனைவரையும் குறிப்பாக குறை உயிரோடு இருந்தவர்களையும் வீட்டினுள் வைத்துத் தீயிட்டு படுகொலை செய்தனர். மொத்தம் ஒரே குடும்பத்தில் பதினேழு பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று கைக்குழந்தைகளுக்கும் பாடசாலை மாணவ, மாணவிகளும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டிலிருந்து திரு.கோணன் உலகநாதன் என்பவர் மட்டுமே உயிர் தப்பினார்.




26.04.1987 அன்று பட்டித்திடல் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1.உலகநாதன் ஜெயப்பிரியா (வயது 06)

2.உலகநாதன் ஜெயரதி (வயது 01 – குழந்தை)

3.உலகநாதன் யோகேஸ்வரி (வயது 26 – வீட்டுப்பணி)

4.கோனன் பத்தினியன் (வயது 42 – தொழிலாளி)

5.பத்தினியன் சீதையம்மா (வயது 34 – வீட்டுப்பணி)

6.பத்தினியன் நேசன் (வயது 17 – மாணவன்)

7.பத்தினியன் பிரகாஸ் (வயது 13 – மாணவன்)

8.பத்தினியன் சோபனா (வயது 12 – மாணவி)

9.பத்தினியன் கிருசாந்தி (வயது 10 – மாணவி)

10.பத்தினியன் அற்புதராசா (வயது 08 – மாணவன்)

11.கோணன் பொன்னம்மா (வயது 60 – வீட்டுப்பணி)

12.கோணன் மேரி (வயது 23)

13.சின்னத்துரை யோகேஸ்வரி (வயது 29)

14.சிந்தாமணி பாலமுருகன (வயது 11 – மாணவன்)

15.சிந்தாமணி யோகராசா (வயது 14 – மாணவன்)

16.சிந்தாமணி கோகுலேஸ்வரி (வயது 15 – மாணவி)

17.சிந்தாமணி செந்தில்மணி (வயது 30 – கமம்)

மூலம்: தமிழினப் படுகொலைகள் 1956 – 2001 நூல்.






# திருகோணமலை இன அழிப்பு 12.04.2006



திருகோணமலை மாவட்டம் 1980களிலிருந்து தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் கொதிப்பான ஒரு இடமாக இருந்து வந்திருக்கின்றது. இவ்வன்முறைகள் ஊடாக இம்மாவட்டதிதில் செறிவாக வாழ்ந்து வந்த தமிழர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டப்பட்டனர். சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தீவின் மக்கள் பரவல் சார்ந்த புள்ளிவிபரங்கள் இதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இதே போல் 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப்பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன.



1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை 4 மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னரே மூன்று லொறிகளில் சிங்களக்காடையர்கள் திருகோணமலை நகரக்குள் கொண்டு வரப்பட்டதை தமிழர்கள் கண்டனர். இச்சிங்கள காடையர்கள் தமிழருக்குச் சொந்தமான கடைகளை கொள்ளையடித்தபின் இக்கடைகளுக்கு தீயூட்டினர். இதனால் திருகோணமலை நகரிலிருந்து பெரிய புகைமூட்டம் எழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விரைவில் தமிழர் மேலான தாக்குதல்கள் ஆரம்பித்தது.

இத்தாக்குதல்களுக்கு துவக்குகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏப்பிரல் மாதப் புதுவருடக் கொண்டாட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நகருக்கு சென்றிருந்த பல தமிழர் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

வன்முறைகள் நடைபெறுவதை அங்கு நிலைகொண்டிருந்த பல இலங்கை இராணுவத்தினர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற் ற விபரம் (பெயர் வயது)

01. சுதுபண்டா, 39
02. அந்தோனிராஜ் கீதநடனி, 33
03. சந்திரா மத்துவஸ், 50
04. கசுன் சமந்தா, 23
05. கந்தசாமி திரவியன், 56
06. அசங்கா மிலான், 21
07. சுசந்தா, 20
08. ரில்வான், 36
09. செல்வராஜா, 44
10. மயூரா பெதிகே சிவமணி, 30
11. பரூக், 55
12. ராச்மி டிலராங்கி, 08

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை







# உயர் பாதுகாப்பு வலயத்தில் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 90 பேர் படுகொலை - 01-03.04.2009 வரை

இலங்கை இராணுவம் 03 (01 தொடக்கம் 03. ஏப்ரல் மாதம் 2009) நாட்களாக தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்தியதுடன், ஆர்பிஜி குண்டுகள் மற்றும் ஐம்பது கலிபர் ரவுண்டுகளை பயன்படுத்தி பாதுகாப்பு வலயத் திற்குள் சுட்டதில் 90 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 195 பேர் காயம் அடைந்தனர். மருத்துவ மற்றும் மனிதாபி மானப் பணியாளர்கள் “எதிர்ப்பு மண்டலத்திற்குள்“ வெள்ளிக் கிழமை தற்காலிக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தங்களுக்கு இன்னும் பல மருந்துகள் இல்லை என்றும் வியாழக்கிழமை ICRC கப்பலில் 7 வகையான மருத்துவ பொருட்கள் மட்டுமே கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்தனர்.



புதன்கிழமை 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 78 பேர் காயமடைந்தனர், வியாழன் அன்று 31 பேர் கொல்லப் பட்டனர் மற்றும் 70 பேர் காயமடைந்தனர் மற்றும் வெள்ளிக் கிழமை 26 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 47 பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டனர்.

சுமார் 450 நோயாளிகள் காயமடைந்த மற்றும் நோய்வாய்ப் பட்ட பொதுமக்கள் அவர்களது உதவியாளர்களுடன் புதுமாத்த ளனில் இருந்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்



மோட்டைக்கு மற்றொரு கப்பலில் மாற்றப்பட்டனர்.



பால் பவுடர், திரிபோஷா மற்றும் சோள சோயா உள்ளிட்ட 1000 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களும் ஐசிஆர்சியால் கொண்டு வரப்பட்டது.

இதற்கிடையில், குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு



அதிகமாக காணப்படுவதாக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்தனர்.





**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.**
**நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்**
**உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு**
**தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# அம்பாறையில் 13 தமிழ் இளைஞர்கள் படுகொலை 03.04.2009

03.04.2009 அன்று அம்பாறையில் 13 தமிழ் இளைஞர்களை சிறீலங்கா சிறப்பு அதிரடிப்படையால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாணம லாகுளவில் 13 தமிழ் இளைஞர்களை சிறப்பு அதிரடிப்படை (STF) கமாண்டோக்கள் வெள்ளிக்கிழமை சுட்டுக் கொன்றதாக அம்பாறை வட்டாரத்தில் இருந்து தெரிவித்தன. துப்பாக்கிச் சூடு சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், பலியானவர்கள் அப்பாவி தமிழ் இளைஞர்கள் என்றும், அவர்களில் அப்பகுதிக்கு வேலைக்குச் செல்லும் இளைஞர்கள் என்றும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், அவர்கள் தமிழ்ப் புலிப் போராளிகளைப் பயிற்றுவித்தவர்கள் என்று பாதுகாப்புத் துறை கூறியது, அவர்கள் பதுங்கியிருந்த இடத்தை சுற்றி வளைத்து தேடுதல் மற்றும் தேடலில் STF கமாண்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 71 பொதுமக்கள் படுகொலை – 05.04.2009

ஞாயிற்றுக்கிழமை, புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டி வந்த சிறீலங்கா இராணுவம் ஞாயிற்றுக்கிழமை, புலிகளின் முக்கிய சண்டை அமைப்புகள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள ஒரு பிரதேசத்திற்குள், சிறீலங்காப் படையால் முற்றுகையிடப் பட்டதாகக் கூறி, அதன் கூற்றுக்கு முரணானது. புலிகளுக்குப் பலத்த இழப்புகளை ஏற்படுத்திய பிரதேசம் அப்பிரதேசத்தை சிறீலங்கா இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டதாக கூறினர். இதற்கிடையில், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை இரவு 8:30 மணி முதல் சிறீலங்கா இராணுவத்தினர் முடுக்கிவிட்டனர். பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தின் சமீபத்திய அறிக்கைகளின்படி சனிக் கிழமை. குறைந்தபட்சம் 71 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 143 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் மற்றும் சிறீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வலயத்திற்குள் எறிகணைத் தாக்குதல் நடத்தியதில் ஒரு மாதக் குழந்தைக்கு காயம் ஏற்பட்டது. தற்காலிக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த டாக்டர்கள் குழந்தையின் உயிரை காப்பாற்ற போராடினர்கள்.



ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பொக்கனைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் சிறீலங்கா விமானப்படையின் ஹெலிகாப்டர் ஏவப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் 8 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

மாத்தளன், பொக்கனை, வலைஞர்மடம், இரட்டை-வாய்க்கால் மற்றும் பாதுகாப்பு வலயத்தின் ஏனைய பகுதிகளை குறிவைத்து சிறீலங்காப் படையின் கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தினர்.

புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்ட பொதுமக்களில் குறைந்தது 23 பேர் உயிரிழந்துள்ளனர்.



உள்ளூர் உதவிப் பணியாளர்கள், பாதுகாப்பான வலயத்திற்குள் இருக்கும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை பலவந்தமாக அடிபணியச் செய்யும் நோக்கத்துடன் சிறீலங்காப் படையினர் முடுக்கிவிடுவார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.





# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களின் சுவடுகள் - 05.04.2009














# ‘பாதுகாப்பு வலயத்தில்’ சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 129 பொதுமக்கள் படுகொலை – 08.04.2009

இலங்கை இராணுவம் நடத்திய பீரங்கி எறிகணைகள் புதன்கிழமையன்று நாள் முழுவதும் "பாதுகாப்பு வலயம்" என அழைக்கப்படும் பகுதிக்குள் 129 பொதுமக்களின் உயிர்களைக் கொன்றதாகவும், 282 பேர் காயமடைந்ததாகவும் சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புதன் கிழமை காலை பொக் கனையில் உள்ள சிறுவர் பராமரிப்பு / போஷாக்கு நிலையத்தை இலக்கு வைத்து மூன்று பீரங்கி குண் டுகள் வீசப்பட்டன, அங்கு பல பொதுமக்கள் குழந்தைகளுக் கான மனிதாபிமான பால் உணவுகளை பெறுவதற்காக காத்திருந்தனர். குழந்தை பராமரிப்பு நிலையத்தின் மீதான ஷெல் தாக்குதல், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட "மிகக் கொடூரமான படுகொலை" என்று புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையின் மீட்புப் பணியாளர் ஒருவர் கூறினார். படுகொலை, மாலை வரை தொடர்ந்த தாக்குதல்கள் காரணமாக.

சமீபத்திய அறிக்கைகளின்படி, பாதிக்கப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள், 40 முதல் 80 பேர் வரை உள்ளனர்.







# முல்லைத்தீவு பச்சைப் புல்மோட்டைப் பகுதியில் 17 பொதுமக்கள் படுகொலை – 11.04.2009

இலங்கை இராணுவம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பச்சைப் புல்மோட்டை என்ற இடத்தை இலக்காகக் கொண்டு, "பாதுகாப்பு வலயத்தின்" வடக்குப் பகுதியைப் பிரித்து கைப்பற்றும் நோக்கில், "பாதுகாப்பு வலயம்" மீது தீவிரத் தாக்குதலை நடத்தியதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிகாலை 3:15 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினரின் கடுமையான ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடு தொடங்கியது, 45 நிமிடங்களுக் குள், பச்சைப்-புல்மோட்டைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயத்தின் பொதுமக்கள் பகுதிக்குள் 300 க்கும் மேற்பட்ட குண்டுகள் வெடித்தன. அதே நேரத்தில் மழை பெய்து வந்ததால், வெள்ளம் சூழ்ந்துள்ள பதுங்கு குழிகளில் மக்கள் ஒளிந்து கொள்ள கூட முடியாமல் தவிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனிக்கிழமையன்று சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல் களில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 48 பேர் காய மடைந்தனர்.



# ‘பாதுகாப்பு வலயத்தில்’ சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 31 பொதுமக்கள் படுகொலை – 12.04.2009

பாதுகாப்பு வலயத்திற்குள் ஞாயிற்றுக்கிழமை நாள் முழுவதும் குறைந்தது 31 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்த பொதுமக்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை, ஆனால் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் சிறீலங்கா இரா ணுவத்தினர் பாதுகாப்பு வலயத்தின் மீது ஒருங்கிணைந்த தாக் குதல்களில் ஈடுபட்டதால், குறைந்தது 36 காயமடைந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பலியானவர் களில் 30 பேர் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகவும், 6 பேர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகவும் மருத்துவ வட் டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் இருவர் மருத் துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இவ் புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனையை அடையும் மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு வீச்சின் எல்லைக்குள் வருகிறார்கள்.

தற்காலிக மருத்துவமனை மற்றும் அதற்கான நுழைவுப் பாதை சிறீலங்கா இராணுவ நிலைகளுக்கு அருகில் அமைந்துள்ளது.

மாத்தளனின் சமீபத்திய அறிக்கைகளின்படி, ஆங்காங்கே துப் பாக்கிச் சூடு தொடர்ந்து காயமடைந்தவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் போது இடப்பெற்றதாக கூறிப்பிடப் பட்டுள்ளது.





# ‘பாதுகாப்பு வலயத்தில்’ சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 23 பொதுமக்கள் படுகொலை – 13.04.2009

இரவு 8:30 மணி முதல் கடந்த 12 மணி நேரத்தில் இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஞாயிறு முதல் திங்கட்கிழமை காலை 8:00 மணி வரை, 15 முதல் 20 வரையிலான எண்ணிக்கையிலான கொலைகளில் பெரும் பாலானவை, திங்கள்கிழமை அதிகாலையில் சிறீலங்கா இராணுவதினர் பாதுகாப்பு வலயத்திற்குள் முன்னேறு வதற்கான புதிய தளத்தை முடுக்கிவிட்டபோது நிகழ்ந்தன. பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் வடக்கு அல்லது தெற்குப் பகுதியை இரண்டாகப் பிரித்து கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டு சிறீலங்கா இராணுவம் இரவு நேரத்தில் முன்னேற முயன்றது, பெரும்பாலான பொதுமக்கள் உயிரிழப்புகள் வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் பதிவாகியுள்ளன.

காலை 8:00 மணிக்குப் பிறகு சண்டை நிறுத்தப்பட்டபோது ஆங்காங்கே ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடந்ததாக அறிவிக்கப்பட்டது.










JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Free! ESTIMATES
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free
Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# அநுராதபுர இராசதானி காலத்தில் எல்லாள மன்னன் வெளியிட்ட தமிழ் நாணயம்



இலங்கையின் பூர்வீக மக்கள், அவர்களது பண்பாடு தொடர்பாகக் கூறப்பட்டு வந்த நீண்ட பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் சமீபகாலத் தொல்லியல் ஆய்வுகளால் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் நாகரிகயுகம் தோன்றிவிட்டதாகக் கூறும் இலங்கையின் மூத்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் சேனகபண்டாரநாயக இலங்கை மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் விஜயன் வருகைக்கு முந்திய பண்பாடுகளில் இருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனக் கூறுகின்றார். இதற்கு, விஜயன் தலைமையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்தாகக் கூறப்படும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் நாடோடிகளாக வாழ்ந்த கற்காலப் பண்பாட்டு மக்களும், நாகரிக உருவாக்கத்திற்கு காரணமான பெருங்கற்கால மக்களும் வாழ்ந்து வந்ததை நம்பகரமான தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி உள்ளதே காரணமாகும்.

இந்நிலையில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான மொழிகளை அடையாளப்படுத்தும் முக்கியமான சான்றான எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்னா (1962), பெர்ணாந்தோ (1969), ஆரிய அபயசிங்க (1975) போன்ற அறிஞர்கள் வடஇந்தியாவிருந்து பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி என்ற எழுத்து வடிவம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னரே தமிழ் மொழிக்குரிய தமிழ்ப் பிராமி என்ற எழுத்து வடிவம் புழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். இந்தத் தமிழ்ப் பிராமி எழுத்தின் பயன்பாடு இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் பயன்பாட்டிலிருந்து வந்ததைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றை மட்டுமன்றி அவர்களிடையே தோன்றியிருக்கக் கூடிய அரச மரபு பற்றிய பாரம்பரிய நம்பிக்கைகளையும் மீளாய்வு செய்யவேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றன. இதற்கு இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான தமிழ் நாணயங்களை முக்கியமான சான்றாகக் காட்டலாம்.

நாணயங்கள், இலக்கியங்கள்-கல்வெட்டுக்களைப் போல் விரிவான வரலாற்றுத் தகவல்களைத் தரக்கூடியவை அல்ல. ஆயினும் ஆட்சில் இருந்த ஒரு அரச வம்சத்தால் அல்லது ஒரு மன்னனால் வெளியிடப்படும் நாணயங்கள் அவர்களின் சமகாலத்திற்குரியதால், அவை நம்பகரமான சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றது. இதற்குப் பண்டைய இந்திய இலக்கியங்களில், கல்வெட்டுக்களில் சொல்லப்படாத சில அரச வம்சங்களை, மன்னர்களை, சிற்றரசர்களை நாணயங்கள் வெளிச்சத்திற்கு கொண்டுவந்ததை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்த நோக்கில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த பண்டைய தமிழ் நாணயங்கள் இதுவரை ஆராய்ந்து பார்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.



அக்குறுகொட என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட நாணயம்

## எல்லாளன் வெளியிட்ட நாணயம்?

வரலாற்றுத் தொடக்க காலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட சதுரவடிவ நாணய மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றன. சதுரவடிவில் நாணயங்களை வெளியிடும் மரபு சங்ககாலத்திற்குரிய தனிச் சிறப்பம்சமாகக் கூறப்படுகின்றது. இதனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட சதுர வடிவிலமைந்த நாணயங்கள் தமிழக மரபைப் பின்பற்றி வெளியிடப்பட்டவை எனக் கூறலாம். இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இந்நாணயத்தின் முன்பக்கத்தில் கோட்டுருவில் அமைந்த சதுரமான பெட்டிக்குள் நிற்கும் நிலையில் காளை உருவமும், அதன் தலைப் பகுதிக்கு கீழே பலிபீடம் போன்ற உருவமும் காணப்படுகின்றது. நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் சிலவற்றில் மூன்றும், வேறுசிலநாணயங்களில் நான்கு புள்ளிகளும் காணப்படுகின்றன. இந்நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் நாணயத்தின் வடிவமைப்பு சமகாலத்தில் சங்ககால மூவேந்தர்கள் வெளியிட்ட நாணய வடிவமைப்பை ஒத்திருப்பதால் இவை தமிழகத்துடன் கொண்டிருந்த அரசியல், வாணிபத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர். அவ்வாறு கூறியமைக்கு யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னர் இலங்கைத் தமிழரிடையே அரச உருவாக்கம் தோன்றவில்லை என்ற நம்பிக்கையும் முக்கியமான காரணமாகும்.

ஆயினும், தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட நாணயங்களின் பின்பக்கத்தில் பாண்டியருக்கு மீனும், சோழருக்குப் புலியும், சேரருக்கு அம்பும் வில்லும், அதியமான் போன்ற குறுநில அரசுக்கு ஆற்றுச் சின்னமும் அரச இலச்சினைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளமை இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான அம்சம். இலங்கையில் பயன்பாட்டிலிருந்த சதுர நாணயங்களின் பின்பக்கத்தில் இச்சின்னங்களைக் காணமுடியவில்லை. மாறாக நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் நான்கும், சில நாணயங்களில் மூன்று புள்ளிகளும் காணப்படுகின்றன. தமிழகத்தில் சங்க காலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் உபயோகத்தில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட மேற்குறித்த நாணயம் ஒன்றுதானும் தமிழகத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மையில் இந்நாணயம் சங்ககால மன்னர்களால் வெளியிடப்பட்டிருந்தால் இலங்கையைக் காட்டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்க வேண்டும். இந்நாணயத்தில் காணக்கூடிய இன்னொரு அம்சம், பிற்பட்டகாலத்தில் அநுராதபுர ஆட்சியாளராக இருந்த சில சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முன்பக்கத்தில் சிங்கமும் பின்



எல்லாளன் வெளியிட்ட நாணயம்

பக்கத்தில், காளை உருவம் பொறித்த நாணயத்தின் பின்பக்கத்தில் காணப்படுவதை ஒத்த சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள் காளை உருவத்தையும், சிங்கள மன்னர் சிங்க உருவத்தையும் தமது குலச் சின்னமாக அல்லது அரச சின்னமாக பயன்படுத்தியுள்ளனர் எனக் கூறலாம். நாணயங்களின் பின்பக்கத்தில் இரு மன்னர்களும் ஒரேவகையான சின்னங்களைப் பயன்படுத்தியமைக்கு இவை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறிப்பதற்காக இருக்கலாம்.

சிங்கள மன்னர்கள் சிங்கத்தை தமது குலமரபாகவும், அரச சின்னமாகவும் கருதும் மரபு விஜயன் வருகை பற்றிய கதையுடன் இணைந்த ஒன்று. இந்தச்சின்னத்தைப் பிற்கால சிங்கள மன்னர்களும் நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் காளையை அரச சின்னமாகவோ, புனித சின்னமாகவோ பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. மாறாக அந்தச்சின்னத்தை பௌத்த சிங்களப் பண்பாட்டில் ஒரு கலைவடிவாகவே பயன் படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக பௌத்த ஆலயங்களில் வாசல் பகுதியில் காணப்படும் சந்திரவட்டக்கல்லில் மலர்கள், பறவைகள், மிருகங்கள் முதலான சின்னங்களுடன் காளையும் ஒரு சின்னமாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். ஆனால் தமிழர் பண்பாட்டில் காளையைப் புனிதச் சின்னமாகக் கருதும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதற்கு யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் காளை (நந்தி) ஒரு புனித சின்னமாகவும், அரச இலச்சினையாகவும் பயன்படுத்தி உள்ளதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்நிலையில் அநுராதபுர அரசில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காளை உருவம் பொறிக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னரே அம்மரபு இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களால் பயன்படுத்தி வந்துள்ளதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது.



சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயம்

அநுராதபுர இராசதானியில் முதல் 200 ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த பத்து தமிழ் மன்னர்கள் எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களுள் எல்லாள மன்னன் 44 ஆண்டுகள் (கி.மு 205-161) நீதி தவறாது ஆட்சி புரிந்தவன் எனப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இவனே இலங்கையில் நீண்ட காலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னனாவான். ஆயினும் தேரவாத பௌத்த மதத்தை முதன்மைப் படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் தமது மதத்திற்குப் பணி செய்த மன்னர்களின் வரலாற்றையே முதன்மைப்படுத்திக் கூறுகின்றன. உதாரணமாக 26 ஆண்டுகள் மட்டும் ஆட்சி செய்த துட்டகாமினி மன்னனின் வரலாற்றை 821 செய்யுளில் கூறும் மகாவம்வம் 44 ஆண்டுகள் ஆட்சி செய்த எல்லாள மன்னனின் வரலாற்றை வெறும் 21 செய்யுளில் மட்டுமே கூறுகின்றது. இதனால் பாளி இலக்கியங்களில் இருந்து எல்லாளனின் வரலாற்றையும், அவனது வரலாற்றுப் பணிகளையும் குறைந்தளவுதானும் அறியமுடியவில்லை. ஆயினும் அவனது நீண்டகால ஆட்சிக்கு பலதரப்பட்ட மக்களின் ஆதரவு கிடைத்தமைக்கு அவன் மக்களுக்கு ஆற்றிய பணிகளே காரணமாக இருந்துள்ளது எனக் கூறலாம். இதுவே எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகாமினி அவன் இறந்த இடத்தில் சமாதி எழுப்பி அந்தச்சமாதியை மக்கள் வழிபடவேண்டும் என ஆணை பிறப்பிக்க காரணமாகும்.

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட சில நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு நாணயத்தில் திஸபுரம் என்ற இடத்தில் ஆட்சி செய்த சடநாகராசன் என்ற வாசகம் காணப்படுகின்றது. இவற்றில் இருந்து தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தமையும், அவர்கள் நாணயங்கள் வெளியிட்டமையும் தெரியவந்துள்ளன. மகாவம்சம் கூட, எல்லாளன் ஆட்சிக்கு சார்பாக தென்னிலங்கையில் 32 தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தது பற்றிக் கூறுகின்றது. தென்னிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த சிலரே பின்னர் அநுராதபுர மன்னர்களாக ஆட்சியைக் கைப்பற்றியதற்கு மகாவம்சத்தில் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்கே எல்லாள மன்னன் அநூராதபுரத்தில் ஆட்சியிலிருந்த காலமும் காளை உருவம் பொறித்த நாணயம் பயன்பாட்டிலிருந்த காலமும் ஏறத்தாழ ஒரே காலமாகக் காணப்படுகின்றது. இதனால் இந்நாணயத்தை எல்லாள மன்னன் அநுராதபுர மன்னனாக இருந்து வெளியிட்ட நாணயமாகக் கொள்வதே பொருத்தமாகும்.

நன்றி: பரமு புஷ்பரட்ணம், எழுநா முகநூல்




விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு

தொடர்புகளுக்கு 437.345.4203

# பட்டலந்த பற்றி பேசும் அரசாங்கம் தமிழின அழிப்பு பற்றியும் விவாதிக்க வேண்டும்!

## யாழ் மாவட்ட பாராளுமனற் உறுப்பினர் சி. சிறீதரன்

20.03.2025

'பட்டலந்த' என்ற சொல்லின் ஊடாக தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இனப்படுகொலையை மறைத்துவிட வேண்டாம். தமிழர் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலையல்லயென வாதிடும் நீங்கள் பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்கு தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாக கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதனை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம். அதேபோல் தமிழ் மக்கள் மீது 1956 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வரை நடந்த இனப்படுகொலைகள் தொடர்பில் விவாதம் நடத்த வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்தினார்.





பட்டலந்த மட்டுமல்ல இந்த நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கில் பல பகுதிகளில் சித்திரவதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புகூடுகளை காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும், மனித நேயத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

பட்டலந்த வதைமுகாம் தொடர்பான செய்திகள் தற்போது மிகப் பரவலாக வெளிவருகின்றன. பட்டலந்த என்பது 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் இருந்த ஜே.வி.பி போராளிகளை கைது செய்து கொண்டு சென்று அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை இவ்வளவு காலமும் கிடப்பில் இருந்து, இப்போது அல்ஜசீராவுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலுக்கு பின்னர் அந்த அறிக்கை வெளியில் வந்துள்ளது.

1988 மற்றும் 1989இல் நடந்த ஜே.வி.பி மீதான படுகொலைகள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. வில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்திருந்தார். ஜே.வி.பி. மீதான படுகொலைகள் தொடர்பான செய்தியை அவர் அங்கு கொண்டு சென்றிருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் இதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை. ஜே.வி.பி. அடுத்து வந்த ஆண்டுகளில் சந்திரிகாவுடன் இணைந்து ஆட்சி செய்த போதும் பட்டலந்த படுகொலைகள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளையும் விடுக்கவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. அந்த விடயத்தை இப்போது கையில் எடுத்திருப்பது நியாயமானது. இது தொடர்பில் விசாரணை வேண்டும். படுகொலை செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நீதி வேண்டும்.

கதிர்காமத்து அழகி மனம்பேரியை சொந்த சகோதர இராணுவத்தினரே நிர்வாணமாக்கி படுகொலை செய்தார்கள் என்பது உலக வரலாற்றில் மிக கேவலமான பதிவாக உள்ளது. அவ்வாறான இந்த நாட்டில் அதற்கு நீதி வேண்டும் என்று நான் பல தடவைகள் கூறியுள்ளேன். அதேபோன்று தமிழ்த் தேசிய இனம் சார்ந்த இசைப்பிரியா, கிருஷாந்தி போன்றோர் பாலியல் வன்புணர்வுக்கு பின்னர் அவர்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களுக்கான நீதி விசாரணைகளையும் நாங்கள் பல இடங்களில் கோருகின்றோம். தமிழர்களுக்கு நடந்தது மிகப் பெரிய இனப்படுகொலை. ஆனால் சிங்கள மக்களுக்கு அவர்களின் எழுச்சி, கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த வதைமுகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளில் தமிழர்கள் மீது படிப்படியாக பல இடங்களில் படுகொலை முயற்சிகள் இடம்பெற்றன.

குறிப்பாக 1956 - 1958 காலப்பகுதியில் இலங்கையில் தமிழினம் மீது நடந்த மிகப்பெரிய இனப்படுகொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 1970 மற்றும் 1976 காலப்பகுதியில் நடந்த மிகப்பெரிய இனப் படுகொலைகளும் பதிவாகியுள்ளன. அத்துடன் 1983இல் நடந்த ஜூலை படுகொலை மிகப் பெரிய இனப்படுகொலையாக உலக அரங்கில் பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் 2006இல் வாகரையில் நடந்த இனப் படுகொலை, 2009இல் முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி இனப்படுகொலை என்பன இந்த நாட்டில் மிகவும் முக்கியமானவையே. இதற்கான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

நாங்கள் பாதிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட ஒரு இனம். உணவுகூட அனுப்பாமல் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 4 இலட்சத்து 20ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இறுதி யுத்தம் நடைபெறும் போது, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு பகுதியில் இருந்தனர். ஆனால் 70 ஆயிரம் பேரே இருக்கின்றனர் என்று அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூறி, 70ஆயிரம் பேருக்கான உணவுப் பொருட்களையே அனுப்பினர். இதில் எத்தனைப் பேர் பட்டினியால் கொல்லப்பட்டிருப்பார்கள். இது தமிழ்த் தேசிய இனம் மீதான மிகப்பெரிய இனப்படுகொலையாக இந்த உலகத்தால் பார்க்கப்படுகின்றது.

கனடா நாடு இந்த விடயத்தில் தனது கரிசனையை கொண்டுள்ளது. அங்குள்ள இரண்டு கட்சிகள் இங்கு நடந்தவை இனப் படுகொலை என்று ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ளன. சர்வதேச அடிப்படையில் இந்த விடயம் பேசப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால் இங்கு நடைபெற்றது இனப் படுகொலை இல்லை என வாதிடுகின்றீர்கள். அதுபற்றி பேசுவதில்லை.

ஆனால் பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்கு தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாக கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதனை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.

தமிழர்களுக்கு நடந்த இனப்படுகொலை தொடர்பில், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான படுகொலை தொடர்பில் ஏன் இந்த அரசால் சரியான முடிவை எடுக்க முடியவில்லை. 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மனித உரிமைகள் பேரவையில் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். பன்னாட்டு நீதியாளர்களின் ஆலோசனைகளை பெறுகின்றோம். தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்கின்றோம், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு நீதி காண்பதற்கு கலப்பு பொறிமுறையை கையாளுகின்றோம் என்று ஏற்றுக்கொண்டார். ஒரு அரசாங்கம் இருக்கும் போது ஏற்றுக்கொண்டதை கோட்டபய ஆட்சிக்கு வந்ததும் நிராகரித்தார். இந்த அரசாங்கமும் வந்த போது இதனை எதிர்த்து நிராகரித்துள்ளனர்.

நாங்கள் இந்த மண்ணில் உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு விரும்புகின்றோம். இதனை நாங்கள் பல தடவைகள் பதிவு செய்துள்ளோம். ஆனால் நீங்கள் நீங்களாகவும், நாங்கள் நாங்களாகவும் எங்களுடைய தனித்துவங்கள், அடையாளங்கள் நிராகரிக்கப்படாமல் வாழ்வதற்கான உரிமைகள் இந்த மண்ணில் இருக்க வேண்டும். அது சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வாகத்தான் அமைய முடியும்.

ஒற்றையாட்சி இலங்கைக்குள் இந்தத் தீர்வு ஒரு இனத்தை இன்னுமொரு இனம் சுரண்ட முடியாமல், கபளிகரம் செய்ய முடியாமல் மற்றும் அடக்காமல் இருப்பதற்கான வழிமுறை ஒற்றையாட்சிக்குள் உருவாக முடியாது. ஆனால் ஒரு நாடாக இருப்பதற்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பது, அந்த நாட்டில் வாழும் பல்தேசிய இனங்களை அரவணைத்து செல்வதற்கான மிகப்பெரிய பாதையாக மாறும்.

பட்டலந்த வதை முகாம் எல்லோருடைய இரத்தத்தையும் உறைய வைத்துள்ளது. அங்கு நடந்தது குற்றமென்றால் அது நிரூபிக்கப்படவும், உரியவர்கள் கைது செய்யப்படவும் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதேபோன்று நவாலி சென் பீற் றர்ஸ் தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏன் விசாரணை செய்ய


ஒதியமலைப் படுகொலை – 02.12.1984

தயங்குகின்றீர்கள்?.

அத்துடன் நாகர்கோவிலில் நடந்த படுகொலைகள், மண்டைதீவில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பில் ஏன் நீங்கள் சிந்திக்க தவறுகின்றீர்கள்? குமுதினி படகில் கொல்லப்பட்ட மக்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது? குருநகர் கடலில் கொல்லப்பட்டவர்கள், கொக்கட்டிச்சோலையில் கொல்லப்பட்டவர்களுக்கு, வாகரையில் கொல்லப்பட்டவர்களுக்கு, திருகோணமலையில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது?. நெடுங்கேணி ஒலுமடுவில், அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்தது?

கொத்துக்கொத்தாக பல இடங்களில் கொல்லப்பட்டு அழிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் நிலங்களை இழந்துள்ளது. இன்னும் தமது சொந்த இடங்களுக்கு போக முடியாமல் மக்கள் இருக்கின்றனர். பௌத்த தேவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. அந்த பிரதேசங்களின் காணிகளை பௌத்த இடங்களுக்குரிய காணி என்று கூறுகின்றனர். இன்னும் காணிகள் எடுக்கப்படுகின்றன. நாட்டின் நீதி என்ன? நீதி எவ்வாறு கிடைக்கும்?

யாழ். செம்மணி சுடலையில் மனித எலும்புகூடுகள் எடுக்கப்பட்டன. அதற்கான நீதி இன்னும் வெளிவரவில்லை. அண்மையில் முல்லைத்தீவு குமுளமுனை பகுதியில் வீதி அகலப்படுத்தும் பணியின் போது இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவை இறுதி யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டவர்களினதாக இருக்கலாம் என்று தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

பெண் போராளிகளின் உள்ளாடைகளுடனும், இலக்கத்தகளுடனும் அவை அந்த புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தாக்கப்பட்ட விதத்தைக்கூட தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் வாயை திறந்த நிலையில் புதைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். எவ்வளவு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம்.

பட்டலந்தை மட்டுமல்ல இந்த நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கில் பலபகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புகூடுகளை காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்க வேண்டும்.

சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும், மனித நேயத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்க வேண்டும். மனிதர்களை கொல்வதில் மிகப்பெரிய குற்றமான உணவு அனுப்பாமல் கொல்லுதல், அவர்கள் மீது பராச் குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும், பொஸ்பரசு குண்டுகளையும் வீசி கொல்லுதல், மிகப்பெரிய தடை செய்யப்பட்ட ஆயுதங்களை பாவித்தல் என்பன மிகப்பெரிய போர்க் குற்றங்களாகும். வாகரையிலும், முள்ளிவாய்க்காலிலும் மிகப்பெரிய அளவில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த குண்டுகளின் அடையாளங்களுடன் மக்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

படைகளிடம் பலர் உயிருடன் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குறைவாக நிறுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு உணவுகளை அனுப்பிய போது எத்தனையோ ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். எத்தனையோ ஆயிரம் குழந்தைகள் தமிழர் புனர்வாழ்வு கழகம் வழங்கிய கஞ்சிக்காக சின்ன சின்ன கிண்ணங்களுடன் வரிசையில் இருந்த போது பராச் குண்டுகளில் சிக்கி கொல்லப்பட்ட வரலாறு அந்த மண்ணில் இடம்பெற்றுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட இனத்தின் சார்பாக அதனை நேரில் கண்டவன் என்ற வகையில் கூறுகின்றேன்.

தயவு செய்து நீதி விசாரணையை எல்லாவற்றுக்கும் கொண்டுவாருங்கள். அந்த மக்கள் நம்பக்கூடிய வகையில் அதனை செய்யுங்கள். அதுவே நல்ல செய்தியாக அமையும். பட்டலந்தவில் உங்களுடைய போராளிகளுக்கு நடந்தவற்றை மட்டும் விசாரணைக்கு உட்படுத்துவது ஒரு பக்கச்சார்பானதாக மாறும். உங்களை நாங்கள் ஜே.வி.பி போராளிகளாகவே பார்த்தோம். உங்களை பயங்கரவாதிகளாக பார்க்கவில்லை.

ஜே.வி.பி போராளிகள் கிளர்ச்சியாளர்கள் என்று கூறினாலும் உங்களுக்காக இரக்கத்துடன் பேசியவர்கள் நாங்கள். களனி ஆற்றில் இளைஞர்கள் கழுத்து வெட்டப்பட்டு மிதந்து வந்தபோது அவற்றை பார்த்து கவலையடைந்தவர்களில் தமிழர்கள் முக்கியமானவர்கள். எவர் கொல்லப்பட்டாலும் அதற்கான விசாரணை வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

பட்டலந்தவில் இருந்த வதை முகாம் ஒரே இனத்துக்குள் இரா



ணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள். ஆனால் எங்கள் மீது திட்டமிட்டு 80 வருடங்களாக மெல்ல மெல்ல எமது நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல இலட்சமான மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். உணவு அனுப்பாமல், தடை செய்யப்பபட்ட ஆயுதங்களை பயன்படுத்தி இனப்படுகொலை செய்தனர். இதனால் தமிழ்த் தேசிய மக்கள் மீதான இனப்படுகொலை மிகவும் கருத்தில் கொள்ள வேண்டியது.

இதற்கான நீதி விசாரணை வேண்டும். பட்டலந்த என்ற சொல்லில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இனப்படுகொலையை மறைத்துவிட வேண்டாம். அதுசர்வதேச அளவில் பேசப்படும் பொருள். இறுதி யுத்தம் நடைபெற்ற போது பல நாடுகளின் செய்மதிகள் இங்கு நடந்த படுகொலைகளை மிகத்துள்ளியமாக படம்பிடித்து வைத்துள்ளன. உலக நாடுகளிடம் இருக்கும் ஆதாரங்கள் மற்றும் ஆவணங்கள் தமிழ் மக்களின் சாட்சியங்களாக இருக்கின்றன. இதன்படி சரியான நீதி விசாரணை வேண்டும்.

இந்த நாட்டில் உங்களின் கலாசாரம், பண்பாடு, அடையாளம் என்பனவற்றை மதிக்கின்றோம். உங்களுடன் சேர்ந்து வரத் தயாராக இருக்கின்றோம். அதேபோன்று தமிழர்களுடைய தனித்துவம், அவர்களின் தேசிய அடையாளம், கலாசார அடையாளம் என்பனவற்றை கருத்திற்கொண்டுஇ அவர்களுக்கான நீதியை வழங்க வேண்டும். அதற்கு தயாராகுங்கள். இப்போது முக்கிய சாட்சியாக காணாமல் போனோரின் உறவினர்களின் போராட்டங்கள் மூவாயிரம் நாட்களையும் கடந்து வீதிகளில் நடக்கின்றன. அவற்றை கருத்தில் எடுத்து நீதிக்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும்,அவை உண்மையை கொண்டுவர வேண்டும் என்றார்.







# கிழக்கின் தமிழ்த்தேசியம் பலமா? பலவீனமா?

*பா. அரியநேத்திரன்*

27.03.2025




தமிழ்த்தேசியம் என்பது அரசியலுக்கான சொல்லுக்கு அப்பால் ஆத்மார்த்தமான தமிழினத்தின் இருப்புக்கான குறியீட்டுச் சொல். தேசியம் என்பது, ஒரு இனம், தாம் வாழ்தல் பொருட்டு நீண்டகாலமாக ஒரு பாரம் பரிய நிலத்தில், தனியான மொழி, பண்பாடு, கலாசாரம், பொருண்மிய வளம் பொருந்தியதாக காணப்படுதலாகும்.

அதன் விரிந்த உண்மையான உட்பொருள் இன்னும் விசால மானது. குறித்த பாரம்பரிய நிலத் தில் அவர்களின் சொந்த நிலம், ஆகாயம், கடல், வளிமண்டலம், இயல் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், அவர்தம் பழக்க வழக்கம், வழிபாட்டு முறைமைகள் என்று அத்தனை விசேட அம்சங்க ளும் தேசி யத்தின் அர்த்தக் கூறுகளாகும்.

அதன் மெய்ப்பொருள் உணர்த்துவதுதான் தமிழர்கள் தனி யான தேசிய இனமாக தம்மை வெளிப்படுத்துவதற்கு காரணம். இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழர்களின் மரபு வழித்தாயக பூமி எனப்படுவதன் அர்த்தம், மேற்சொன்ன அடையாளங்களின் பரிணாமப் படிமுறை யாகும்.

வடக்கு, கிழக்கு இணைந்த மொழிவாரி மாநில சுயாட்சி இல் லாமல், புதிய அரசமைப் பொன்று வருவது, தமிழர்களைப் பொறுத்தவரை தேவையற்றது என்ற கருத்துகள் நிலவுகின்ற போதும், அதற்கான வேலைகள் நடைபெறுவதாக கடந்த 16, வருடங்களாக இல்லை என்பதே உண்மை.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பெற்ற பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தின் வாயிலாக, ஏற் படுத்தப்பட்ட மாகாண சபைகள் சட்டத்தின் சரத்துகள், அவ் வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 1987 இலிருந்து இன்றுவரை, அதன் நோக்கம் அர்த்த முள்ள வகையில், அரசியல் விருப்பத் துடன் முழுமையாக அமுல் செய்யப்பட்டு, இன்னும் நிறைவேற் றப்படவில்லை. அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தனவும் இல்லை, இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியும் இல்லை. ஒப்பந்தம் மட்டும் பெயரளவில் உள்ளது செயலில் இல்லை.

தற்போதய தேசிய மக்கள் அரசாங்கம் அப்போது 2006ல் ஜே வி பி ஆக மகிந்த ராஷபக்ச வுக்கு முட்டுக்கொடுத்திருந்த நிலையில தான் இணைந்த வடகிழக்கு சட்ட ரீதியாக இரண்டாக பிரிக்கப் பட்டதால் 2008ல் கிழக்கு மாகாணசபை தேர்தலை அவசர அவசரமாக நடத்தி கிழக்கு மாகாணசபையை உருவாக்கி தமிழ்தேசிய தேச விரோதிகளான பிள்ளையான் முதலமைச் சராக தெரிவானது வரலாறு.

கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து அல்லது வேறுபடுத்தி கிழக்கில் தமிழ்த்தேசிய அரசியலை தனித் துவமாக பார்க்க முடியாது இணைந்த வடகிழக்கில் தமிழ் தேசியம் என்பதுதான் நீண்டு நிலைத்து நிற்க கூடிய அரசியல் செல் நெறியாகும்.

1976, மே14ல் தந்தை செல்வா வட்டுக் கோட்டையில் சுதந்திர தமிழீழத்துக்கான தீர்மான மும், 1977,யூலை 21 பொதுத்தேர் தலில் அதற்கான ஆணையும் கிடைத்ததில் இருந்து கிழக்கு மாகாணம் தமிழ்தேசிய அரசியலில் கூர்மை பெற்றதை ஆய் வுகள் மூலமும் நிருபிக்கலாம் அது தேர்தல் அரசியலாக இருக் கலாம், அல்லது ஈழவிடுதலை போராட்ட அரசியலாக இருக் கலாம் அத்தனை செயல்பாடுகளிலும் தமிழ்த்தேசிய அனைத்து செயற்பாடுகளுக்கும், தலைமை தாங்கி வழி நடத்தியவர்கள் வடமாகாணத்தை சேர்ந்த தலைவர்களே குறிப்பாக யாழ்ப் பாணத்தை சேர்ந்தவர்களே.

அந்த தலைமைக்கு பின்னால் அணிதிரண்டவர்கள் கிழக்கு மாகாண மக்களும், இளைஞர்களும் எந்த வித பிரதேச வேறு பாடுகள் இன்றி தேச விடுதலையை மட்டுமே இலக்காக கொண்டு இதய சுத்தியுடன் கிழக்கு தமிழர்கள் செயல்பட்டனர் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை. 2004ல் விடுதலைப் புலிகளின் பிழவு அப்போது ரணிலின் சூழ்ச்சியால் ஏற்பட்டுத்தப் பட்டு கருணா பிரிவு ஏற்பட்ட பின்னர்தான் அதனை மூலதன மாக்கி பிரதேச ரீதியிலான அரசியல் செயல்பாடுகள் பிரதேச வாத மாக கிழக்கில் தோற்றம் பெற்று 2009 மே18க்கு பின்னர் படிப் படியா வளர்ச்சி உற்று தற்போது 16 வருடங்களாக கிழக்கில் தமிழ்த்தேசிய அரசியலுக்கு எதிராக முனைப்புகள் தொடர்ந் தாலும் கடந்த 2024, ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட் பாளராக போட்டியிட்ட மட்டக்களப்பை சேர்ந்த பா.அரியநேத் திரனுக்கு வடக்கு தமிழ்மக்கள் கூடிய வாக்குகளை (116,000) அளித்ததன் மூலம் பிரதேசவாதம் முறியடிக்கப்பட்டது கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியல் வீழ்ச்சியடையவில்லை என்பது இறுதி யாக 2024, செப்டம்பர், 24 பொதுத்தேர்தல் கிழக்கு மாகாணத் தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நிருபித்துள்ளதை உலகமே அறிந்தது.

இது 2024ல் மட்டுமல்ல 1977க்கு பின்னர் 1989, வரை இடம் பெற்ற தொகுதி முறை தேர்தலாக இருக்கலாம் அல்லது 1989, தொடக்கம் 2024, வரை இடம்பெற்ற விகிதாசார மாவட்ட முறை தேர்தலாக இருக்கலாம் அத்தனை தேர்தல்களிலும் மட்டக்களப்பு மாவட்டம் தொடர்சியாக தமிழ்த் தேசிய பலத்தை உறுதி செய்துள்ளது.

ஏனைய திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இனப் பரம்பல் தமிழ் மக்களை விட சிங்கள முஸ்லீம் மக்களின் விகிதாசாரம் தமிழ் மக்களை விடவும் அதிகளவில் உள்ளதால் சில தேர்தல்களில் தமிழர் பிரதிநித்துவம் இல்லாத நிலை இருந் தது எனினும் இறுதியாக 2024, பொதுத்தேர்தலில் வழமை போன்று அம்பாறை, திருகோணமலையில் தலா இரண்டு ஆசனங்களும் மட்டக்களப்பில் மூன்று ஆசனங்களுமாக மொத்தமாக ஐந்து ஆசனங்கள் கிடைத்து தமிழ்த்தேசியம் உறுதிப்படுத்தப்பட்டது.

தற்போது நடைபெறப்போகும் உள்ளூராட்சி சபைத்தேர்தல் முறை கலப்பு தேர்தல் முறை என்பதாலும், வட்டார ரீதியில் வேட்பாளர்கள் கட்சி செல்வாக்கைவிடவும், அந்தந்த வட் டாரத்தில் ஊர், சமூகம், செல்வாக்கு, சேவை, நடத்தை, ஒழுக் கம், என்பன கட்சி செல்வாக்கை விடவும் தனிமனித செல்வாக்கு தாக்கத்தை செலுத்தும். அதேவேளை வேட்பாளர் தெரிவில் தமிழரசுக்கட்சி வெற்றிபெறக்கூடிய தமிழ் தேசிய வாதிகளை தனிநபர்களை ஓரம்கட்டி அவர்களுக்கு தனி ஆதரவு கொடுப் போரை வேட்பாளர்களாக நிறுத்துவதாலும் கிழக்கில் மட்டு மல்ல வடக்கிலும் தமிழரசுக்கட்சி எந்த ஒரு சபைகளையும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலைமை உண்டு.

தமிழரசுக்கட்சிக்கட்சியின் அதிருப்தியாளர்கள் வேறு கட்சி களிலும், சுயேட்சை குழுக்களிலும், வேறு தமிழ்த்தேசிய கட்சி களில் பிரிந்து வேட் பாளர்களை நிறுத்தியதாலும் அவர்களாலும் தனித்து எந்த பிரதேச சபைகளையும் கைப்பற்ற முடியாது.

இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகள் தொங்கு நிலையிலேயே பல கட்சி உறுப்பினர்கள் இணைந்து சபைகளை ஆட்சி செய்யும் களச்சூழலே இப்போது உள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் தமிழ்த்தேசிய உணர் வுகள் என்பது தொடர்ச்சியாக உறுதியான நிலையில் இருந் தாலும் முள்ளிவாய்க்கால் மௌனத்திற்கு பின்னர் 16, வருடங் களாக தமிழ் மக்களை ஒரு தேசமாக கட்டி எழுப்ப தமிழரசுக் கட்சியாலோ, அல்லது வேறு தமிழ்தேசிய கட்சிகளாலோ முடிய வில்லை அதனால் இளைஞர்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வுகள் படிப்படியா குறைந்து தொழில், வேலைவாய்ப்பு, வெளிநாட்டு மோகம், என்பன ஒருபுறமும், களியாட்டம், போதைபொருள் பாவனை (மதுபானம்) என்பன இளைஞர் களை கவரும் நிலைமையாலும் தமிழ்த்தேசிய அரசிய லில் இருந்து சில இளைஞர்கள் விலகி ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்தி பக்கம் தாவும் நிலையும் இல்லாமல் இல்லை.

கடந்த பொதுத்தேர்தலில் ஒரு சில தமிழ்த்தேசிய அரசியல் கட்சி களின் வேட்பாளர்கள் மதுபானத்தை வழங்கி தமது விருப்பு வாக்குகளை அதிகரித்த சம்பங்களும், பெரும் தொகையில் கோடிக்கணக்கில் நிதியை செலவு செய்த சம்பவங்களும் உண்டு.

இவைகளும் தமிழ்தேசிய அரசியலில் பின்னடைவுக்கு தற் போது காரணமாக மாறி தேர்தல் என்றால் சலுகை பெறலாம் என்ற மனோநிலையையும் தமிழ்த்தேசியத்தை அழிக்கும் ஒரு வகை கறையானாக மாறிவருவதை அவதானிக்க முடிகிறது.

# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.




**1-855-856-6875**

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.









WWW.MYEVERYDAYSHOPPING.COM





# நீ நடந்த பாதையிலே

-மலரன்னை-

புள்ளிமானைப்போல் துள்ளித்திரிந்தாள், சுமித்தா அள்ளிப் போட்ட தாவணியை அவளது தோழியான ராதா சீர்செய்து “கிளிப்” பண்ணிவிட்டபோது, நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து, மகிழ்வும், நிறைவும் அவளுக்கு ஏற்பட்டது. தோழிகள் இருவரும் கோயிலுக்குப் புறப்பட்டனர்.

சுமியின் தலையிலிருந்த கனகாம்பர மாலையைச் சீர்செய்தவாறே ராதா கேட்டாள்.

“சுமி! நீர் சுவிஸ்சுக்குப் போனபிறகு சாறி உடுக்க சான்ஸ்ஸே இல்லாமப்போயிடும் என்ன!”

“நான் அங்கைபோனாலும் சாறிதான் உடுப்பன். எங்கட பரம்பரைப் பண்பாட்டை நான் மீற விரும்பேல்ல”

வெடுக்கெனப் பதிலளித்தாள் சுமித்தா.

“நீர் விரும்பாட்டியும் அவற்றை விருப்பத்தைப் பேணி நடக்கத்தானே வேணும்”

ராதாவின் வார்த்தைகள் சுமித்தாவின் முகத்தில் குங்குமமாகச் சிவப்பை ஏற்படுத்தின. அவள் சுவிஸ்சை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க இன்னும் நான்கு நாட்கள் இருந்தன.

சுமி முருகப்பெருமானிடம் மனதார வேண்டிக்கொண்டாள் “முருகா! என்னுடைய வாழ்க்கைப் பயணம் சீராக அமைய நீயே எனக்கு வழிகாட்ட வேண்டும்.”

தந்தைக்கு உபதேசம் “செய்தவனே! நின் அருள் சுரந்து என்னைக் காத்திடுவாய்”

அன்றைய இரவு ஏனோ அவளது உள்ளத்தின் அமைதி குலைந்து, தூக்கம் அவளை அணுக மறுத்தது. தாய் மண்ணைவிட்டுப் பிரியப்போகிறோம். என்ற ஏக்கமோ அல்லது பெற்றார், உற்றாரைப் பிரிய வேண்டியதால் ஏற்பட்ட தவிப்போ எதுவென்று அவளுக்குப் புரியவில்லை. இனந்தெரியாத குமைச்சல் ஒன்று அவளது மனதைக்குடைந்து கொண்டிருந்தது. அவளது நினைவலைகள் கடந்துவந்த பாதையை நோக்கிப் பாயத்தொடங்கின.

பள்ளிப்பருவத்தில், சிட்டுக் குருவியாய் அவள் சிறகடித்த நாட்கள் பசுமையானவை. அந்தப் பசுமைக்கு நீர்வார்த்து மெருகேற்றியவன், பார்த்தீபன். அவன் பரம ஏழையானாலும் படிப்பிலும் சரி, பண்பிலும்சரி முதன்மையானவனாய் விளங்கினான். அவனது எடுப்பான தோற்றமும், துடுக்கான போக்கும் சுமியின் கவனத்தை ஈர்த்துக் காந்தமெனக் கவர்ந்தது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை எண்ணிப் பார்த்தீபன் தயங்கினான்.

“சுமி! நான் படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்தால்.... எங்கட வாழ்க்கையை இணைத்துக் கொள்ளலாம் என்று நம்புறன்”

“தீபன்! நிச்சயமாய் நீங்கள் ஒரு டொக்டராய் வருவீங்கள். அந்தத்திறமை உங்களுக்கு இருக்கு. ஆனபடியால.....நான் எத்தனை வருசம் போனாலும் உங்களுக்காகக் காத்திருப்பன்.”

ஏனோ இந்த வார்த்தைகள் மாறி மாறி அவளது சிந்தையில் தோன்றி, அவளைச் சிதறடித்துக் கொண்டிருந்தது.

“ம்!....” புரண்டு படுத்தாள், சுமி.

“நானாக தீபனை ஏமாற்றவில்லை. அவர்தானே என்னை மறந்து இயக்கத்துக்குப்போனவர். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

சுமி, தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டாள். தீபனைக் கடைசியாகச் சந்தித்த நாள் நினைவுகள் அவளது மனத்திரையில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

டியூசன் வகுப்பு முடித்து வந்தவேளையில் சுமி அவனைச் சந்தித்தாள்.

“தீபன்! என்ன மாதிரி, எல்லாம் படிச்சிட்டீங்களே! பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம்தானே இருக்கு”

“சுமி! மற்றவைக்கெல்லாம் இந்தப் பரீட்சையை எதிர்நோக்கிற ஒரு பிரச்சனைதான் இருக்கு. ஆனால் எனக்கு... அதோட மற்றுமொரு பிரச்சனையும் இருக்குது.”

கலகலவெனச் சிரித்தாள், சுமி

“அது என்ன பிரச்சனை என்று நான் அறியலாமோ?”

கண்ணைச் சிமிட்டியவாறு தீபன் கூறினான்.

“அதுதான் என்னுடைய வருங்கால வாழ்க்கைப் பிரச்சனை.” சுமியின் இதயம் ஒரு கணம் புளகாங்கிதத்தால் பூரித்துப் போனது. தான் வானத்தில் எழுந்து பறந்துதிரிவது போன்றதொரு பிரமை அவளை ஆட்கொண்டது.

இதே நினைவுகளை எத்தனையோ தடவைகள் இரைமீட்டு இறுமாந்திருந்தவள், அவள். ஆனால் ஒருநாள்... அந்த நினைவுக்குப் பங்கம் வந்துவிட்டது.

எமது மண்ணை ஆக்கிரமிக்கவென சிறீலங்கா இராணுவத்தினர் ஆனையிறவிலிருந்து புறப்பட்டுவிட்டனர். ஆக்கிரமிப்பாளனது அகோர ஷெல் வீச்சினால் பரந்தன், கிளிநொச்சியை அண்டிய பகுதியிலுள்ள கிராமத்து மக்கள் தம் இல்லிடங்களைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

சுமியின் குடும்பத்தினரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. அவர்கள் இடம்பெயர்ந்து, ஸ்கந்தபுரத்திலுள்ள மாமாவின் வீட்டில் குடியேறினர்.




தீபன் குடும்பத்தினர் சில காலம் பாடசாலையில் தங்கியிருந்தனர். பின்னர், வன்னேரிக்குளத்தில் காடுவெட்டி சிறு குடிசையொன்றை அமைத்து அங்கு குடியேறிவிட்டனர். கல்வியே கருந்தனமென்றிருந்த தீபன், இடையில் ஏற்பட்ட குழப்பத்தினால் மனம் தளர்ந்து போனான். அத்துடன் உழுதுண்டு வாழ்ந்து வந்த அவனது குடும்பம், ஊதியம் ஏதுமற்ற நிலையில் வறுமையில் உழலத் தொடங்கியது.

இந்தச் சமயத்தில் அவர்களுடைய கிராமத்தவர் சிலர் தமது வீடுகளுக்குச் சென்று வருவதை அவதானித்த அவனது அப்பா தானும் ஒருதரம் போய் வந்தாலென்ன என்று எண்ணமிட்டார். மனைவியை அழைத்து, தன் எண்ணத்தைக் கூறினார்.

“இஞ்சாரும் கமலம்! எல்லோரும் வீடுபாக்க எண்டு போய் வாறாங்கள். நானும் ஒருக்காப்போய் கொஞ்சத் தேங்காயும் உரிச்சுக்கொண்டு ஒரு அரைமூட்டை நெல்லையும் கட்டிக் கொண்டு வருவமெண்டு பாக்கிறன். ஆனசாப்பாடில்லாமல் பிள்ளையள் வாடிப்போயிருக்கிறதை என்னால பாக்கேலாமக் கிடக்கு”

சிறிது - நேரம் மௌனத்தைத் தழுவியிருந்த கமலம் அவரது விருப்பத்தை ஆமோதித்தாள்.

“எதுக்கும் வலு அவதானமாய்ப் போகவேணும் நீங்கள் போய்வாற வரைக்கும் எனக்கு நெஞ்சில தண்ணி இருக்காது”

மனைவியின் சம்மதம் கிடைத்த மறுகணமே அவர் புறப்பட்டுவிட்டார். அன்றைய இரவுவரை வீடு திரும்பாத அவரை விடிய விடிய விழித்திருந்து காத்திருந்தனர் அந்தக் குடும்பத்தினர்.

அவர் வரவில்லை. செய்திதான் வந்தது. வீடு பார்க்கப் போனவர்கள் சிலரை இராணுவத்தினர் வெட்டிக்கொலை

செய்துவிட்டனராம். அந்தப் பட்டியலில் தீபனது அப்பாவும் ஒருவரானார்.

தீபன் ஒரேயடியாக மனமுடைந்து போனான். தனது தந்தையைக் கொலை செய்தவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற வேகம் அவனுள்ளத்தில் புகுந்து கொண்டது. விளைவு…

ஒரு நாள் சுமியின் கையில் கடிதமொன்று கிடைத்தது. கடித உறையில் தீபனது கையெழுத்தைக் கண்டு உற்சாகத்துடன் அதைப்பிரித்தாள், பிரித்தவளுக்கு அங்கு பலத்த ஏமாற்றம் காத்திருந்தது.

**அன்புள்ள சுமி,**

**எனது நிலைப்பாட்டை விளக்குவதற்காகவே இக் கடிதத்தை உமக்கு எழுதுகிறேன். "சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப் படியாக அழிந்து போகவேண்டும் ஆகவே சுதந்திரத் திற்காகப் போராடுவதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தப் பொன்மொழிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் எனக்கு வந்துவிட்டது. இத்தனை காலமும் எதுவிதப் பாதிப்புமின்றி, கல்வியில் மட்டும் என் முழுக்கவனத்தையும் செலுத்திவந்த எனக்கு, அப்பாவின் கொலைக்குப் பின்னர்தான் இங்கு நடைபெறும் அனர்த்தங்களும், ஆக்கிரமிப்பாளனின் அடாவடித்தனங்களும் கண்ணுக்குத் தெரிந்தது. எனவே, உமது எதிர்கால நல்வாழ்வுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறிவிடை பெறுகிறேன்.**

**அன்புடன்,**
**தீபன்.**

கடிதத்தைப் படித்த சுமி, பித்துப் பிடித்தவளானாள். தீபன் தன்னை ஏமாற்றிவிட்டதாக கூட அவன்மீது ஆத்திரமடைந்தாள். பெற்றோரின் ஏற்பாட்டில், இன்னும் சில மாதங்களில் அவள் சுவிஸ்ஸில் வாழும் சுதர்சனது மனைவியாகப் போகிறாள்.

ஆனால்….ஏனோ இன்று தீபன் அவளது மனதில் தோன்றி, அவளைக் குழப்ப நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்தான்.

தீபன்! நான் உங்களை மனமார நேசித்தேன். சலனமற்றிருந்த உங்கள் மனதில் அன்பெனும் ஊற்றைக் கசியவைத்ததும் நானேதான். ஆனால்நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்? உங்களது நிலையில் இருந்து பார்க்கும் போது, உங்களது முடிவு சரியானதுதான். ஆனால், அதற்காக நான் என்ன செய்ய முடியும்?

நினைவுகளில் மூழ்கிப்போன சுமியை, நித்திராதேவி அரவணைத்துக்கொண்டாள். சொற்பநேரம் கண்ணயர்ந்திருந்தவளை குண்டுச்சத்தங்களின் அதிர்வும், வேட்டொலிகளும் விழித்தெழவைத்தன.

ஏற்கனவே அம்மா எழுந்துவிட்டாள் போலும், அப்பாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள். “கிளிநொச்சிப் பக்கமாத்தான் ஏதோ சண்டை நடக்குதுபோல கிடக்கு. அப்படி ஏதும் பிரச்சனை எண்டால் என்னெண்டு நீங்கள் நாளண்டைக்கு சுமியைக் கூட்டிக்கொண்டு போறது. ஆமிக்காறர் அங்கால ஆக்களை எடுக்கிறாங்களோ தெரியேல்ல..”

“எல்லாம் நல்லபடி நடக்கும். நீர் ஏன் இப்ப வீணாய் அங்கலாய்க்கிறீர்?”

ஒரே வார்த்தையில் அப்பா அம்மாவின் வாய்க்குப் பூட்டுப்போட்டுவிட்டார். சுமிக்கு ஏனோ அப்பா மீதும், அம்மாவின் மீதும் சினம் தோன்றியது. அவளது உள்ளத்தில் ஆழப்புதைந்துகிடந்த உணர்வலைகள் விழிப்படைய முயன்றன.

“இந்தளவு குண்டுச் சத்தத்துக்கையும் நிண்டு அடிபடுறது என்னுடைய தீபன் மட்டுமல்ல. என்னை ஒத்த வயதுடைய பிள்ளைகளும்தான். நானும் எனது குடும்பமும் எங்களுடைய சொந்த நலன்களிலேயே அக்கறைகொண்டிருக்கிறோம். யாருக்காக அவர்கள் போராடி மாள்கிறார்கள். எங்களைப்போல ஒத்த மக்களுக்காகத்தான்.”

இந்த உண்மையை அவள் உணர்ந்து கொண்டபோது இதயத்தின் ஓர் மூலையில் குற்றவுணர்வு தலைதூக்கியது. மாறி மாறி அதிர்வுகளை ஏற்படுத்திய குண்டுச் சத்தங்கள் அவளது இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்தன.

மறுநாட்பொழுது விடிந்தது. விடுதலைப் புலிகள் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றிச் விட்டதாகச் செய்தி பரவியது. சுமியின் இதயம் இனம் புரியாத மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது. அந்த மகிழச்சிக்குக் காரணம் தான் பிறந்து வளர்ந்த மண் மீட்கப்பட்





டதாலா? அன்றி அந்த வெற்றி எம் இனத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்ற எண்ணம் அவளுள்ளத்தில் வேரூன்றியதாலா?

சுமியின் உள்ளம் ஒரு விவாத மேடையாமாறி, தன் உள்ளத்து உணர்வுகளை எடைபோட முயன்று கொண்டிருந்தது. அவளுடைய தோழி ராதா, பரபரப்புடன் அவளிடம் ஒடி வந்தாள்.

“சுமி! நியூஸ் கேள்விப்பட்ட நீரே?”

“ஓ…..! எனக்குத் தெரியும். கிளிநொச்சியில இருந்து ஆமியை விரட்டியாச்சு”

கலகலவெனச் சிரித்தவாறு சொன்னாள் சுமி. ராதா முகத்தில் சோகம் ததும்ப செய்தியைச் சொன்னாள்.

“கிளிநொச்சியை கைப்பற்றின சமரில எங்கட கிளாஸ்மேற் பார்த்தீபன் வீரச்சாவாம்”

“ஐயோ தீபன்!”
கத்தியவாறே மயங்கி விழுந்தாள் சுமி, அம்மாவுக்கு ராதாவின் மேல் கோபமாக வந்தது.

“ஏன் பிள்ளை அப்பிடியான செய்தியை வந்து சுமியிட்டைச் சொன்னனீர் தனக்குத் தெரிஞ்ச ஆக்களெண்டால் அவள் தாங்கமாட்டாள்”

மயக்கம் தெளிந்த சுமி, அம்மா எவ்வளவோ தடுத்தும் கேளாதவளாய் ராதாவுடன் தீபனுடைய வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டாள்.

அங்கே……நடுமுற்றத்தில் கொட்டகை அமைத்து, தீபனது புகழுடலைக் கிடத்தியிருந்தார்கள். அவனுடைய அம்மாவும், சகோதரர்களும் அவன் மீது விழுந்து கதறிக்கொண்டிருந்தார்கள்.

சுமி மனதில் ஒருவித துணிவை வரவழைத்துக் கொண்டாள். நேராக நடந்து போய் தீபனது புகழுடலுக்கு அருகில் நின்று, அவனது முகத்தையே வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். நிறைவான புன்னகையுடன் அவன் மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தான்.

தன்னைக் கவர்ந்த அந்தமுகம் இன்று தாய்மண்ணைக் காதலித்து, அந்தக் காதலுக்குத் தன்னையே அர்ப்பணித்து பெருவெற்றியை ஈட்டித்தந்துவிட்டு மாவீரன் என்ற புகழாரத்தை ஏற்று அமைதி பெற்றுக் கிடக்கிறது.

தீபனது புகழுடலுக்கு யார் யாரோ வந்து பூமாலை சாத்தி, அஞ்சலி செலுத்தியவாறிருந்தனர். ஆம் இன்று அவன் ஈன்றெடுத்த தாய்க்கு மட்டும் சேய் அல்லவே. இந்த மண்ணின் மைந்தனல்லவா. அவனுக்கு அஞ்சலி செலுத்தவேண்டியது எம் மண்ணில் வாழும் மக்கள் அனைவரினதும் கடமையல்லவா? அதனால்தான் நிறையப்பேர் வந்துபோகிறார்களோ..

சுமியின்பார்வை அவனது முகத்திலிருந்து விலகியபோது அவனுடைய புகழுடலைப் போர்த்தியிருந்த புலிச்சின்னத்தை-அவதானிக்க முடிந்தது. அவளையறியாமலே அவளது மேனியெங்கும் சிலிர்த்து, மயிர்க்கால்கள் குத்திட அவள் உணர்ச்சிவசப்பட்டாள். மானசீகமாக தீபனுடன் உரையாடினாள்.

“தீபன்” உங்கள் கரங்கள் அணைத்த ஆயுதம் இனி எனதாகும். நீங்கள் நடந்த பாதையிலே என் கால் பதியும்”

சுமி, அருகிலிருந்த தட்டத்திலிருந்து பூக்களை அள்ளி அவனது புகழுடலின்மீது வைத்து அஞ்சலித்தாள்.

- களத்தில், 30.04.2000

**சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

www.sangathamil.ca

# பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஏற்ப கொலைகள், சித்திரவதைகளிற்கு சரியான தண்டனைகளை வழங்க வேண்டும்!

## மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந்

17.03.2025

பட்டலந்தவில் ஆர்வம் காட்டும் ஜேவிபியினர் ஏனைய விடயங்களிலும் இதே ஆர்வத்தை காட்டவேண்டும், ஏனைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்என மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் வேண்டுகோள் விடுத்துள்ளார்




செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை இன்று நாட்டில் பேசுபொருளாக காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் பின்னர் அந்த அறிக்கையை தான் நிராகரிப்பது தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களிற்கு அறிவித்திருக்கின்றார்.

இந்த பட்டலந்த வதை முகாமின் கொலைகள் – ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பான அந்த அறிக்கை சந்திரிகாவின் காலத்தில் தயார் செய்யப்பட்டு நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமலே இருந்தது.

பின்னர் ரணில் விக்கிரமசிங்க அல்ஜசீராவின் கேள்விகளிற்கு பதிலளிக்க முடியாத சூழ்நிலையை எதிர்கொண்டதன் பிற்பாடு இது நாட்டில் மீண்டும் பேசுபொருளாக மாறியது.

இது பேசுபொருளான பின்னர்தான் ஜேவிபி அரசிற்கு இவ்வாறானதொரு அறிக்கை இருக்கின்றது அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்ற நினைப்பு வந்தது.

ரணில்விக்கிரமசிங்க இந்த அறிக்கையை தான் நிராகரிப்பதாக அதனை ஏற்றுக்கொள்ள முடியாதுஎன தெரிவித்துள்ளார்.

டக்ளஸ் பீரிசிற்கு இந்த கொலைகளிற்காக வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் போலி கடவுச்சீட்டுகள் பற்றி உங்களிற்கு தெரியும். இவை அனைத்திற்கும் பின்னால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவு உள்ளதாகபல குற்றச்சாட்டுகள் உள்ளன.

எனவே இந்த கொலை சந்தேக நபராகயிருக்ககூடிய அரசாங்க பின்புலத்திலே அரசபொலிஸ் சேவையை சேர்ந்த டக்ளஸ் பீரிஸ் முதலாவது சாட்சியாக உள்ள இந்த இடத்திலே, கைத்தொழில் பேட்டையில் உள்ள வீடமைப்பு திட்டத்திற்கும் அங்கிருந்த வீடுகள் சிலவற்றிற்கும் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பாகயிருந்துள்ளார் என பட்டலந்த அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அந்த பொறுப்பையும் ரணில் விக்கிரமசிங்க இன்று தட்டிக்கழிக்கின்றார். தான் ஒருசாட்சியாகவே அழைக்கப்பட்டதாக அவர் பொய் கூறுகின்றார் அவர் சாட்சி இல்லை, குற்றவாளியாகத்தான் தொடர்ந்தும் அறிக்கையில் உரைக்கப்படுகின்றார்.

பட்டலந்தவின் வதைமுகாம் தொடர்பான பிரதான புகைப்படமாக இருப்பது டக்ளஸ் பீரிசின் இரு புதல்வர்களும் இபாதிக்கப்பட்ட கொடுரத்திற்கு உட்பட்ட. சித்திரவதைக்குள்ளான நபருக்கு அருகில் துப்பாக்கிகளுடன் இருக்கும் படம். இந்த படம் பல விடயங்களை எங்களிற்கு சுட்டிக்காட்டுகின்றது.

எனவே டக்ளஸ் பீரிசின் குடும்பம் அந்த காலப்பகுதியில் 18 வயதை கூட அடையாத இரண்டு மகன்மாரும் இந்த சித்திரவதையில் பங்கெடுத்திருப்பது அவர்கள் குடும்பமாக ஏனைய மனிதர்களை கொலை செய்து சித்திரவதை செய்து ஆனந்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.



இது அவரது மகனின் மற்றுமொரு புகைப்படம்அவரிடம் ஆயுதம் எப்படி வந்தது என்பது தெரியாது இந்த படங்களில் உள்ளவர்கள்தான் டக்ளஸ்பீரிசின் மகன்மார் என்பது அவர்களின் இந்த குடும்ப புகைப்படம் மூலம் தெளிவாகின்றது.

எனவே இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து ரணில் விக்கிரமசிங்க வெறுமனே வார்த்தை ஜாலங்களை பயன்படுத்தி தப்பிக்க முடியாது. இந்த குற்றச்சாட்டுகளின் உண்மை தன்மை ரணில் விக்கிரமசிங்க இந்த பாரிய உரிமை மீறல்களிற்கு பின்னால் இருந்ததன்மை எல்லாம் நாங்கள் நன்கறிவோம்.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஏற்ப சரியான தண்டனைகளை மனிதர்களை கொலை செய்த குற்றத்திற்காக துன்புறுத்திய சித்திரவதை செய்த குற்றத்திற்காக இவர்களிற்கு வழங்கியே ஆகவேண்டும்.

இதற்கு அப்பால் சென்று இன்னுமொரு விடயத்தை நாங்கள் ஆழமாக சிந்திகைப்போனால், இந்தநாட்டில் பட்டலந்தை என்ற சித்திரவதை முகாம் மாத்திரம்தான் இருந்ததா? பட்டலந்தையை தவிர சித்திரவதைகள் இடம் பெறவில்லையா? பட்டலந்தவை தவிரவேறு கொலைகள் இந்த நாட்டில் இடம் பெறவில்லையா? இடம்பெற்றிருக்கின்றது.

குறிப்பாக தமிழ் மக்களிற்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகள் அரச ஆதரவுடன்1983 இல் இடம்பெற்ற கலவரம் வெலிக்கடையில் இடம்பெற்ற சிறைச்சாலை கொலை, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலை, திருகோணமலையில் இடம்பெற்ற 17 தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் கொலை, செஞ்சோலையில் இடம்பெற்ற அப்பாவிசிறுவர்களின் கொலை அதன் பின்னர் இறுதி யுத்தத்திலே சரணடைந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நிலை, இசைப்பிரியா உட்பட பல பெண்கள் சிரழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது செம்மணிபுதைகுழி தொடர்பான நிலைமை. இன்று கண்டுபிடிக்கப்பட்ட கொக்குதொடுவாய் புதைகுழி தொடர்பான நிலைமை.

இவை அனைத்திற்கும் இலங்கையின் முப்படை தளபதிகளாகயிருந்த ஜனாதிபதிகளிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை இங்குஇருக்கின்றது.

இவை அனைத்திற்கும் ஆணைக்குழுக்கள் இருக்கின்றனவா என்பது தெரியாது சிலவற்றிற்கு ஆணைக்குழுக்களை நியமித்திருந்தார்கள் அவற்றின் அறிக்கை எங்கே என்று தெரியாது.

எனவே பட்டலந்த அறிக்கையை சமர்ப்பிப்பது போல ஏனைய கொலைகள் போன்றவற்றிற்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது.

அதுபோல முஸ்லீம்கள் தொடர்பாக ஏற்பட்ட கலவரங்கள் அளுத்கம திகன உள்ளன.

பட்டலந்தவில் ஆர்வம் காட்டும் ஜேவிபியினர் ஏனைய விடயங்களிலும் இதே ஆர்வத்தை காட்டவேண்டும், ஏனைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் இதனை செய்வார்கள் என்றால் ஏனைய கொலைகளிற்கும் நீதி வழங்கப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான நீதியாகட்டும் காணாமல் போனவர்களிற்கான நீதியாகட்டும் மக்கள் இன்றுவரை போராடிக்கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

நீண்டகாலத்திற்கு முன்னர் இடம்பெற்ற விடயம் இன்று பேசுபொருளாகி நாடாளுமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது நாங்கள் இதற்கு ஆதரவுதான் .

ஒரு கொலை நடந்திருக்கின்றது ஒரு அறிக்கை இருக்கின்றது அந்த அறிக்கையை மையமாக வைத்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு தண்டனை வழங்குவார்கள் என்றால் அதற்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம் எந்த அடிப்படையில் என்று சொன்னால் இந்த ஆணைக்குழுவின் அறிக்கை முதலாவது படியாக ஏனைய பிரச்சினைகளிற்கும் இதேபோன்ற நீதியை வழங்குவார்களாகயிருந்தால் இந்த அறிக்கைக்கான பூரணமான ஆதரவு எம்மத்தியில் இருக்கும்.

நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு எதனையும் செய்ய முடியாது இந்த நாட்டில் நீதி நிலைநாட்டப்படவேண்டுமாகயிருந்தால் அனைத்து விடயங்களிற்கும்ஒரே மாதிரியான நீதியை நிலைநாட்டவேண்டும்.

ஈகைச்சுடர்

# அன்னை பூபதி

## 37 ஆம் ஆண்டு நினைவில்



## அன்னை பூபதி கணபதிப்பிள்ளை

## Annai Poopathy Kanapathipillai

கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்

மண்ணில்:
03.11.1932

## ஏப்ரல் 19 2025

ஈகைச்சாவு:
19.04.1988

உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam

# பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் முன்னாள் சிறீலங்கா இராணுவ வீரர் அதிர்ச்சித் தகவல்!

14.03.2025

பட்டலந்த சித்திரவதை முகாமுக்குள் மிகக் கொடூரமான சித்திரவதைகள் இடம்பெற்றன. சித்திரவதைக்கு உள்ளான பலரை நான் கண்டேன். மறுநாள் கொல்லப்படவுள்ளவர்களின் புகைப்படங்களை முதல்நாள் நான் எடுப்பேன். இது தான் எனது வேலை.

அந்த முகாமில் நன் ரணில் விக்கிரமசிங்கவையும் கண்டுள்ளேன் என இராணுவ பொலிஸ் பிரிவின் உத்தியோகபூர்வ புகைப்படக் கலைஞராக இருந்தவர் எனக் கூறப்படும் முன்னிலை சோஷலிசக் கட்சியை சேர்ந்த இந்திராந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஹிரு தொலைக்காட்சியின் “ஹார்ட் டோல்க்” நிகழ்ச்சிக்காக வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்ச்சியில் இந்திராந்த சில்வாவிடம் எழுப்பப்பட்ட கேள்விகளும் அவரின் பதில்களும் வருமாறு,



கேள்வி: பட்டலந்தை சித்திரவதைக் கூடம் என்றால் என்ன?

***பதில்:*** பொலிசார் அரசியல்வாதிகளுடன் நேரடியாக தொடர்புகளை பேணி நடத்திச் சென்ற சித்திரவதை முகாம்களில் பிரபலமான ஒன்றே பட்டலந்த சித்திரவதைக் கூடம்.

கேள்வி: அங்கு செல்வதற்கு உங்களுக்கு எத்தனை தடவை சந்தர்ப்பம் கிடைத்தது.

***பதில்:*** நான் இராணுவ பொலிஸ் பிரிவின் உத்தியோகபூர்வ புகைப்படக் கலைஞராக இருந்தேன். அந்த காலப்பகுதியில் எனக்கு வழங்கப்பட்டிருந்த பணிகளில் ஒன்றாக கொல்லப்படுவதற்காக பெயர் குறிப்பிடப்பட்டவர்களின் புகைப்படங்களை எடுப்பதாகவே இருந்தது. இதன்போது நான் கொழும்பில் இருந்த சகல சித்திரவதை முகாம்களுக்கும் சென்றேன். அதற்கு மேலதிகமாக கொல்லப்படுவதற்கு இருந்த சிலரின் புகைப்படங்களை எடுப்பதற்காக இரண்டு தடவைகள் எனக்கு பட்டலந்த சித்திரவதை முகாமுக்கு செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

கேள்வி: முதல் நாளில் அங்கே பார்த்தது என்ன?

பதில்: முதல் நாளில் மூவரின் புகைப்படங்களை எடுக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அங்கே என்னை சிவில் உடையில் இருந்த பிரதானியே அழைத்தச் சென்றார். நான் முதல் நாளில் அங்கு செல்லும் போது ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்த அறையொன்றில் குறித்த பிரதானியுடன் கதைத்துக்கொண்டிருந்தார். பின்னர் சித்திரவதை முகாமுக்குள் சென்று குறித்த மூவரின் புகைப்படம் எடுக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்குள் செல்லும் போதும் அந்த பகுதிக்குள் மாத்திரம் சித்திரவதைகளுக்கு உள்ளாகியிருந்த 30 பேர் வரையிலானோர் இருந்தனர்.

கேள்வி: எவ்வாறான சித்திரவதைகள்?

***பதில்:*** நெற்றியில் தீக்காயங்களுடன், சிலரின் கண்கள் பாதியில் வெளியே வந்தபடி இருந்தன, சிலரின் கை, கால்கள் உடைக்கப்பட்டிருந்தன.

கேள்வி: அக்காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராகவா இருந்தார்?

***பதில்:*** அவர் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தார் என்று நினைக்கின்றேன்.

கேள்வி: அவர் எப்படி பட்டலந்தவுடன் தொடர்புபட்டார்?

***பதில்:*** அவர் ஒடுக்குமுறைகளுடன் தொடர்புடையவர். அண்மைக் காலத்தில் வசந்த முதலிகேவையும் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தக் காலத்திலும் அவ்வாறுதான். கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அவர் தனிப்பட்ட ரீதியிலும் தலையிட்டார்.

கேள்வி: உத்தியோகபூர்வ இல்லமும் சித்திரவதை முகாமும் அருகருகேவா இருந்தன?

***பதில்:*** இரண்டும் அருகில்தான் இருந்தன. உர களஞ்சிய சாலைக்கு சிறிது தூரத்தில் உத்தியோகபூர்வ இல்லம் இருந்தது. அங்கிருந்த உத்தியோகபூர்வ இல்லமொன்றில் டக்ளஸ் பீரிஸ் என்பவர் இருந்தார். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வீடொன்று இருந்தது. அவர் அங்கே அதிகளவில் இருப்பார். நான் ஆயிரக் கணக்கான படங்கள் எடுத்துள்ளேன். மறுநாள் கொல்லப்படவுள்ளவர்களின் புகைப்படங்களை முதல்நாள் நான் எடுப்பேன். ஒன்றிணைந்த செயற்பாட்டு தலைமையகத்திடம் இரகசிய அல்பமொன்று இருந்தது. அதனை கைது செய்யப்பட்டவருக்கு அனுப்புவர். அதனை காட்டி யார் உன்னுடன் இருந்தவர்கள் என்று கேட்டறிந்து அவரை கண்டுபிடிக்க வலையமைப்பை ஏற்படுத்துவர். இதன்படி கொல்லப்படும் அனைவரின் படங்களையும் அல்பத்திற்குள் சேர்க்க நடவடிக்கை எடுப்பர்.

கேள்வி: ரோஹன விஜேவீரவின் இறுதிக் காலத்தை பார்த்தவர் என்றே உங்களை கூறுகின்றனர். அதனைப்பற்றி கூறுங்கள்?

***பதில்:*** அதிகாலையில் என்னை எழுப்பி அழைத்துச் சென்றனர். நான் போகும் போது அங்கிருப்பவர் ரோஹன விஜேவீர என்பது எனக்கு தெரியாது. வட்ட மேசையொன்றில் அவரிடம் விசாரணை நடத்தி கேள்விகளை கேட்டனர். அவரின் படங்களை எடுத்தேன். 1996இல் நான் மெகசின் சிறைச்சாலையில் கைதியாக இருந்த போது சட்டமா அதிபருக்கு சத்தியக்கடதாசியொன்றை அனுப்பி பெயர்களுடன் நான் கண்களால் பார்த்தவற்றை குறிப்பிட்டிருந்தேன். அவை தொடர்பில் சாட்சியமளிக்க தயார் என்றும் கூறியிருந்தேன்.

கேள்வி: இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க சிறந்த காலம் உருவாகியுள்ளது.

ஜே.வி.பி தலைமையிலான அரசாங்கமும் உருவாகியுள்ளது?

***பதில்:*** ஜே.வி.பியின் நியமுவா என்ற பத்திரிகையில் எனது சத்தியக் கடதாசியில் இருந்த தகவல்களை வெளியாகியிருந்தன. இவர்களுக்கு எதுவும் தெரியாமல் இல்லை. இன்னும் சாட்சி தொடர்பில் பேசிக் கொண்டிருக்க அவசியமில்லை. இன்று அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாக இருக்கின்றார். இதனால் இன்னும் இது தொடர்பில் காலத்தை இழுத்துக்கொண்டு போக வேண்டாம் என்று அவரிடம் கேட்கின்றேன் என்றார்.



Presidential Commission of Inquiry into Disappearances
MAR 2000

SESSIONAL PAPER No. 1 - 2000

REPORT OF THE COMMISSION OF INQUIRY INTO THE ESTABLISHMENT AND MAINTENANCE OF PLACES OF UNLAWFUL DETENTION AND TORTURE CHAMBERS AT THE BATALANDA HOUSING SCHEME

Printed on the Orders of the Government



# கூர்ஸ்க் "ஒப்பரேஷன் பைப்லைன்"

## ஐங்கரன் விக்கினேஸ்வரா

29.03.2025

மார்ச் மாத ஆரம்பத்தில் 800 ரஷ்ய சிறப்புப் படைகள் சுட்சாவில் உக்ரைன் படைகள் மீது மறைமுகத் தாக்குதலை (**операция поток**) நடத்தியுள்ளன. நுணுக்கமாக ரஷ்ய படையினர் திட்டமிட்டை நடத்திய அதிரடி தாக்குதல் உக்ரைனிய அரசையே கடுமையாக பாதித்துள்ளது.

போருக்கு முந்தைய காலத்தில், உக்ரைன் வழியாக ஐரோப் பாவிற்கு எரிவாயுவை எடுத்துச் செல்லும் குழாய் வழியாக 15 கிலோமீட்டர் தூரம் ஊர்ந்து சென்ற மறைமுகத் தாக்குதலை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலத்தடி எரிவாயு குழாய் வழியாக நீண்ட பல கிலோமீட்டர் தூரம் ரஷ்ய வீரர்கள் ஊடுருவி ஊர்ந்து சென்றனர்.

ரஷ்ய படை வீரர்கள் ஆக்ஸிஜன் முகமூடிகளை அணிந்து, தண்ணீர் மற்றும் மீத்தேன் புகைகளை பல நாட்கள் ரகசியமாக காவி, ரஷ்யாவின் தெற்கு கூர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள சுட்ஜா என்ற நகரத்திற்குள் ஆழ ஊடுருவி நகர்ந்தனர்.

கூர்ஸ்க் பிராந்தியம் மீது கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் உக்ரேனிய படைகளால் படையெடுக்கப்பட்டது. இந்த தாக்குதலில் உக்ரைன் ஈட்டிய குறுகிய கால வெற்றி கிரெம்ளினுக்கு பாரிய சங்கடத்தை ஏற்படுத்தியது.

உக்ரைன் படைகளை வேரோடு பிடுங்க ரஷ்ய தளபதிகள் ஆயிரக்கணக்கான வீரர்களை சண்டையில் ஈடுபடுத்தினர்.

இறுதியாக மார்ச் 8 ஆம் தேதி, சுட்சாவின் புறநகரில் குழாய் வழியில் ஊடுருவு பெரும் எண்ணிக்கையிலான ரஷ்ய வீரர்கள் உக்ரேனிய துருப்புக்களை விரட்டியடிக்க ஈடுபடுத்தப்பட்டனர்.

அடுத்த வந்த நாட்களில், உக்ரேனிய துருப்புக்கள் கூர்ஸ்கில் கணிசமான நிலப்பரப்பை இழந்தன, சில இடங்களில் திடீரென பின்வாங்கப்பட்டன. இம்மாதம் மார்ச் 13 அன்று, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் சுட்சாவை தங்கள் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறியது.

ரஷ்யாவின் நுணுக்கமான அதிரடி தாக்குதலால் திகைத்துப் போன உக்ரேனிய வீரர்கள் கூர்ஸ்க் பிராந்தயத்தில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்த 'ஒப்பரேஷன் பைப்லைன்' தாக்குதலுக்குப் பிறகு கூர்ஸ்க் பிராந்தியத்தில் ரஷ்ய இராணுவம் பாரிய முன்னேற்றங்களை அடைந்துள்ளது.

### ரஷ்யா மீட்ட கூர்ஸ்க்:

தென்மேற்கு கூர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரேனியப் படைகளிட மிருந்து 100 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான நிலப்பரப் பையும் 12 கிராமங்களையும் ரஷ்யா மீட்டெடுத்துள்ளதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.







கூட்டுத் தாக்குதல் பிரிவு அடங்கி இருந்தது.

கூர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள சுட்ஷா நகரத்தைக் கைப்பற் றுவதற்கான ரஷ்ய இராணுவத்தின் நடவடிக்கை உக்ரேனியப் படைகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக மாறியது. ஏனெனில் அவர்கள் முற்றிலும் திசைதிருப்பப்பட்டு சரணடைய வழி வகுத்தது என்று ரஷ்ய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் பற்றி சிறப்புப் படைப் பிரிவின் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் அப்டி அலாவுடினோவ், கூறுகையில் கூர்ஸ்க் வீழ்ச்சியடைந்து பிடிக்கப்பட்ட பிறகும், உக்ரேனிய வீரர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாததால் அவர்கள் திகிலடைந்தனர்.

### அமெரிக்க இராணுவ உதவி நிறுத்தம்:

கூர்ஸ்க் பகுதியில் கடந்த மாதத்தில் ரஷ்யாவின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள், உக்ரைன் படைகளை சுற்றி வளைக்கும் அபாயத்தில் ஆழ்த்தியதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறு கின்றனர். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உக்ரை னுக்கு இராணுவ உதவி மற்றும் உளவுத்துறை பகிர்வை

தங்கள் பாதுகாப்புகளைக் கைவிடச் செய்த, அதன் மூலம் கூர்ஸ்க் பிராந்தியத்தில் ரஷ்ய இராணுவத்தின் முன்னேற்றத் திற்கு உதவிய ஒருங்கிணைந்த தாக்குதல் பிரிவின் வீரச் செயல்களை ஜெராசிமோவ் பாராட்டினார்.

### உக்ரேனிய படைகள் பின்வாங்கல்:

ரஷ்யவால் மீண்டும் கைப்பற்றப்பட்ட குடியேற்றங்களில் அக் ரோனோம், போக்டனோவ்கா, பொண்டரேவ்கா, டிமிட்ரியு கோவ், ஜசுலேவ்கா, இவாஷ்கோவ்ஸ்கி, கோல்மகோவ், குபாட்கின், மார்டினோவ்கா, மிகைலோவ்கா, பிராவ்டா மற்றும் யுஷ்னி ஆகியவை அடங்கும். இவை அனைத்தும் உக்ரேனிய கட்டுப்பாட்டில் உள்ள சுட்சா நகரத்தின் வடக்கு அல்லது கிழக்கே அமைந்துள்ளன.

ஒரு வருடத்திற்கும் மேலாக, கிழக்கு உக்ரைனில் உள்ள டொனெட்ஸ்க் பிராந்திய நகரமான அவ்தியிவ்காவுக்கான போரின் போது, ரஷ்ய துருப்புக்கள் இதுபோன்ற ஒரு சாத னையை நிகழ்த்தியதாக அறியப்படுகிறது.

ஆரம்பத்தில் ரஷ்ய துருப்புக்கள் உக்ரேனிய பாதுகாப்பு வளை



இதன் தொடர்ச்சியாக கூர்ஸ்க் பிராந்தியத்தில் "ஒப்பரேஷன் பைப்லைன்" ரஷ்ய படைகளின் தாக்குதலுக்கு எதிராக உக்ரேனிய படைகள் முகங்கொடுக்க முடியாமல் திணறுகின்றன.

இந்த ஒப்பரேஷன் பைப்லைனில் 11வது காவலர் வான் தாக்குதல் படையணி, 72வது மோட்டார் பொருத்தப்பட்ட ரைபிள் பிரிவின் 30வது படைப்பிரிவு, அக்மத் சிறப்புப் படைவீரர்கள் மற்றும் வோஸ்டாக் ஏ தாக்குதல் படையணிகள் அடங்கிய



நிறுத்தியதை ரஷ்யா சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதாகத் தெரிகிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்டில் கூர்ஸ்க் பிராந்தியத்தில் அதன் படைகள் முதன்முதலில் நுழைந்தபோது உக்ரைன் 1,376 சதுர கிலோமீட்டர் நிலத்தைக் கைப்பற்றியது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் ரஷ்யாவுடனான எதிர்கால அமைதிப் பேச்சுவார்த் தைகளில் பேரம் பேச பலனளிக்கும் என்று மேற்குலக நாடுகள் நம்பின.

ரஷ்யா தொடர்ந்து முன்னேறும் போது உக்ரைன் மேலும் பல பகுதிகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பரேஷன் பைப்லைன் ஒரு முழுமையான சவாலாக உக்ரைனுக்கு மாற்றியது. ஏனெனில் உக்ரைனின் பல முக்கிய தளபதிகள் தப்பி ஓடிவிட்டனர். உக்ரைன் படைகளை கைவிட்டு, தாங்கள் பின்வாங்குவதை அவர்களுக்குத் தெரிவிக்கத் தவறி விட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த மார்ச் 12 அன்று, ரஷ்ய துணைப் பாதுகாப்பு அமைச்சரு மான இராணுவ ஜெனரல் வலேரி ஜெராசிமோவ், 800க்கும் மேற்பட்ட வீரர்கள் இந்த நடவடிக்கையில் பங்கேற்றதாகவும் கூறினார். எதிரிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய, அவர்களைத்

யத்தை முறியடிக்க பல மாதங்கள் முயற்சித்தன. 2024 ஜனவரி தொடக்கத்தில், ரஷ்ய துருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கிய நீர் வெளியேறும் சுரங்கப்பாதையைப் பயன்படுத்தி நகரத்தின் ஒரு காட்டு தென்கிழக்கு மூலையில் ஊடுருவின.

அங்கு உக்ரேனியப் படைகள் பதுங்கியிருந்து இந்த தாக்குதலை முறியடிக்க போராடின. தற்போதய குழாய் ஊடுருவலுக்கு முன்னர் பிப்ரவரி 17, 2024 அன்று, கூர்ஸ்க் சுற்றி வளைப்பதைத் தவிர்க்க உக்ரேனிய வீரர்கள் நகரத்திலிருந்து முழுமையாக பின்வாங்குவதாக அறிவித்தனர்.



# ஊருக்கும் வெட்கமில்லை; உலகுக்கும் வெட்கமில்லை; ரணிலுக்கும் வெட்கமில்லை

17.03.2025

சிங்களபௌத்த அரசுத் தலைவர்கள், அவர்கள் யுத்த வெற்றிவாதிகளாக இருந்தாலும் சரி, அல்லது லிபரல் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது சமூக நீதி முகமூடி அல்லது மாற்றத்தின் முகமூடி அணிந்தவர்களாக இருந்தாலும் சரி, யாருமே தமிழ் மக்களுக்கோ அல்லது இறந்த காலத்துக்கோ பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பதைத்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் ஐநாவின் 58ஆவது கூட்டத் தொடர் உணர்த்துகின்றது. ஐநா கூட்டத்தொடரில், கடந்த மாதம் 25ஆம் திகதி, தேசிய மக்கள் சக்தியின் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆற்றிய உரையில் ஐநாவின் பொறுப்புக் கூறலுக்கான பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நிராகரித்திருந்தார். “சிறீலங்கா பொறுப்புக் கூறலுக்கான நிகழ்ச்சித்திட்டம்” (Sri Lanka Accountability Project) எனப்படும் அப்பொறிமுறையானது கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு பலவீனமான ஆனால் பன்னாட்டுப் பொறிமுறை அதுவாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பன்னாட்டுப் பொறிமுறையை நிராகரித்து ஒன்பது நாட்களின் பின், ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய் மூல அறிக்கை வெளிவந்து நான்கு நாட்களின் பின், ரணில் விக்கிரமசிங்கவின் அல்ஜசீரா நிகழ்ச்சி வெளிவந்திருக்கிறது. அந்த நிகழ்ச்சியும் சிங்களத் தலைவர்கள் யாராயிருந்தாலும் குற்றங்களுக்குப் பொறுப்புக்குகூற மாட்டார்கள் என்பதைத்தான் உலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் மேற்படி காணொளி வெளிவந்திருக்கிறது. ஏற்கனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான ஒப்புதல் வாக்கு மூலம் அடங்கிய காணொளி உள்ளடங்களாக ‘சனல் நாலு’ காணொளிகள் இவ்வாறு ஐநா கூட்டத் தொடர்கள் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியிலேயே வெளிவந்தனை என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்கவேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மறைமுகமாக அழுத்தங்களைப் பிரயோகிக்கும் உள்நோக்கங்கள் இதில் உண்டா என்றும் பார்க்க வேண்டும். கடந்த 15ஆண்டுகளிலும் இவ்வாறு பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களின் விளைவாக தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்தது என்பதையும் தொகுத்துப் பார்க்க வேண்டும்.






இனி அந்தக் காணொளிக்குள் நுழைவோம். முதலில், அந்த நிகழ்ச்சி எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். அது ஒரு நேர்காணல் என்பதைவிடவும் குறுக்கு விசாரணையாகவே பெருமளவுக்கு அமைந்திருந்தது. மஹ்தி ஹசன் நன்கு வீட்டுவேலை செய்துகொண்டு வந்திருந்தார். விரல் நுனியில் தகவல்களை வைத்திருந்தார். வீட்டுவேலை செய்யாமல் கேள்வி கேட்கப்போகும் ஊடகவியலாளர்கள் அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அது புலம் பெயர்ந்த

பட்டியை இடைக்கிடை சரிசெய்து நேராக்கியபடி மிகவும் ‘கூலாக’ அவர் பதில் கூறுகிறார். ஒரு இடத்தில் மஹ்தி ஹசனைப் பார்த்து “பொறுமையை இழக்காதீர்கள்” என்று சொல்லுகிறார். அதை அவர் மஹ்தி ஹசனுக்குச் சொன்னாரா? அல்லது தனக்குத் தானே சொன்னாரா?

அவர் கூறும் பதில்களில் பல இக்கட்டுரையின் நோக்கு நிலையில், அதாவது தமிழ் நோக்கு நிலையில் மோசமானவை. ஆனால் ரணில் முக்கியமான இடங்களில் மிகவும் கூலாகப் பதில் சொல்லுகிறார். சிரித்துக் கொண்டே தன்னை காந்தியோடு ஒப்பிடுகிறார். சிரித்துக்கொண்டே இலங்கை ஒரு வன்முறை இல்லாத நாடு என்று கூறுகிறார். சிரித்துக்கொண்டே சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது என்று கூறுகிறார்.

அதே சமயம் அவர் சொன்ன பதில்கள் பலவற்றிலிருந்து உலக சமூகமும் குறிப்பாக ஐநா ஒரு தெளிவான செய்தியைப் பெறக் கூடியதாக இருந்தது. அது என்னவென்றால், சிங்களபௌத்த அரசுத் தலைவர்கள் யாராக இருந்தாலும் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பதுதான்.

2015ஆம் ஆண்டு பொறுப்புக் கூறலுக்கான ஐநாவின் தீர்மானத்திற்கு இணையனுசரணை வழங்கியது ரணில் விக்ரமசிங்கதான். நிலைமாறு கால நீதிக்கான அந்த தீர்மானத்துக்கு ரணில்-மைத்திரி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. அதற்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்றப்பட்ட ஐநா

இங்குள்ள பயங்கரமாகும்.

ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டத்தின்போது சிங்கள மக்கள் சித்திரவதை செய்யப்பட்ட, கொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் சரி, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இன அழிப்புக் குற்றச்சாட்டுகளுக்கும் சரி, ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கும் சரி, அவர் பொறுப்புக்கூறத் தயாராக இருக்கவில்லை. பொறுப்பற்றதனமாகப் பதில் சொன்னார்.

இலங்கைத்தீவின் வரலாற்றில் ஒரு முன்னாள் அரசத் தலைவர் அதுபோல எங்கேயும் அவமானப்படுத்தப்பட்டதாக எனக்கு நினைவில்லை. “உன்னுடைய வயதை விட என்னுடைய அரசியல் வாழ்வின் காலம் அதிகமானது என்று” ரணில் சிரித்துக் கொண்டு செல்லலாம். ஆனால் அவ்வளவு அனுபவசாலியான அவர் அதுபோல வேறு எங்கேயும் அவமானப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை அம்பலப்படுத்திய ஆகப் பிந்திய நிகழ்ச்சி அது. சிங்கள பௌத்த அரசு தலைவர்கள் தமிழ் மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள்; கொல்லப்பட்ட சிங்கள மக்களுக்கும் பொறுப்பு கூற மாட்டார்கள்; முஸ்லிம்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்கள்; மட்டுமல்ல சிங்களக் கத்தோலிக்கர்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்கள் என்பது அங்கே தெளிவாகத் தெரிந்தது.

எல்லாக் குற்றங்களையும் செய்துவிட்டு அல்லது குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொண்டு கூலாக அவர் சொன்ன பதில்கள் யாவும், இனஅழிப்புச் செய்தவர்களையும் தமது அரசியல் வெற்றிகளுக்காக முஸ்லிம் மக்களை பலியிட்டவர்களையும் அவர் பாதுகாக்கிறார் இன்று நம்பப் போதுமானவைகளாக இருந்தன. அதாவது குற்றங்களைப் பாதுகாக்கும் குற்ற மயப்பட்ட ஒரு அரசுக் கட்டமைப்புக்கு அவர் தலைவராக இருந்திருக்கிறார் என்பதை அவர் வெளிப்படுத்தினாரா?

மகா சங்கத்துக்கு விசுவாசமாக அவர் கூறிய பதிலில் தன்னை ஒரு சிங்கள பௌத்தனாகப் பிரகடனப்படுத்துகிறார். அங்கே அவருடைய லிபரல் முகமூடி பாரதூரமாகக் கிழிகிறது. ஆனால் அவர் கூலாகப் பதில் கூறுகிறார்.

இதில் தமிழ் மக்களுக்குப் புதிதாக எதுவும் இல்லை. ஏனென்றால் ரணிலைப் பற்றி ஏற்கனவே தமிழ்மக்கள் மத்தியில் மிகப்பலமான ஒரு படிமம் உண்டு. அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்று அழைத்ததை தமிழர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பத்திரும்ப மேற்கோள் காட்டுவது அந்த அடிப்படையில்தான். எனவே ரணில் யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால் ரணிலோடு இணைந்து நல்லாட்சிக் காலகட்டத்தில் அதாவது 2015 இல் இருந்து 18 வரையிலுமான காலப்பகுதியில், நிலைமாறு கால

www.sangathamil.ca

சங்கத்தமிழ்




நீதிக்காக உழைத்த தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கிறார்களே, அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

அவர்கள் ரணிலை மட்டும் பாதுகாக்கவில்லை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சஜித்தையும் பாதுகாத்தார்கள். சஜித்தும் ரணிலைப்போலதான். கடந்த செப்டம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்கள் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில் தான் ஐநா கூட்டத் தொடரும் நடந்தது. அப்பொழுது சஜித் ஐநா தீர்மானங்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத்தான் கொண்டிருந்தார். ரணில் மட்டுமல்ல சஜித்தும் பொறுப்புக்கூறத் தயார் இல்லை. அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தமிழ் வாக்குகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில்தான் பொறுப்புக்கூறல் தொடர்பில் பன்னாட்டு பொறிமுறைகளுக்கு எதிராகத் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். இது நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடந்த, பொது வேட்பாளருக்கான கடைசிப் பிரச்சார கூட்டத்தில், மேடையில் வைத்துப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் தமிழ்மக்களின் வாக்குகளை சுமந்திரன் சஜித்துக்கு வாங்கி கொடுத்தார். தேசத் திரட்சிக்காக, பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியநேத்திரனை சுமந்திரனுக்கு விசுவாசமான மத்திய குழு கட்சியை விட்டு நீக்கியிருக்கிறது. அதாவது சிங்களத் தலைவர்கள் இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூறத் தயார் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளை அவர்களுக்குச் சாய்த்துக் கொடுக்கும் தமிழ்த் தலைவர்களும் தமிழ்மக்களுக்குப் பொறுப்புக்கூறத் தயாரில்லை.

நன்றி: நிலாந்தன்



# பட்டலந்த குறித்து பேசினால் தான் சிங்கள தலைவர்கள் வடக்கிழக்கில் செய்தது சிங்களவர்களிற்கு தெரியவரும்!

**ஊகவியலாளர் நந்தன் வீரரத்ன**

18.03.2025

அரசியல் எதிர்காலத்திற்காக கூட்டாக கொலை செய்வது தென்னிலங்கை அரசியல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக காணப்பட்டது. கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தளை என எல்லா இடங்களிலும் ஒரே தந்திரோபாயங்களே பின்பற்றப்பட்டன, தென்னிலங்கையில் இடம்பெற்ற அநியாயங்கள் பற்றி பேசிவது முக்கியம் ஏனென்றால் இது பற்றி பேசும் போதுதான் ஜே.ஆர், ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையில் மாத்திர மல்ல வடக்கு கிழக்கிலும் இதனை செய்தார்கள் என்பதை சிங்கள மக்கள் அறிந்துகொள்ளும் உணர்ந்துகொள்ளும் நிலை உருவாகும் என பட்டலந்த வதை முகாம் குறித்து புலனாய்வு செய்து அதனை அம்பலப்படுத்திய புலனாய்வு ஊடகவியலாளர் நந்தன வீரரத்ன தெரிவித்துள்ளார்



மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றின் போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

நாங்கள் இளம் காலத்தில் பார்த்த ஒரு கொடுமையான வன்முறை மிகுந்த மர்மமான அரசியல் சூழ்நிலையின் கதைதான் பட்டலந்த.

இதனுடைய வரலாற்றை பின்னர்பார்ப்போம்.

1960 களின் பிற்பகுதியில் இலங்கைக்கு முதல் முறையாக மொசாட் உறுப்பினர் ஒருவர் விஜயம் மேற்கொண்டார், அவர் - அரிமா லெவி ஜே.ஆர் ஜெயவர்த்தனவை சந்தித்து அரசியல் இளைஞர் சமூகத்தை எவ்வாறு கட்டியெழுப்பவேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கினார்.

1970களில் சிறிமாவோ பண்டாரநாயக்க தங்களுடைய பிள்ளைகளை அடிப்படையாக வைத்து ஒரு இளைஞர் அரசியல் சமூகத்தை உருவாக்க முயன்றார். தான் தாங்கள் சார்ந்த இளைஞர் சமூகத்தை உருவாக்க முயன்றார். அதற்கான பொறுப்புகளை தனது பிள்ளைகளிடம் வழங்கினார்.

1970களில் பிற்பகுதியில் புதிய அரசியல் இளைஞர்களை உருவாக்கும் பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொழும்பின் இந்த அரசியல் தலைவர்கள் தங்களிற்கு பின்னர் தங்கள் பதவிகளை தங்கள் பரம்பரைக்கு எப்படி கொடுப்பது என்பதற்கான திட்டமிடல்களிலீடுபட்டனர்.

இவர்கள் அதற்காக எப்படி தயாராகயிருந்தார்கள் என்றால் அரசாங்கத்துடன் ஒத்துப்போகாத இளைஞர்களை அழிப்பதற்கு இவர்கள் தயாராகயிருந்தார்கள். அதற்கான திட்டங்கள் இவர்களிடம் இருந்தன.

1977 முதல் 81 வரை தமிழ் இனத்திற்கு எதிராக மிகப்பெரும் வன்முறைகள் தாக்குதல்கள் இடம்பெற்றன.

1981 இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதும் தமிழர்கள் கொல்லப்பட்டதும் சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் நினைவில் உள்ளது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் திட்டமிட்டு வைத்திருந்த இந்த வன்முறைகளை முதன் முதலில் பரீட்சித்து பார்த்தது தமிழ் சமூகத்திற்கு எதிராகத்தான்.

தங்களிற்கு மசியாத தமிழ் இளைஞர்கள். தமிழ் சமூகத்தினர். தமிழ் தலைவர்கள் மீது அவர்கள் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டார்கள். தண்டனை வழங்கினார்கள்.

அரசாங்க சிறையில் பாதுகாப்பாகயிருந்த தமிழ் கைதிகளை இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக படுகொலை செய்தமை இதற்கான ஒரு உதாரணம்.

இந்த சிறையிலிருந்த தமிழர்களிற்கு எதிராக சிங்களவர்களை தூண்டிவிட்டார்கள், சிங்கள கைதிகளை வைத்தே தமிழர்களை தாக்கினார்கள்.

ஜே.ஆர் தனக்கு எதிரான சமூகத்தை தண்டிப்பதற்காக எவ்வளவு கீழ்த்தரமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார் என்பதை இந்த சம்பவம் வெளிப்படுத்தியது.

நான் முதன் முதலில் ஆராய நினைத்தது கொக்கட்டிச்சோலை




படுகொலை பற்றித்தான்.

கொக்கட்டிச்சோலை படுகொலையில் ஈடுபட்ட அரச இராணுவத்தின் பொறுப்பதிகாரியாக இருந்தவர் இலங்கையின் கொழும்பின் மிகப்பெரிய பாடசாலையாகயிருந்த ஆனந்தா கல்லூரியின் அதிபரின் மகன் குடலிக. கேர்ணல் குடலிகம.

இராணுவ நீதிமன்றம் இவர் குற்றவாளி என தெரிவித்திருந்த போதிலும் இவருக்கு எந்த தண்டனையும் வழங்கப்படவில்லை.

தங்களுடைய அரசியல் எதிர்காலத்திற்காக கூட்டாக கொலை செய்வது தென்னிலங்கை அரசியல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக காணப்பட்டது.

1971 இல் சிங்கராஜா வனகாட்டுப்பகுதிக்குள் பின்வாங்கிய ஜேவிபி உறுப்பினரை கைதுசெய்து அவருக்கான புதைகுழியை அவரையே வெட்டச்செய்து கொன்று புதைத்த வரலாறு உள்ளது.

இந்த அரசாங்கங்கள் கடந்த 70 வருடங்களாக தங்களிற்கு எதிரானவர்களை மாற்றுக்கருத்தினை கொண்டிருப்பவர்களை கூட்டாக கொலை செய்தன அல்லது மோசமான வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டன.

இந்த பட்டலந்த முகாம் குறித்து தகவல்களை திரட்டுவதற்கு நான் ஆர்வம் காட்டியமைக்கு காரணம், பட்டலந்த முகாமிற்கு பொறுப்பாகயிருந்தவர் இந்த நாட்டின் தலைவராக வருவதற்கான கலாச்சாரத்தை நான் உணர்ந்திருந்தேன்.

1987-89 ஆண்டு பகுதிகளில் - இந்திய அமைதிப்படையினர் நிலை கொண்டிருந்த காலத்தில் வடக்கு கிழக்கு போல இலங்கை முழுவதும் வதை முகாம்கள் காணப்பட்டன.

நாட்டின் முக்கிய பொறுப்பிலிருந்த அரசியல் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வதைமுகாம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டோம்.

1970-80களில மிகப்பெரிய முதலீடாக சப்புகஸ்கந்த யூரியா தொழிற்சாலை காணப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியுடன்

ஆதரவுடன் விவசாயிகளிற்கு வழங்குவதற்கான யூரியாவை உற்பத்தி செய்வதற்கான திட்டம் இது.

எனினும் தொழில் அமைச்சராகயிருந்த ரணில் விக்கிரமசிங்க பழைய இரும்புகளிற்கு விற்றுவிட்டு வீட்டு தொகுதிகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். தனது அரசியல் தேவைகளிற்காக பயன்படுத்தினார்.

ஒரு தொழிற்சாலையை ஒரு ஒட்டுமொத்த வதைமுகாமாக பயன்படுத்தியது என்பது பெரும் கதையாடல்.

பட்டலந்த முகாமிற்குள் சென்று ஆராய்வது அவசியமான தேவையாக காணப்பட்டது. மிகவும் திட்டமிட்டவாறு கவனமாக நாங்கள் நுழைந்தோம்.

நாங்கள் பயன்படுத்திய உபாயங்கள் காரணமாக ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் சென்று பார்த்தோம்.

1994 இல்திரட்டப்பட்ட தகவல் மூலம், ஒரு மிகப்பெரிய வதை முகாம் குறித்தும் அங்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டமை குறித்தும் தகவல்களை திரட்ட முடிந்தது.

இந்த தகவல்களை மாற்று பத்திரிகையாக காணப்பட்ட ராவய வில் கோட்சூட் அணிந்த தலைவரின் வதைமுகாம் என்ற தலைப்பில் வெளியிட்டோம்.

அன்று ஜனாதிபதியாக பதவி வகித்தவர் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க. அவர் பட்டலந்தகுறித்து உண்மைகளை அறிவதற்கான ஆணைக்குழுவை ஏற்படுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார், அதற்கு காரணம் எங்கள் எழுத்துக்கள் தான்.

சந்திரிகா இது குறித்து சிஐடியிடம் சென்று முறைப்பாடு செய்யுமாறு என்னை கேட்டார். சிஐடியில் எனது முறைப்பாட்டினை அடிப்படையாக வைத்து 1996 இல் உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழுவை அமைத்தார்.

சாட்சிகளை விசாரித்தவேளை இந்த பட்டலந்த முகாமில் ஜேவிபி இளைஞர்கள் மாத்திரம் சித்திரவதை செய்யப்படவில்லை, கொல்லப்படவில்லை, ஐக்கிய தேசிய கட்சியினர் சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூட கொலை செய்யப்பட்டனர் என்பது தெரியவந்தது.

அந்த அரசியல் தலைவரின் ஆசீர்வாதம் பெற்ற பொலிசார் அரசியல் எதிரிகளை மாத்திரமின்றி கப்பம் பெறுவதற்காக பலரை கடத்தி கொலை செய்தனர், தங்களின் சொல்லை கேட்காத வழக்கறிஞர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் ஏன் பொலிசாரை கூட கொலை செய்தனர்.

பட்டலந்த விவகாரத்தில் முக்கியமாக ஒரு நபரின் பெயரை குறிப்பிடவேண்டும், அவர் கிறிஸ்டொபர் வின்சென்ட் பெரேரா, திருகோணமலையை சேர்ந்தவர். ரணிலின் உதவியாளராக பணியாற்றியவர்.

பட்டலந்த ஆணைக்குழுவில் இடம்பெற்றிருந்த நீதிபதிகள் ரணில் விக்கிரமசிங்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக தங்கள் அறிக்கையில் அவரது பெயரை குறிப்பிடவில்லை.

அந்த இளைஞர் வழங்கிய சாட்சியம் புலனாய்வு பிரிவிடம் இன்றும் உள்ளது.

அந்த நபர் சாட்சியம் வழங்கி மூன்று நாட்கள் வரை ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணிகள் அது பற்றி மௌனமாகயிருந்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் அவர்(36) மர்மமான முறையில் உயிரிழந்தார்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் வேண்டுகோள் விடுத்தவேளை ஆணைக்குழு தனக்கு இதற்கான அதிகாரம் இல்லை என தெரிவித்தது.

இது குறித்து சிஐடியினர் மேற்கொண்டிருந்த விசாரணைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பரிந்துரைகளுடன் அந்த அறிக்கை அவரிடம் வழங்கப்பட்டது.

ஆனால் அவர் அந்த அறிக்கையை தனது மாளிகைக்கு கொண்டு சென்றார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தனது அரசியல் தேவைகளிற்காக 1999 தேர்தலின் போது மாத்திரம் அதனை வெளியில் எடுத்தார்.

அதன் பின்னர் அது வரலாற்றின் புழுதியில் மறைந்துபோனது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான வேளை பட்டலந்த வதை முகாமிற்கு சென்று அது குறித்து புலனாய்வு செய்து எழுதியவன் என்ற அடிப்படையில் வெட்கி தலைகுனியும் நிலையிலிருந்தேன்.

அதன் பின்னரே பட்டலந்தவிற்கு தீ வைத்தோம் என்ற நூலை எழுதினேன். ரணில் ஜனாதிபதியாகயிருந்த காலத்தில் இதனை வெளியிட்டோம்.

இந்த நூல் ஆங்கிலத்தில் வெளியானது, அல் ஜசீரா இந்த நூலைத் தான் தனது பேட்டிக்கு பயன்படுத்தியது.

அல்ஜசீரா இதனை தெரிவித்த பின்னர்தான் இலங்கையின் ஆங்கில சிங்கள முதுகெலும்பு அற்ற பத்திரிகையாளர்களிற்கு இவ்வாறாதொரு விடயம் இருப்பது நினைவிற்கு வந்தது.

இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறப் போகின்றது.




இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நாடு முழுவதும், வதைமுகாம் ஒன்றை பற்றி ஏப்ரல் பத்தாம் திகதி பேசப் போகின்றது.

இது உலகிற்கு சொல்வதற்கான ஆதாரம்.

இவ்வாறான நபர்களை ஆட்சியாளர்களை ஆட்சிக்கு கொண்டுவராதீர்கள் என உலகிற்கு சொல்வதற்கான வாய்ப்பு.

கொழும்பு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மாத்தளை என எல்லா இடங்களிலும் ஒரே தந்திரோபாயங்களே பின்பற்றப்பட்டன, இதனை செய்தவர்கள் ஒரே ஆட்சியாளர்கள் தான்.

ஆகவே உரத்தகுரலில் இது குறித்து பேச வேண்டும்.

பட்டலந்த என்பது சிங்களவர்களின் பிரச்சினை மாத்திரமல்ல, தமிழர்களின் பிரச்சினை, முஸ்லீம்களின் பிரச்சினை, பட்டலந்தவில் பயன படுத்திய முறைகளை தான் தங்களிற்கு எதிரானவர்களிற்கு அவர்கள் பயன்படுத்தினார்கள்.

இத்தகைய கொடுமைகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் கீழ் இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கான அழுத்தங்களை நாங்கள் கொடுக்க வேண்டும்.

தென்னிலங்கையில் இடம்பெற்ற அநியாயங்கள் பற்றி பேசிவது முக்கியம் ஏனென்றால் இது பற்றி பேசும்போது தான் ஜேஆர் ரணில் விக் கிரமசிங்க தென்னிலங்கையில் மாத்திரமல்ல வடக்குகிழக்கிலும் இதனை செய்தார்கள் என்பதை சிங்கள மக்கள் அறிந்துகொள்ளும் உணர்ந்து கொள்ளும் நிலை உருவாகும்.




ஆனந்தபுரம் சமர் நாயகர்கள்
வணக்க நிகழ்வு
பிரிகேடியர் மணிவண்ணன்
அழகரத்தினம் துசியந்தன்
பிரிகேடியர் விதுசா
கந்தையா ஞானபூரணி
பிரிகேடியர் துர்க்கா
பொன்னுத்துரை கலைச்செல்வி
ரிபுல் (Tribul)
யுனிட் 8
பிற்பகல்
5.30-8.30
சனி
ஏப்ரல்
05
2025
பிரிகேடியர் தீபன்
வேலாயுதபிள்ளை பகிரதகுமார்
பிரிகேடியர் ஆதவன் (கடாபி)
ஆறுமுகம் விநாயகமூர்த்தி
கேணல் அமுதா
வேலாயுதம் கஜேந்தினி
கேணல் தமிழ்ச்செல்வி
நாகேசுவரன் கமலேசுவரி
கேணல் நாகேஸ்
சூசைமுத்து அமலதாஸ்
கேணல் ஐயனார்
சீவரத்திரனம் துசியந்தன்
கேணல் அகிலேஸ்
செல்வராசா துரேஸ்குமார்
கேணல் சேரலாதன்
சிவசோதி சிவகுமரன்(சேரா)
கேணல் அன்ரன்
Unit 8, 3401 McNicoll Ave, Scarborough, ON, M1V 4B7 (Middlefield & McNicoll -Near Selva Vinayagar Temple)
தொடர்புகளுக்கு: (Whatsapp only): 647-513-7642

# இன அழிப்பை தொடர்வார்கள் என்பதற்கான அடையாளமாகவே சட்ட விரோத தையிட்டி விகாரை அமைந்துள்ளது

### *அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட் தந்தை மா. சத்திவேல்*

25.03.2025

இன அழிப்பை தொடர்வார்கள் என்பதற்கான அடையாள மாகவே சட்ட விரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் அமைந்துள்ளதாக என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.



அவரால் இன்று (25.03.2025) வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவத்தினரால் தையிட்டியில் பலவந்தமாக கட்டப்பட்டுள்ள விகாரை சட்டத்திற்கு விரோதமானது என அதனால் தமது சொந்த நிலங்களை இழந்துள்ள மக்களும் ஒட்டுமொத்த தமிழர் களும் ஓங்கி குரல் எழுப்பிக் கொண்டிருக்கையில் விகாரைக்கு அண்மையில் மீண்டும் சட்ட விரோதமாக பிக்குகள் தங்கும் மடாலயம் ஒன்று கட்டப்பட்டு யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தனபாலினால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டு உள்ளமை தமிழர்கள் மத்தியில் பல அதிர்வலைகளை ஏற்படுத் தியுள்ளது.

விகாரை விடயம் மீண்டும் தமிழர்களின் நீதி குரலை இராணுவத்தின் சப்பாத்துக்காலால் மிதித்து சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடுங்கரங்களால் தேசிய மக்கள் சக்தியும் அடக்கும் என்பதை நிரூபித்துள்ளதோடு இது தமிழர்களை மீண்டும் போராட்ட வன்முறைக்கு தூண்டி பயங்கரவாதிக ளாக்கும் அரச பயங்கரவாதத்தின் வன்முறையை கண்டிப்ப தோடு அண்மித்து வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழர்கள் இதற்கு தகுந்த பதிலடியை கொடுக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியினதும், மக்கள் விடுதலை முன்னணி யினதும் தலைவர் ஆகிய தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் வடக்குக்கு தேர்தல் காலங்களில் வந்த போது மக்கள் பெரும் ஆரவாரத்தோடும் மேளதாளங்க ளுடனும் வரவேற்று பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்தும் வரவேற்றதோடு வாக்குகளை யும் அள்ளிக் கொடுத்தனர். அத்தகைய மக்களை சிங்கள பௌத்த பேரினவாத ஆயுதத்தால் முதுகில் குத்திக் கிழித்து காயப்படுத்தி உள்ளமை ஆட்சியாளர்களின் இனவாதத்திற்கும், மதவாதத்திற்கும் எதிரான போலி முகத்திரை கிழித்து தமிழர் களுக்கு எதிரான அவர்களின் அடுத்த கட்ட யுத்த முகம் வெளிப் பட்டுள்ளது எனலாம்.

அது மட்டுமல்ல கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்த லிலும் அவர்களுக்கு பின்னால் அணி திரண்டு வாக்களித்தவர் களும் அவர்களுக்காக தம்மை அரசியல் மற்றும் கல்வி புத்தி ஜீவிகளாக அடையாளம் காட்டிக் கொண்டவர்கள் மட்டுமல்ல தற்போது தேசிய மக்கள் சக்தியின் கீழ் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட துடித்துக் கொண்டிருப்பவர்களையும் தலை கவிழ வைத்துள்ளது தற்போதைய தையிட்டி விகாரை நிலை.

தேசிய மக்கள் சக்தி சார்பில் வடக்கு கிழக்கில் நாடாளுமன்றத் திற்கு தெரிவானவர்களும், வடக்கு மாவட்ட சபையின் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் அவர்களும் தையிட்டி விகாரை விடயமாகவும் மற்றும் நிலமிழந்தோர் சம்பந்த மாகவும் நீதி நிலைநாட்டப்படும் என வாய் கிழிய கத்தினார்கள். இனி அவர்கள் எந்த முகத்தோடு மக்கள் முன் தோன்று வார்கள்? அமைச்சர் எவ்வாறு மாவட்ட அபிவிருத்தி சபையில் தலைமை பதவியில் தொடர்ந்திருப்பார்?

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப் பாளரும் அபிவிருத்தி சபை தலைவருமான இராமலிங்கம் சந் திரசேகரன் அவர்களின் அனுமதி மற்றும் ஆசிர்வாதத் தோடுமே இரண்டாவது சட்டவிரோத கட்டடம் திறந்து வைக்கப் பட்டுள்ளது எனலாம். யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பங்கேற்பு அரசின் பங்கேற்பையும் ஆசீர்வாதத்தையும் உறுதிப் படுத்துகின்றது. தேசிய மக்கள் சக்தி முகம் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் கட்டமைப்பும் அடிப்படையில் பேரின வாத சிங்கள பௌத்த கட்டமைப்பே. இதனை தொடர்ந்து பாது காத்துக் கொண்டே இவர்கள் அரசியல் செய்ய நினைப்பது நாட்டை மேலும் பேரழிவிற்கே இட்டுச் செல்லும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கு கிழக்கில் படைத்துறை



கட்டமைப்பை அகற்றவோ மாற்றி அமைக்கப் போவதோ இல்லை. இதற்கு துணையாகவும், சமமாகவும் சிங்கள பௌத்த கட்டமைப்புகளை மேலும் பலப்படுத்தி இன அழிப்பை தொடர் வார்கள் என்பதற்கான அடையாளமாகவே சட்ட விரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் அமைந்துள்ளது.

பேரினவாத பிக்கு ஒருவர் மடாலய ஆலய திறப்பினை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் "மடாலய திறப்பு நாளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மடாலய வளாகத்தில் இருந்து பாதுகாப்பு படையினரை மீளப்பட்டுள்ளது. இவ்விகாரை மற்றும் மடாலயத்தின் பாதுகாப்பு சிங்கள பௌத்தர்களின் கையிலே தங்கி உள்ளது. அதன் விளைவுகளை ஆட்சியாளர்கள் பொறுப் பேற்க வேண்டும்" எனும் தொனியில் பேசி இருப்பது மதவாத வன்முறைக்கு தொடர்ந்தும் சிங்கள பௌத்தர்களை அணி திரட்டுவதாகவே உள்ளது. இதனை கட்டுப்படுத்தக்கூடிய நிலை யில் ஆட்சியாளரும் இல்லை. ஏனெனில் அதற்கு பின்னால் நின்று இவர்களும் ஆட்சி செய்கின்றார்கள். தொடர்ந்தும் ஆட்சி செய்ய விரும்புகின்றார்கள்.

இந்நிலையில் தேசிய மக்கள் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன் றத் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியவர்களும், இவர்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்துபவர்களும் சட்ட விரோத விகாரை மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள மடாலயம் விடயத்தில் மக்களின் மன நிலையில் நின்று தமது கருத்தை வெளிப்படுத்தி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

அதற்கு வடக்கு கிழக்கு தமிழர்கள் விரும்பும் சாதகமான பதில் கிடைக்காதவிடத்து உள்ளூராட்சி மன்ற தேர்தல் போட்டியில் இருந்து விலகவும் முடிவெடுக்க வேண்டும். தொடர்ந்து வடக்கு கிழக்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஏனைய தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு நாடாளு மன்றில் அடுத்த கட்ட நகர்வை அவசரமாக முன்னெடுக்கவும் வேண்டும்.

தமக்கான சாதகமான தெளிவான அவசரமான பதில் அரசாங் கத்திலிருந்து கிடைக்கவில்லையேல் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் தமது ஆதரவினை எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் விலக்கிக் கொள்வதோடு தாம் விரும்பும் தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் மாற்று கட்சிக்கு அளித்து தமிழர் களின் எதிர்கால அரசியலை பலப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றோம்.

தற்போதும் பேரினவாத சிங்கள பௌத்த அரசு கட்டமைப் பிலேயே நம்பிக்கை வைத்து அதனையே தொடரும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிட்ட போவதில்லை என்பதை கருத்தில் கொண்டு வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் தமிழர் தேசம், தேசியம் என்பதை அடிப் படையாகக் கொண்டு இணைந்து உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றி தமிழர்களின் அரசியல் இருப்பை உறுதி செய்து மக்களின் நம்பிக்கையை தக்க வைக்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தமிழ் கட்சிகள் பலமாக ஒன்றிணையக் கூடாது என்பதே பேரின வாத கட்சிகளினதும் அக் கட்சிகளோடு ஒட்டி அரசியல் செய்யும் தமிழ் ஒட்டுண்ணி மற்றும் புல்லுருவி அரசியல்வாதிகளிலும் நிலைப்பாடாகும். இது தோற்கடிக்கப்பட வேண்டும். எனவே சட்ட விரோத தையிட்டி மற்றும் மடாலயம் தொடர்பில் இதுவரை கொண்டிருக்கும் பிரிவினைவாத, கட்சி மைய அசமந்த அரசியல் நிலைப்பாட்டை தவிர்த்து தொடர்ச்சியாக போராட் டத்தை முன்னெடுக்க அரசியல் கட்சிகளும் சமூக அமைப் புகளும் கூட்டு சேர்வதோடு சமய அமைப்புகளும் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் கருதி தமது முழுமையான ஆதரவை வெளிப்படையாக தெரிவிக்க முன்வருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.








வெளிவந்துவிட்டது
உலக
வணிகம்
ULAGA VANIKAM
2025
BUSINESS DIRECTORY
www.ulagavanikam.ca
விளம்பரமின்றி வியாபாரமில்லை
தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்
www.ulagavanikam.ca
437-345-4203



# தமிழீழ விடுதலை வரலாற்றில் ஏப்ரல்



### பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது

18.04.1958 அன்று சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவிற்கும், தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவிற்கு மிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமான பண்டா-செல்வா ஒப்பந்தம் பண்டாரநாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது.







### தந்தை செல்வா நினைவு நாள் –26.04.1977

தமிழரசுக் கட்சியின் நிறுவனரும், தமிழினத்தின் உரிமைகளை அகிம்சை வழிமுறை மூலம் பெற்றுவிடத் துடித்த தலைவர் கட்சிக்காகவும், இனத்திற்காகவும் அளப்பரிய தியாகங்களைச் செய்தவர் தந்தை செல்வா (எஸ்.ஜே.வி. செல்வநாயகம், பிறப்பு: 31.03.1898 - ஈப்போ, மலேசியா) அவர்களின் நினைவு நாள்.

### பஸ்தியாம்பிள்ளையும் அவரது அணியினரும் அழிப்பு



பஸ்தியாம்பிள்ளை

தமிழ் இளைஞர் பலரை சித்திரவதை செய்வதில் முன்னிலையில் நின்ற வரும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டவருமான சிறீலங்கா காவல்துறை ஆய்வாளர் பஸ்தியாம்பிள்ளை தலைமையிலான பொலிஸ் அணியினர் முருங்கன் பகுதிக்கு அருகே மடு றோட் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமொன்றை 07.04.1978 அன்று சுற்றிவளைத்தனர். மாவீரர் லெப்.செல்லக்கிளி தலைமையிலான விடுதலைப் புலிகள் சமயோசிதமாக பஸ்தியாம்பிள்ளை குழுவினரை மடக்கி அவர்களைத் தாக்கியழித்து, அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

### தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது அறிக்கை

25.04.1978 அன்று முதன் முதலாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்திற்கும் உரிமை கோரி பத்திரிகைக் குறிப்பு (Press Release) வெளியிடப்பட்டது.

### மட்டக்களப்பு பட்டித்திடல் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டித்திடல் கிராமத்தில் சிறீலங்காப் படைகளால் 26.04.1981 அன்று 16 தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர்.



### அரச செயலகத் தகர்ப்பு

02.04.1983 அன்று யாழ் மாவட்ட அமைச்சராக இருந்த விஜயக்கோன் தலைமையில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது சம்மந்தமான உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு நடைபெறுவதாக இருந்தது. கூட்டம் நடைபெறுவதற்கு சில மணித்துளிகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதல் அணியினரால் செயலகக்கட்டடம் தகர்த்தழிக்கப்பட்டது.

### இராணுவத் தொடரணி மீதான அழித்தொழிப்புத் தாக்குதல்

சுண்ணாகம், தெல்லிப்பளை பகுதியில் தமிழ் மக்கள் மீது படுகொலைகள் புரிந்த சிறீலங்கா கஜபாகு றெஜிமெண்டைச் சேர்ந்த இராணுவ வண்டி மீது மீது 09.04.1984 விடுதலைப் புலிகளின் படையணிகள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்து கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இராணுவத் தொடரணி முற்றாகச் சிதைக்கப்பட்டது 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரின்றக் வண்டியொன்று முற்றாகச் சிதைக்கப்பட்டது.




### யாழ் அடைக்கலமாதா ஆலயத்தின் மீது அரச படைகளின் தாக்குதல்

சிறீலங்கா அரசபடைகள், யாழ் கத்தோலிக்க சமூகத்தின் கலாச்சாரத்தோடு பின்னிப்பிணைந்த அடைக்கலமாதா ஆலயத்தின் மீது 09.04.1984 அன்று றொக்கட் தாக்குதலை நடத்தியதில் ஆலயம் பலத்த சேதமடைந்தது.

### யாழ் நகரில் தமிழ் மக்களின் எழுச்சி

10.04.1984 அன்று சிறீலங்கா அரசு தனது இனவாத நலன்களுக்காக யாழ்நகரில் அமைந்திருந்த பௌத்த ஆலயமும், சிங்களப்பாடசாலையும் எழுச்சி கொண்ட தமிழ் மக்களால் தகர்க்கப்பட்டன.

### பருத்தித்துறை காவல் நிலையத் தகர்ப்பு

கப்டன் லாலாரஞ்சன் தலைமையில் திரண்ட பொதுமக்களாலும், புலிவீரர்களாலும் பருத்தித்துறை காவல் நிலையம் தகர்க்கப்பட்டது.

### யாழ் காவல் நிலையத் தகர்ப்பு

நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த யாழ் காவல்நிலையம் கேணல் கிட்டண்ணாவின் வழிநடத்தலில் 1985.04.10 அன்று தகர்க்கப்பட்டது.







### மூத்த உறுப்பினர் கப்டன் லிங்கம் வீரச்சாவு



புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான கப்டன் லிங்கம் ரெலோ தேசத்துரோகிகளுடனான மோதலின்போது 29.04.1986 அன்று வீரச்சாவடைந்தார். வரலாற்றுப் புகழ்மிக்க திருநெல்வேலித் தாக்குதல் உட்பட விடுதலைப் புலிகளால் ஆரம்பகாலங்களில் இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களில் இவர் பங்குகொண்டிருந்தார்.

### அன்னை பூபதி அவர்களின் நினைவு நாள் – 19.04.1988

ஓர் இனத்தின் அரசியல் சுபீட்சத்திற்காக ஆக்கிரமிப்பு நாட்டிற்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டம் நடாத்தி உயிர் நீத்த உலகின் முதற் பெண்மணி அன்னை பூபதி (கணபதிப்பிள்ளை பூபதி, பிறப்பு: 03.11.1932 - கிரான்) அவார்.



## திம்புப் பேச்சுவார்த்தை ஆரம்பம்

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையே பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை 10.04.1985 அன்று ஆரம்பமாகியது. சிறீலங்காவின் நயவஞ்சகத்தால் இப்பேச்சுவார்த்தை முயற்சி குழம்பியது.



## மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பம்

சமாதான முயற்சிகள் எப்பயனுமற்று தொடர்ந்தவேளை, சந்திரிகா அரசுடன் செய்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக தேசியத் தலைவர் அவர்கள் அறிவித்த 19.04.1995 அன்று விடுதலைப் புலிகளின் கடற்கரும்புலிகளால் முதலாவது தாக்குதல் திருமலைத் துறை முகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சிறீலங்காக் கடற் படையின் சாங்காய் வகையைச் சேர்ந்த இரு பீரங்கிக் கப்பல்கள் அழிக்கப்பட்டன.

## மூன்றாம் கட்ட ஈழப்போர்: திருமலையில் கரும்புலித் தாக்குதல் – 19.04.1995

சமாதான பேச்சுவார்த்தைகள் எப்பயனுமற்று தொடர்ந்தவேளை சந்திரிக்காவுடன் செய்யப்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக அறிவித்து தலைவர் போரை பிரகடனப்படுத்திய பின் புலிகள் நிகழ்த்திய முதலாவது தாக்குதலில் இவர்கள் வீரச்சாவடைந்தனர். திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி சிங்கள படையின் சாங்காய் வகையைச் சேர்ந்த சூரயா, ரணசுறு பீரங்கிக் கப்பல்கள் இரண்டை மூழ்கடித்த கரும்புலித் தாக்குதலில் வீரவரலாறாகிய நான்கு கரும்புலிகளான மேஜர் கதிரவன் (கோவிந்தன் சிவராசா, பிறப்பு: 26.07.1963 - பரந்தன்), மேஜர் தணிகைமாறன் (அன்ரனி பெனடிற்க், பிறப்பு: 28.06.1970 - யாழ்), மேஜர் மதுசா (முருகேசு இராஜலட்சுமி, பிறப்பு: 25.08.1974 -திருகோணமலை), கப்டன் சாந்தா (விஜயதேவி சிவசுப்பிரமணியம், பிறப்பு: 25.08.1973 -புங்குடுதீவு) ஆகியயோர் அடங்குவர்.









திருக்கோணமலைத் துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்ட 'சூரயா' – அதிவேகப் பீரங்கிக் கப்பல்.


திருக்கோணமலையில் மூழ்கடிக்கப்பட்ட 'ரணசுறு' – அதிவேக பீரங்கிக் கப்பல்.

## தமிழர் மீது சந்திரிகா அரசினால் பொருளாதாரத்தடை விதிப்பு

சந்திரிகா அரசினால் 1995.04.20 அன்று தமிழ்ப் பகுதிகளுக்கான பொருளாதாரத்தடை குறித்து 867/12 என்ற இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் 21 பொருட்களுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டது.

## யாழ் வான்பரப்பில் 2 அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

தமிழீழ விடுதலை புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் 28.04.1995 அன்று அவ்ரோ விமானம் பலாலித் தளத்தினுள் சுட்டு வீழ்த்தப்பட்டது. வான்படையின் உயர் அதிகாரிகள் பலர் உட்பட 40 படையினர் கொல்லப்பட்டனர். மறுநாள் இன்னொரு அவ்ரோ விமானம் நவக்கிரியில்




சுட்டுவீழ்த்தப்பட்டது இதில் பயணம் செய்த 50 வரையான படையினர் கொல்லப்பட்டனர்.

## சிறீலங்கா கொழும்புத் துறைமுகத்திற்குல் கரும்புலித் தாக்குதல் – 12.04.1996

சிங்களப் பேரினவாத அரசு தமிழ்மக்கள் மீது நடாத்தும் இனப்படுகொலைக்கு வேண்டிய ஆயுத தளபாடங்களை இறக்கும் சிறீலங்கா கொழும்புத் துறைமுகத்திற்கு ஓர்பெரும் அடி கொடுத்தனர் கரும்புலிகள். சிங்களத்தின் இதயப்பகுதியில் உச்ச பாதுகாப்பின் மத்தியில் 09 கடற்கரும்புலிகள் சிங்களத்தை அதிரவைத்தனர்.

இவ் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட வரலாற்று சாதனைமிகு கரும்புலித் தாக்குதல் அணித் தலைவராக பங்கேற்ற கடற்கரும்புலி லெப். கேணல் ரதீஸ் (அருமச் சந்திரன் செந்தில்குமார், பிறப்பு: 01.08.1974 - கந்தர்மடம், வேம்படி -யாழ்ப்பாணம்), இவருடன் கரும்புலிகளான மேஜர் பொய்யாமொழி (விசுவாசம் டானியல், பிறப்பு: 23.05.1971 - திருமலை), மேஜர் ஜனார்த்தனன் (சிற்றம்பலம் கிருஸ்ணதாஸ் - பிறப்பு: 21.12.1971 - காங்கேசந்துறை),





மேஜர் பரன் (நாகேந்திரன் தங்கராசா, பிறப்பு: 25.09.1975 - பருத்தித்துறை), மேஜர் ரவாஸ் (திருச்செல்வம் கிளமென்ற், பிறப்பு: 28.08.1975 - சக்கோட்டை, அல்வாய் மேற்கு), மேஜர் ரதன் (வேலுப் பிள்ளை சுரேஸ்ராஜன், பிறப்பு: 23.12.1972 - திருமலை),





கப்டன் சுபாஸ் (மாரிமுத்து வசந்தகுமார், பிறப்பு: 28.01.1974 - திருமலை), கப்டன் மதனி (இராசரத்தினம் சுமதி, பிறப்பு: 14.04.1975 - வெற்றிலைக்கேணி), கப்டன் விக்கி (கணபதிப்பிள்ளை தெய்வ நந்தினி, பிறப்பு: 20.11.1975 - தாளையடி, மருதங்கேணி வடக்கு)





ஆகியோரின் வீரவணக்க நாள்.

## கொக்குளாய் கடற்பரப்பில் கடற்கரும்புலித் தாக்குதல் – 18.04.1998

திருகோணமலையிலிருந்து கொக்குளாய் வரையான கடற்பரப்பில் சிறீலங்கா இராணுவத்திற்கும் கடற்புலிகளுக்கும் ஏற்பட்ட கடும் சமரின்போது கரும்புலித்தாக்குதலினை மேற்கொண்டு கப்டன் ஈழவேந்தன் (ஆறுமுகம் விரசிங்கம், பிறப்பு: 15.03.1978 -சுழிபுரம், கப்டன் பூங்குழலி (சாமிநாதன் சின்னமலர், பிறப்பு: 08.08.1976 - நெடுந்தீவு) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.




## ஆனையிறவுப் பெருந்தள மீட்பு வரலாற்று நிகழ்வு



தமிழீழ தேசத்தில் 240 வருட காலமாக அடிமைச் சின்னமாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத்தலில் 22.04.2000 அன்று ஓயாத அலைகள் - 03 படையணிகளால் மீட்கப்பட்டது. 240 சதுர கிலோ மீற்றர் பரந்திருந்தும் 15000 இராணுவத்தினரை கொண்டிருந்தும் யாழ் குடாநாட்டின் வாசலில் பெரும் தடைகல்லாக இருந்ததுமான இப்படைத்தளம் மீட்கப்பட்டதானது தமிழர்களின் விடுதலை வரலாற்றில் வெற்றியின் மைல்கல்லாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட இப் பெருந்தள தாக்குதலில் வெற்றிக்கு வித்தாக 35 போராளிகள் விரச்சாவடைந்தனர்.






## 08.04.2002 – யாழ் செல்லும் புலிகளும்: யாழ். கண்டி வீதி திறப்பும்

தமது ஆக்கிரமிப்பை உறுதிப்படுத்த வன்னியை ஊடறுத்து யாழ் குடாநாட்டுக்கு பாதையமைக்க சிங்கள அரசு மேற்கொண்ட ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை முறியடித்தனர் புலிகள். இது புலிகளின் இராணுவ வெற்றி சிங்கள் ஆக்கிரமிப்பு நோக்கிலான முயற்சியை தோற்கடித்த விடுதலைப்புலிகள் சமாதான முயற்சி வாயிலாக மக்களின் போக்குவரத்துக்கு பாதை திறந்தனர். அப் பாதை வழியே யாழ் சென்ற புலிவீரர்கள் மக்கள் வெள்ளம் அன்புப் பெருக்கில் ஆரவாரித்து வரவேற்றது. இது புலிகளின் அரசியல் வெற்றி.










## தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் சர்வதேச ஊடக வியலாளர் சந்திப்பு -10.04.2002

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாரகன் அவர்கள் 10.04.2002 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் 700-ற்கும் மேற்பட்ட செய்தி யாளர்களை சந்தித்து சுமார் இரண்டரை மணி நேரம் செய்தியாளர் மாநாட்டை நடத்தியிருந்தார். அங்கே பலதரப்பட்ட கேள்விகளுக்கும் அவர் விரிவான பதில்களை வழங்கியிருந்ததுடன் சமாதான முயற்சிகள் பற்றியும் ஊடகவியலாளர் தொடுத்த வனாக்களுக்கு விடையளித்தார்.







## மாமனிதர் சிவராம் (தராகி) நினைவு நாள் – 29.04.2005

சிவராம் இனப்பற்றும் நேர்மையும் துணிச்சலும் நிறைந்த ஊடகப்போராளியும் இராணுவ ஆய்வாளருமாவார். சிங்கள பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார். 29.04.2005 அன்று கடந்தி கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். சிவராம் (தர்மரத்தினம் சிவராம், பிறப்பு: 11.08.1959 – மட்டகளப்பு) அவரது நற்பணிகளைக் கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் என்ற அதியுயர் தமிழீழத் தேசிய விருதை வழங்கி கௌரவித்தார்.




## லெப் கேணல் கலையழகன் வீரவணக்க நாள் – 18.04.2007

விடுதலைப் புலிகளின் பல்துறைசார் போராளியாக நிகழ்ந்த லெப். கேணல் கலையழகன் (சிவபாதசுந்தரம் ஞானசீலன், பிறப்பு: 02.09.1976 - யாழ்) அவர்கள்பல முக்கிய தாக்குதலுக்கு முன்னின்று செயற்பட்டவர். அனைத்துலகத் தொடர்பகத் துணைப் பொறுப்பாளராக செயற்பட்டு 18.04.2007 அன்று முல்லை மாவட்டத்தில் நிகழ்ந்த எதிர்பாராத வெடிவிபத்தின் போது வீரச்சாவடைந்தார்.



## ஆனந்தபுரம் எதிரிக்கு மட்டுமல்ல இந்த உலகிற்கும் தமிழரின் வீரத்தை உணர்த்திய இடம் –04.04.2009

முல்லைத்தீவு மாவட்டம் ஆனந்தபுரம் பகுதியில் வல்லாதிக்க அரசுகளின் உதவியுடன் சிங்களப்படைகள் மேற்கொண்ட (இரசாயன நச்சுக்குண்டு) தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மூத்த தளபதிகளான பிரிகேடியர்களான கடாபி, தீபன், மணிவண்ணன், துர்க்கா, விதுசா மற்றும் கேணல்களான நாகேஸ், அமுதா, தமிழ்ச்செல்வி, ஐயனார், சேரலாதன், அகிலேஸ், அன்ரன் உட்பட பலநூறு மாவீரர்களின் வீரவணக்க நாள்.





# கூர்ஸ்க்கில் அகலக் கால் வைத்து தோல்வியில் பின்வாங்கும் உக்ரைன்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

16.03.2025




**இரண்டாம் உலகப் போரில் சோவியத் படைகள், நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாக தோற்கடித்த போரே கூர்ஸ்க் (முரசளம) போராகும். இதே களத்தில் தற்போது நேட்டோ ஆதிக்க விஸ்தரிப்பை எதிர்த்து நிற்கும் ரஷ்யா, உக்ரைன் படைகளை சரணடைய வைத்துள்ளது.**

கூர்ஸ்க் போர் நடவடிக்கையிலிருந்து உக்ரைன் பெற்ற ஆரம்ப கால வெற்றிகள் அனைத்தையும் தற்போது இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உக்ரைனிய வீரர்கள் சுற்றி வளைக்கப்பட்டாலோ அல்லது கடுமையான துப்பாக்கிச் சூட்டின் கீழ் பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலோ அது பெரும் உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிடும்.




### கூர்ஸ்க்கில் பின்வாங்கும் உக்ரைன்:

கடந்த சில வாரங்களாக கூர்ஸ்கில் ஏற்பட்ட தோல்வி, தொடர்ச்சியான பலத்த அடிகளுக்குப் பிறகு ஜெலென்ஸ்கி அரசின் மீதான போர் நிறுத்த அழுத்தத்தை தீவிரப்படுத்தி உள்ளது.

கள நிலவரப்படி ரஷ்யாவின் கூர்ஸ்க் போர்க்கள பகுதியில் உக்ரேனியப் படைகள் கடுமையான பின்னடைவை சந்தித்து உள்ளன. அங்கு அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் கைப்பற்றி ஏழு மாதங்களுக்கும் மேலாக கடுமையான சண்டையில் அதை ஓரளவு தக்க வைத்துக் கொண்டனர்.

கூர்ஸ்க் பிராந்தியம் (Kursk) உக்ரைனின் சுமி பகுதியை எல்லையாகக் கொண்ட மேற்கு ரஷ்யாவின் ஒரு பகுதியாகும். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி, உக்ரைன் துருப்புக்கள் ரஷ்ய எல்லையைத் தாண்டிச் சென்று 1,376 சதுர கிமீ (530 சதுர மைல்) பரப்பளவு கொண்ட ஒரு பகுதியைக் கைப்பற்றியது.

இதுவே உக்ரேனிய போரின் மிகப்பெரிய ஆச்சரியமிக்க அதிரடியாக ஒன்றாக உருவெடுத்தது. அதன் பிறகு சுமார் 100 நகரங்கள் மற்றும் கிராமங்களை உள்ளடக்கிய பிராந்தியத்தை உக்ரைன் கைப்பற்றியது.

தற்போது ரஷ்யப் படைகள் அந்த நிலத்தின் பெரும்பகுதியை மீண்டும் கைப்பற்றியுள்ளன. மாஸ்கோ ஆதரவு போர் வலைப் பதிவர்கள் உக்ரேனிய துருப்புக்கள் சுற்றி வளைக்கப்படும் அபாயத்தில் இருப்பதாகக் கூறுவதை உக்ரைனிய உயர்மட்டத் தளபதிகள் மறுத்துள்ளனர்.

### உக்ரைனுக்கு கூர்ஸ்க்கின் முக்கியம்:



ரஷ்யா உக்ரைனில் கைப்பற்றிய நான்கு பிராந்தியங்களை விடுவிக்க பேரம் பேசும் அளவுக்கு கூர்ஸ்க் இருந்தது.

இந்த நடவடிக்கை 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து உக்ரைனுக்கு அதன் மிகப்பெரிய வெற்றியை வழங்கியது எனலாம்.

அத்துடன் ரஷ்யாவை எதிர்கொள்ளும் ஒரு பெரிய மன உறுதியை உக்ரைனுக்கு அளித்தது. ரஷ்யாவின் பாரிய படையெடுப்பைத் தடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, உக்ரைன் அதன் சொந்த படையெடுப்பின் மூலம் அதன் எதிரியை திகைக்க வைத்தது.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நீதியை மீட்டெடுப்பதுடன், இப்போரை சாதாரண ரஷ்யர்களிடம் கொண்டு வருவது எனவும் நம்பிக்கை தெரிவித்தார். கூர்ஸ்க் கைப்பற்றல் நடவடிக்கை கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் முன்னேற்றங்களை மெதுவாக்கும் என்றும் உக்ரைன் நம்பியது.

கூர்ஸ்க்கின் பாதுகாப்பிற்கு ரஷ்யா துருப்புக்களை திசைதிருப்ப கட்டாயப்படுத்தியது. ஆனால் இது நடக்கவில்லை என்றாலும், கிழக்கில் ரஷ்யாவின் வெற்றிகள் மட்டுப்படுத்தப்பட்டன.

இறுதியாக, ஜெலென்ஸ்கி கூர்ஸ்க்கை ஒரு பேரம் பேசும் பொருளாகக் கருதினார். கடந்த மாதம் ரஷ்ய கட்டுப்பாட்டின் கீழ் உக்ரேனிய பிரதேசத்திற்கு வர்த்தகம் செய்யப்படலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த பெப்ரவரி 28 அன்று டிரம்புடனான அவரது பேரழிவுகரமான வெள்ளை மாளிகை சந்திப்பு நடைபெற்றது. தற்போது சாத்தியமான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அவரது கையை பலவீனப்படுத்தும் வகையில் கூர்ஸ்க் தோல்வி அமையவுள்ளது.

### உக்ரைனின் ஊடுருவல் :

கடந்த வருடம் ஆகஸ்ட் 6, 2024 அன்று, உக்ரைனின் ஆயுதப் படைகள் ரஷ்யாவின் கூர்ஸ்க் பகுதியில் ஊடுருவி, ரஷ்ய ஆயுதப் படைகள் மற்றும் ரஷ்ய எல்லைக் காவல்படையினருடன் மோதின. ரஷ்யாவின் கூற்றுப்படி, டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களின் ஆதரவுடன் முதல் நாளில் குறைந்தது 1,000 உக்ரைனிய துருப்புக்கள் எல்லையைக் கடந்தன என்று கூறப்படுகிறது.

அதன் பிறகு கூர்ஸ்க் பகுதியில் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. மேலும் ரஷ்ய படைகள் அந்தப் பகுதிக்கு விரைந்த போதும் உடனடியாக உக்ரைனிய படையினரை வெளியேற்ற முடியவில்லை.

ஆகஸ்ட் 10 அன்று, கூர்ஸ்க், பெல்கோரோட் மற்றும் பிரையன்ஸ்க் பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை ரஷ்ய அதிகாரிகள் தொடங்கினர்.

ஆயினும் முதல் வார இறுதியில், உக்ரைன் இராணுவம் 1,000 கிமீ (390 சதுர மைல்) ரஷ்ய பிரதேசத்தைக் கைப்பற்றியதாகக் கூறியது. அதே நேரத்தில் உக்ரைன் படைகள் சில குடியிருப்புகளைக் கைப்பற்றியதாக ரஷ்ய அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

பின்னர் ஆகஸ்ட் 15 அன்று உக்ரைன் தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கு ஒரு இராணுவ நிர்வாகத்தை நிறுவியது. அக்டோபர் தொடக்கத்தில் உக்ரைனின் முன்னேற்றம் நின்றுவிட்டது. ஆனால் அக்டோபர் மற்றும் நவம்பர் முதல் பாதியில், ரஷ்யாவின் தாக்குதலின் போது உக்ரைன் ஆக்கிரமித்துள்ள பிரதேசத்தில் பாதியை ரஷ்யப் படைகள் மீட்டெடுத்தன.

அண்மையில் மார்ச் 11, 2025 அன்று, ரஷ்ய மற்றும் வட கொரியப் படைகளின் எதிர் தாக்குதலின் விளைவாக பெரும்பாலான உக்ரைனியப் படைகள் கூர்ஸ்க் நகரில் இருந்து பின்வாங்கி வெளியேறி வருகின்றன.

### 2ம் உலகப் போரில் கூர்ஸ்க் போர்க்களம்:



இரண்டாம் உலகப் போரில் சோவியத் படைகள், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துடன் கூட்டு சேர்ந்து, நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாக தோற்கடித்த போரே கூர்ஸ்க் (Kursk) போராகும்.

கூர்ஸ்க் டாங்கி போர் (Battle of Kursk) என்பது 1943 கோடையில் தென்மேற்கு ரஷ்யாவில் நாஜி ஜெர்மனி யுடன் - சோவியத் யூனியனின் படைகளுக்கு இடையேயான இரண்டாம் உலகப் போரின் கிழக்கு முன்னணிப் போராகும்.

இதன் இறுதி விளைவாக சோவியத்க்கு வெற்றி கிடைத்தது. கூர்ஸ்க் போர் என்பது போர் வரலாற்றில் மிகப்பெரிய (Battle of Tanks) டாங்கிப் போராகும். இப்போருக்கு முன்னர் நடந்த ஸ்டாலின்கிராட் போருடன், ஐரோப்பியப் போரின் அரங்கில் குறிப்பிடப்பட்ட இரண்டு திருப்புமுனைகள் ஏற்பட்டன.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்க்களமே தற்போது ரஷ்யாவும் உக்ரைனும் முட்டி மோதுகின்றன. தாயும் சேயுமாக வாழ்ந்த இரு அயல் நாடுகள் மேற்குலகின் சூழ்ச்சி வலையில் சிக்கியுள்ளன.

நேட்டோவின் ஆதிக்க ஆக்கிரமிப்பை முறியடிக்க ரஷ்யா தொடர்ந்து போராடி வருகிறது. ஆனால் இந்த போரில் உக்ரைன் பலிக்கடாவானது அநாவசியமானதே. தேவையற்ற போரை எதிர்கொள்ள உக்ரைன் திராணியற்று தவிக்கிறது.

# மக்னஸ்கி சட்டத்தின் கீழான தடையை வரவேற்கின்றோம்

## சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா

26.03.2025

போர்க் குற்றவாளிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை நபர்கள் மீது பிரித்தானியா மக்னஸ்கி சட்டத்தின் கீழான தடையை அறிவித்துள்ளமையை வரவேற்கின்றோம் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் போர்க்கால இராணுவத் தளபதிகள் மூவர் மீதும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் துணை இராணுவ குழுத் தலைவர் ஒருவர் மீதும் மக்னஸ்கி சட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்த ஆச்சரியமான முடிவினை பாதிக்கப்பட்டவர்களும் உலகளாவிய மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் வரவேற்றுள்ளனர். இந்த அறிவிப்பு குறித்து இப்போது எனது உணர்வுகள் எப்படி உள்ளன என்பதை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாதுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், உள்நாட்டுக்குள் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையினை நான் இழந்துகொண்டிருந்தேன். ஆனால், இவ்விடயங்களுக்காக போராடிவரும் ஒரு சட்டவாளராகிய எனக்கு இது ஒரு நம்பிக்கைக் கீற்றினைத் தந்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் சிறிய சந்தோஷத்தினை இது கொடுக்கும். எமது போராட்டத்தினை நாங்கள் கைவிடப்போவதில்லை என்று வட இலங்கையைச் சேர்ந்த மனித உரிமைகள் தொடர்பான சட்டவாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு போர்க்குற்றவாளிகளும் கொலை, காணாமல் போகச்செய்தல் போன்ற பாரதூரமான வன்முறைகளில் ஈடுபட்டவர்களும் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படுதல் வேண்டும்.

இந்தச் செய்தியானது என்னைப் போன்ற பாதிக்கப்பட்டவர்களுக்கும் எமது குடும்பங்களுக்கும் நீதிக்காக தொடர்ந்தும் போராடுவதற்கான சிறு நம்பிக்கையைக் கொடுக்கிறது என்று இலங்கையிலிருந்து தப்பிப் பிழைத்து வெளிநாட்டில் வசிக்கும் பாதிக்கப்பட்ட ஒருவர் கூறினார்.

சசீந்திர சில்வா அத்துடன், இந்த ஆண்டு ஓய்வுபெற்ற ஜெனரல் சவேந்திர சில்வா இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் போது, சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவப் படைப்பிரிவு ஒன்றுக்குத் தலைமைதாங்கி வழிநடத்தியதாக பிரித்தானிய அரசாங்கம் இணையத்தில் வெளியிட்ட தடைப்பட்டியலில் கூறப்பட்டுள்ளது.

படுகொலைகளைச் செய்வதற்கு சவேந்திர சில்வா கட்டளை பிறப்பித்ததாக நேரடியாக குற்றச்சாட்டியுள்ளது. குறிப்பாக சரணடைய முயன்ற விடுதலைப்புலித் தலைவர்கள் கொல்லப்பட வேண்டுமென ஆணை பிறப்பித்ததுடன், போரின் இறுதி நாட்களில் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை இவரது தலைமையிலான படையினர் கொலை செய்த காலப்பகுதியில் இவர் களமுனையிலும் இருந்துள்ளார்.

அது 'வெள்ளைக்கொடிச் சம்பவம்' என்று அறியப்படும் சம்பவத்தினை குறிக்கிறது. இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை உறுப்பினர்கள் சரணடையுமாறு தூண்டப்பட்டு, நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டார்கள்.

ஐ.நா. மேற்கொண்ட விசாரணையும், இத்தலைவர்கள் (ஒருவருடைய மனைவி உட்பட) அங்கிருந்த மூத்த இராணுவத் தலைமைப்பீடத்தின் கட்டளையின் கீழ் படைவீரர்களால் படுகொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதென முடிவுசெய்துள்ளது.

இச்சரணடைவு தொடர்பில் 2015ஆம் ஆண்டில் முதன்முதலாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் வெளிக்கொண்டுவந்ததுடன், 2019இல் சவேந்திர சில்வா தொடர்பாக ஆவணம் ஒன்றினையும் வெளியிட்டது.

2021ஆம் ஆண்டில் பிரித்தானியாவுக்கும் கனடாவுக்கும் விபரமான தடைக்கோவைகளையும் இது அனுப்பி வைத்திருந்தது.

'பாதிக்கப்பட்டவர்களதும் அவர்களது குடும்பங்களதும் இரத்தமும் வியர்வையும் கண்ணீரும் வீணாகிப்போகவில்லை. போர்க்குற்றவாளிகளை அவர்களது கொடூர அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறவைப்பதனை நோக்கிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பிரித்தானிய அரசாங்கத்துக்கு நன்றிகள்' இவ்வாறு போரிலிருந்து உயிர் தப்பி தற்போது பிரித்தானியாவில் வாழும் தமிழர் ஒருவர் கூறினார்.




ஜகத் ஜெயசூரியவுக்கு எதிராக 2017ஆம் ஆண்டில், உலகளாவிய அதிகார வரம்பு வழக்குகளை இலத்தீன் அமெரிக்காவில் தாக்கல் செய்தது.

சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் பெயர்போன ஜோசப் முகாம் எனப்படும் இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக இருந்தமை தொடர்பிலேயே இவர் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

அந்நேரத்தில் இலங்கையின் இராஜதந்திரியாக இருந்த அவர், இதன் விளைவாக பிரேஸிலிலிருந்து தப்பி, இலங்கைக்கே திரும்பியிருந்தார். 2019ஆம் ஆண்டு, இரண்டு முறை இவர் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, சர்வதேச நீதிக்கான அவுஸ்திரேலிய மையத்துடன் இணைந்து, 2020ஆம் ஆண்டு, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் இவர் தொடர்பில் அவுஸ்திரேலிய மத்திய பொலிசாருக்கு 5 முறைப்பாடுகளைச் செய்தது.

எனினும், இலங்கைக்கு உள்ளேயே விசாரணை நடைபெறுவதையே தாம் விரும்புவதால் இம்முறைப்பாடு தொடர்பில் தாம் விசாரணை நடத்தமாட்டோமென 2022ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பொலிஸ் துறை தெரிவித்தது.

அதே ஆண்டில், ஜெயசூரிய தொடர்பான 100 பக்கங்களைக் கொண்ட தடை ஆவணம் ஒன்றினை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தது. பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ஒரு ஆவணத்தினை அனுப்பி வைத்தது.

வசந்த கரன்னகொட போர்க்காலத்தில் கடற்படைத் தளபதியாகவும் - இராஜதந்திரியாகவும் இருந்த வசந்த கரன்னகொடவும் தடைசெய்யப்பட்டுள்ளார். இதர விடயங்களுடன், கிழக்குக் கரையோரத்தில் உள்ள பிரதான கடற்படை முகாமில் நிலக்கீழ் சித்திரவதைக் கூடங்களை வைத்திருந்ததுடன், போர் நடந்த நேரத்திலும், அதற்குப் பின்னரும், பல எண்ணிக்கையிலான மக்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதும் இங்கே நிகழ்ந்தன. தற்போது ஐரோப்பாவில் வாழும், காணாமலாக்கப்பட்டவருடைய ஓர் உறவினர் தெரிவித்தார்.

கடற்படை புலனாய்வுத்துறையால் கடத்தப்பட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்ட பிள்ளையின் தாயார் ஒருவர் கூறும்போது, 'இது மிகவும் நல்ல செய்தி, இது எமக்கு நம்பிக்கையைத் தருகிறது. ஆனால், எங்கள் அரசாங்கத்தை பற்றிய சந்தேகங்கள் எமக்கு இப்போதும் இருப்பதால், நான் நினைப்பதை என்னால் வெளிப்படையாகக் கூறமுடியாது' என்று தெரிவித்தார்.

ஒரு தமிழ் துணை ஆயுதக் குழுத் தலைவரான, "கருணா" என அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனும் தடைசெய்யப்பட்டுள்ளார். 2008ஆம் ஆண்டு கடவுச்சீட்டு மோசடிக்காக பிரித்தானியாவில் இவர் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். அவர் மீது போர்க்குற்றங்களுக்கான விசாரணைகள் நடந்துகொண்டிருந்த போதிலும், அந்நேரத்தில் அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து, இராணுவத்துடன் இணைந்துகொண்ட கருணாவின் படைகள், கட்டாய ஆட்சேர்ப்பு, சிறுவர் ஆட்சேர்ப்பு, கடத்தல், கொலைகள், சித்திரவதை மற்றும் மிரட்டல் ஆகியவற்றில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

'காலதாமதமானாலும் இறுதியில் நீதி கிடைக்கும் என்பதுடன் இப்போர்க்குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படுவார்கள். இவர்கள் இழைத்த கொடிய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து அவர்களால் தப்பமுடியாது என்ற வலுவான செய்தியினை போர்க்குற்றவாளிகளுக்கு இத்தடைகள் வழங்கும்' என சித்திரவதையிலிருந்து உயிர் தப்பிய தமிழர் ஒருவர் கூறினார்.

இத்தடைகள் 2020ஆம் ஆண்டுக்கான பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தடைகளுக்கான ஒழுங்குமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை. பட்டியலிடப்பட்ட தனிநபர்களுக்கு எதிராக நிதி, இயக்குனர் தகுதிநீக்கம் மற்றும் குடிவரவுத் தடைகள் விதிக்கப்படுகின்றன.

பிரித்தானியாவின் தடைப்பட்டியலில் கூறப்பட்டுள்ளதன்படி, நான்கு இலங்கை பிரஜைகள் மீது நிதி மற்றும் பயணத் தடைகள் விதிக்கப்படுகின்றன. இலக்கு வைக்கப்பட்ட சொத்து முடக்கங்கள் என்பதில் பண மற்றும் இதர சொத்துக்களை (சொத்து அல்லது வாகனங்கள்) முடக்குவது மற்றும் அவர்களுக்கு எந்த சொத்துக்களும் கிடைக்கமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவது என்பன உள்ளடங்கும்.

மேலும், தடை செய்யப்பட்ட நபர்கள் இங்கிலாந்தில் நுழையவோ அல்லது வசிக்கவோ முடியாது என்பதுடன் இடைத்தங்கல் உட்பட இங்கிலாந்துக்கு பயண விசா விண்ணப்பமும் மறுக்கப்படும்.

மேலும், நிதித் தடைகளை மீறுவது ஒரு குற்றவியல் குற்றமாகும்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், இப்போர்க்குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்கள். தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவினால் இவர்கள் பற்றிய உண்மை இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வடைந்துள்ளோம். கடந்த ஒரு தசாப்தமாக இவர்களைப் பற்றிய ஆதாரங்களை நாம் தொகுத்து வந்துள்ளோம்.

ஆனால், இவர்களுக்கு எதிரான வாக்குமூலங்களை வழங்கிய பாதிக்கப்பட்டவர்களையும், பல வருடங்களாக அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் நீதிக்காக போராடிவந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்களையுமே இதற்குரிய பெருமை சென்றடைய வேண்டும் என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், இப்போர்க்குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்கள் தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவினால் இவர்கள் பற்றிய உண்மை இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வடைந்துள்ளோம்.

கடந்த ஒரு தசாப்தமாக இவர்களைப் பற்றிய ஆதாரங்களை நாம் தொகுத்து வந்துள்ளோம். ஆனால், இவர்களுக்கு எதிரான வாக்குமூலங்களை வழங்கிய பாதிக்கப்பட்டவர்களையும், பல வருடங்களாக அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் நீதிக்காக போராடிவந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்களையுமே இதற்குரிய பெருமை சென்றடைய வேண்டும் என்றுள்ளது.


ஈகைச்சுடர்
அன்னை
பூபதி
ஏப்ரல் 19 2025
அவர்களின்
37ஆம் ஆண்டு நினைவில்
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
Annai Poopathy Kanapathipillai
கிரான், மட்டக்களப்பு
தமிழீழம்
மண்ணில்: 03.11.1932
ஈகைச்சாவு: 19.04.1988
உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத்
தழுவிக்கொண்ட முதல் பெண்மணி
Annai Poopathy was the first woman to embrace
martyrdom in the fasting struggle for Thamileelam
முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா சிங்களப்படைகளின்
முற்றுகை உடைப்புச்சமரின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரர்களின்
16ஆம் ஆண்டு
வீரவணக்கம்
பிரிகேடியர்
துர்க்கா
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகாமம், யாழ்
(24.03.1971 - 03.04.2009)
பிரிகேடியர்
மணிவண்ணன்
அழகரத்தினம் துசியந்தன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)
பிரிகேடியர்
கடாபி
ஆறுமுகம் விநாயகமூர்த்தி
கொற்றாவத்தை - வதிரி, யாழ்
27.02.1968 - 04.04.2009
பிரிகேடியர்
விதுசா
கந்தையா ஞானபூரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)
பிரிகேடியர்
தீபன்
வேலாயுதபிள்ளை பகீரதகுமார்
கண்டாவளை, கிளிநொச்சி
(08.01.1966 -05.04.2009)
சங்கத்தமிழ்
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் - The Thirst of Tigers is the Homeland of Thamileelam"